பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 26 வியாழக்கிழமை (13.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 321



14 தெருவரையே அபிவிருத்தி



21 மீனவருடன் துப்பாக்கிதாரிகள் சென்றால்தான் தீர்வு



25 சானியா 88

# கூட்டணியின் புது நிர்வாக சபையை ஏற்க முடியாது என்கிறார் சம்பந்தன்

## நிராகரித்துத் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்

*கொழும்பு, ஒக்ரோபர் 13*

**நீதிமன்ற உத்தரவை மீறி பொதுச் செயலாளரான தனது அனுமதியோ அனுசரணையோ இன்றி யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டம் நடத்தித் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய நிர்வாக சபை செல்லுபடியற்றது என்று தமிழரசுக் கட்சியின் தலைவரான இரா. சம்பந்தன் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அறிவித்துள்ளார்.**



தமிழ்ர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைவராக எஸ்.கனகராஜாவும், பொதுச் செயலாளராக வீ.ஆனந்தசங்கரியும் தெரிவு செய்யப்பட்டதுடன் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் புதிய நிர்வாக சபையே சட்டரீதியாகச் செல்லுபடியற்றது என்று இரா. சம்பந்தன் தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றையும் அவர் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில், நல்லூரில் இடம்பெற்ற மாநாடு, கட்சி தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்பதுடன் சட்டவிரோதமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நானே. நீதிமன்றத் தீர்ப்புப்படி நான் அழைப்பு விடுக்காமல் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தையோ மாநாட்டையோ நடத்த முடியாது. இது பற்றிச் சட்டத்தரணி மூலமும்

பக் 27

## துமிந்தவுக்கு வெளிநாட்டில் சிகிச்சை

கொழும்பு, ஒக்.13

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வெளிநாடொன்றில் சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என அரச தரப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

துமிந்த சில்வாவுக்குத் தற்போது சிகிச்சையளித்துவரும் விசேட மருத்துவர்கள் செய்த சிபார்சுக்கமையவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. பெரும்பாலும் சிங்கப்பூரில் மவுண்ட் எலிஸபெத் வைத்தியசாலைக்குத் துமிந்த சில்வாவை மேலதிக சிகிச்சைக்காக அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்படலாமென்றும் அரச தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை,

பக் 28

## சிரேஷ்ட அமைச்சர்கள் மந்திராலோசனை

கொழும்பு, ஒக்.13

முல்லேரியா சூட்டுச் சம்பவத்தையடுத்து அரசுக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதனையடுத்து, சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஒன்று கூடி நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் மந்திராலோசனை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட

பக் 26

## மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார்



யாழ்ப்பாணம், ஒக்.13

மாலைதீவின் தேசிய பாதுகாப்பு அமைச்சின் தொஹாத் இப்ராஹிம் உள்ளிட்ட பலர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் புதன்கிழமை ஒருநாள் விஜயம் மேற்கொண்டனர். மாலைதீவின் இலங்கைக்கான தூதரும், மாலைதீவு இராணுவ அதிகாரிகளும் அமைச்சருடன் இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

குடாநாட்டின் சில இடங்களை இந்தக் குழுவினர் பார்வையிட்டுச் சென்றனர்.

பக் 28

## கொழும்பில் தனித்து செயற்படுவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முடிவு

கொழும்பு, ஒக்.13

கொழும்பு மாநகரசபையில் தனித்து இயங்குவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தேயாகவேண்டும் என்கின்ற நிபந்தனை எதுவும் ஜனநாயக மக்கள் முன்னணிக்குக் கிடையாது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபையின் நிர்வாகத்துக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தல் ஏதாவது ஏற்படுமாயின், ஜனநாயக மக்கள் முன்னணி அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும். அத்துடன், மாநகரசபையின் ஆளும் தரப்புக்குத் தார்மீக ஆதரவு வழங்கவேண்டிய கடமைப்பாடு ஏற்படும் என்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 24 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றியீட்டியது.

கொழும்பு மாநகரசபை ஆட்சியில் அறுதிப் பெரும்

பக் 27

## நீதியான தேர்தல் நடந்தால் பொன்சேகா வெல்வார் என்று கூறினார் சந்திரிகா

### விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு, ஒக்.13

நீதியானதும், நியாயமானதுமான ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்பட்டால் சரத் பொன்சேகா வெற்றிபெறுவாரென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீஷியா புட்டினிஸிடம் தெரிவித்திருந்தார் என 'விக்கிலீக்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடத்திய சந்திப்பொன்று குறித்து அமெரிக்கத் தூதுவர், அமெரிக்க

பக் 27

## துமிந்தவே பாரதவை சுட்டார்; சாரதி பரபரப்பு வாக்குமூலம்

கொழும்பு, ஒக்.13

துமிந்த சில்வாவே தனது கைத்துப்பாக்கியால் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் தலையில் சுட்டார் - என்று கொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மனின் வாகனச் சாரதி பரபரப்பு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

கார்ச் சாரதியான போல சமன் என்றழைக்கப்படும் விய

பக் 27

## போரில் அநாதரவான சிறுவர்களை மன்னாரில் சந்தித்தனர் நல்லிணக்க ஆணைக்குழுவினர்

### சிறுவர் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் பரிதாபங்களை நேரில் அறிந்தனர்

மன்னார், ஒக்.13

இறுதிப் போரில் பெற்றோரை இழந்த மற்றும் தவறவிட்ட சிறுவர்களின் நிலை தொடர்பாக, மன்னாருக்குத் திடீரென வருகை தந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தியது.

மன்னாரில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு நேரில் சென்ற இவர்கள் அங்குள்ள சிறுவர்களுடன் உரையாடினர்.

மன்னார் மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி மைக்கல் கொலினின் உதவியுடன் போரின்போது பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்த சிறுவர்களைப் பராமரித்துவரும் சிறுவர் இல்லங்களுக்குச் சென்ற ஆணைக் குழு அதிகாரிகள் சிறுவர் இல்ல இயக்குநர்களுடன் உரையாடிய

பக் 28




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மழைக்கான கூடுதல் சாத்தியமும் ஏனைய மாவட்டங்களில் 20 வீத சாத்தியமும் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 12 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,604.23↓
மிலங்கா(MPI) 5,905.92↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,590.06 Mn
பங்குகளின் அளவு(No.) 63.92Mn
வியாபாரம்(No.) 12,961
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஆட்டோ றோம் 995.00
நீல் கொம் 63.00
சிங்க புத்திர பைனான்ஸ் 130.00
கென்வீனியன் பூட் 394.00
சாம்சன் இன்ரநஷனல் 164.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஏசியன் அலையன்ஸ் இன்சூரன் 241.00
செலான் மேர்சன்(x) 0.70
நமுனுகல 85.00
சி.டி.ஐ.சி 400.00
சேரண்டிவ் ஹொட்டல் 30.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# அனைத்துலகப் போர்க்குற்ற விசாரணைகள் அவசியம்

## ஆஸி. வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை காட்டம்

கொழும்பு, ஒக்.13

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்த இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியான - சுயாதீனமான சர்வதேச விசாரணை தேவை. இதுதொடர்பில் இலங்கை சுயமான விசாரணையை மேற்கொண்டுவருவது வெட்கத்தனமான செயல்.

- இவ்வாறு சர்வதேச மன்னிப்பு சபை மீண்டும் காட்டமாகத் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தக் கோரிக்கையை சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் சாலில் செட்டி விடுத்துள்ளார்.

இலங்கைப் போர்க் குற்றம் தொடர்பில் இலங்கை சுயமான விசாரணையை மேற்கொண்டு வருவது வெட்கத்தனமான செயல் என்றும் அவர் இதன்போது கடிந்து கொண்டார்.

சுயாதீன விசாரணைக்காக நீண்ட நாள் காத்திருந்த நிலையில் தற்போது சர்வதேச சுதந்திர விசாரணைக்கான நேரம் வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமது கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க ஆஸி. வெளிவிவகார அமைச்சர் கெவின் ரட் உடன்பட்டார் எனவும் செட்டி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச மன்னிப்பு சபையின் இந்தக் கோரிக்கை தொடர்பில் கருத்து எதனையும் கூறமுடியாது என்று இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது. (ம)

# அரச அதிபர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.13

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பாகத் தமிழ் அரச அதிபர்களுக்கும் ஜனாதிபதிக்குமான சந்திப்பு இன்று கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் இடம்பெற உள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தமிழ் அரச அதிபர்கள் ஜனாதிபதியினால் அழைக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட அரசஅதிபர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், மன்னார் மாவட்ட அரச அதிபர் வவுனியா அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆகியோரே இவ்வாறு அழைக்கப்பட்டவராவார்.(ம-15)

# இரணைமடு குளத்து நீரே வடக்கு மக்களுக்குச் சிறந்தது

## மூன்று வருடங்களில் திட்டம் பூர்த்தியாகுமாம்

யாழ்ப்பாணம், ஒக்13

மழை நீரால் சேகரிக்கப்பட்ட இரணைமடு குளத்து நீரே வடபகுதி மக்களுக்கு மிகப் பொருத்தமானதும் ஆரோக்கியமானதுமாகும்.

இந்தத்திட்டத்தினூடாக குடிதண்ணீர் உங்களுக்கு இன்னும் மூன்று வருடங்களில் கிடைக்கும்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் வடக்கு பிரதிப் பொது முகாமையாளர் எந்திரி டுலிப் குணவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார்

நிகழ்கால - எதிர்கால பொது மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் திட்டம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.குடாநாட்டின் 100 வீதமான நிலத்தடி நீர் மக்கள் பாவனைக்கு உகந்தது அல்ல. அதிலும் வல்லிபுரம், வேலணை, குடத்தனை பிரதேச நிலத்தடி நீர் மட்டும் மக்கள் குடிதண்ணீர் பாவனைக்கு மிகச் சிறந்ததாக உள்ளது. விரைவில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து ஆரம்பிக்கும் குடிதண்ணீர் திட்டம் பூநகரி, பளை, கிளிநொச்சி ஊடாக காரைநகர், புங்குடுதீவு வரை கொண்டு செல்லப்படவுள்ளது என்றார்.

வடபகுதியில் மழை நீர் பெரும்பாலும் கடலுக்குள் செல்லுகின்றது. பொருத்தமான தொழிநுட்ப முறையை உபயோகிப்பதன் ஊடாக இதனைக் கட்டுப்படுத்தலாம். நிலத்தடி நீரும் கடலுக்குள் சேர்ந்தவண்ணம் உள்ளது. இதனையும் பொருத்தமான தொழில் நுணுக்க முறை மூலம் கட்டுப்படுத்தலாம் என்றும் கூறினார்.

யாழ்.மாவட்டத்திலும், மன்னார், முல்லைத்தீவு பிரதேசங்களிலும் உள்ள குடிதண்ணீர் எத்தனை வீதம் கல்சியம் படிந்துள்ளது என்பதையும் பரிசோதனை வாயிலாகக் கிடைத்த முடிவுகளை வைத்து விளக்கினார்.

யாழ். குடாநாட்டு குடிதண்ணீர் வள முகாமைத்துவம் எனும் தலைப்பில் நடைபெற்ற மாநாட்டிலேயே இந்த விடயம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. (ம-302)

# கொடுப்பனவுகள்

தென்மராட்சி, ஒக்.13

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கடமையாற்றிய தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் தென்மராட்சி வலய நிதிக்கிளையில் கொடுப்பனவுத் தொகையைப் பெற்று ஆசிரியர்களுக்கு வழங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

# வடக்கில் அரசின் காணிப்பதிவைக் கண்டித்து வவுனியாவில் கூட்டமைப்பு உண்ணாவிரதம்

## 17 ஆம் திகதி நடத்துவது என்று தீர்மானம்

கொழும்பு, ஒக்.13

காணிப்பதிவு என்னும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புச் செயற்பாடுகள் உட்பட வடக்கு, கிழக்கில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை அரசினதும் சர்வதேசத்தினதும் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையில் எதிர்வரும் 17 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வவுனியாவில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் 17 ஆம் திகதி காலை 7மணி தொடக்கம் மாலைவரை இந்த அடையாள உண்ணாவிரதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

* முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைகளை மாற்றி வெலிஓயா என்னும் புதிய பிரதேச செயலாளர் பிரிவை உருவாக்குவதன் மூலம் அந்த மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை மாற்றி இனங்களுக்கிடையில் கசப்புணர்வையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் செயற்பாட்டை உடன் நிறுத்துக.
* போரால் சின்னாபின்னமாக்கப்பட்டு உறவுகளையும் சொத்துக்களையும் இழந்து நிற்கும் நிலையில், காணிப் பதிவு என்னும் போர்வையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மோசடியான நில அபகரிப்புச் செயற்பாடுகளை உடன் நிறுத்துக.
* வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் காணி, வீடுகள் அற்று நிர்க்கதியற்ற நிலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ குடியேற்றங்கள் மற்றும் பெரும்பான்மையின மக்களின் குடியேற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக இன ஒற்றுமையைக் குலைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துக.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியன கலந்து கொண்டன. (ம)

# நிகழ்வுகள்

### இரத்ததானம்

137 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதான தபால் திணைக்களத்தில் இரத்ததான நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-311)

### பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் 101 ஆவது ஸ்தாபக தினமும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.பாடசாலையின் அதிபர் ஏ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் பி.கமலநாதன் கலந்துகொள்வார். (ம-86)

### விளையாட்டு விழா

சர்வதேச முதியோர் தின விழாவை முன்னிட்டு வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முதியோர் மற்றும் மாற்று வலுவுடையோர்களுக்கான விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை நிகரை வைரவ ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ம-313)

### ஆசிரியர் தினமும் வாணி விழாவும்

நெடுந்தீவு மகாவித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வும் வாணிவிழாவும் இன்று வியாழக்கிழமை அதிபர் திருமதி சாரதா கிருஸ்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-7)

### புத்தகக் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்கள் காலை 9 மணி முதல் சாவகச்சேரி பொது நூலகபிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.(ம-313)

### கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ''இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள்'' எனும் தலைப்பிலான பகிரங்க கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### விஞ்ஞான தின விழா

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் விஞ்ஞான தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் செல்வி என். நிலாஜினி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.வேலாயுதமூர்த்தி கலந்து கொள்வார்.இந்த நிகழ்வில் ஏழாவது 'முகை' இதழும் வெளியிடப்படவுள்து. (ம-15-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரில் பேசுவார் கனேடியப் பிரதமர்

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் நேரில் பேசுவார் என்று நம்பப்படுகிறது.

பேர்த் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள கனேடியப் பிரதமர் இந்த விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் நேரில் கலந்துரையாடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புவதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவர் புரூஸ் லெவி தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்களில் கூறப்படுவது போல, 2013ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டை கனேடியப் பிரதமர் புறக்கணிக்கமாட்டார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கனேடியப் பிரதமர் இலங்கையில் நடைபெறும் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறவில்லை என்றும், போரின் இறுதி மாதங்களில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பான விவகாரங்கள் மற்றும் அரசியல் நல்லிணக்கம் ஆகியவற்றில் முன்னேற்றம் எட்டப்படாதவிடத்து இந்த மாநாட்டில் கலந்து கொள்வது நெருக்கடியானது என்றே அவர் குறிப்பிட்டதாகவும் புரூஸ் லெவி மேலும் விளக்களித்துள்ளார்.

இலங்கையில் இந்த மாநாடு நடப்பதற்கு இன்னமும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் பயன்மிக்கதாக இருக்கக் கூடும் என்று கூறியுள்ள அவர், ஆனால் அதனை இலங்கையே முடிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் எதிர்காலத்துக்கு இந்த விசாரணைகள் மிகவும் அவசியம் என்று தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சீனா, ஈரான் போன்ற நாடுகளுடன் இலங்கையின் உறவுகள் நெருக்கமடைந்து வரும் நிலையில் பழைய நண்பர்களிடம் இருந்து அது விலகிச் செல்வதை சுட்டிக்காட்டத் தேவையில்லை என்றும் கனேடியத் தூதுவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யாரை நண்பராக வைத்திருக்க வேண்டும் என்று முடிவுகளை எடுக்கின்ற எல்லா உரிமைகளையும் முதிர்ச்சி பெற்ற நாடான இலங்கை கொண்டிருக்கிறது என்று கூறியுள்ள கனேடியத் தூதுவர், ஆனால் ஏதாவது ஒன்று தான் என்ற விளையாட்டு இங்கு தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# மாநகர முதல்வர் பதவியால் கல்முனையில் பதற்ற நிலை

மாநகர முதல்வரை நியமிக்கும் விவகாரத்தினால் கல்முனையின் சில பகுதிகளில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் பெருமளவு படையினரும் காவல்துறையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 11 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும் வெற்றியைப் பெற்றபோதும், முதல்வர் பதவிக்கு யாரை நியமிப்பது என்ற இழுபறி ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முதல்வர் பதவிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிசாம் காரியப்பரை விட, மீரா சாகிப் சிராஸ் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். இதன்காரணமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் குழப்ப நிலை உருவாகியுள்ளது.

ஒரு தரப்பினர் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சிராசை முதல்வராக நியமிக்க வலியுறுத்தி வருகின்றனர். மற்றொரு தரப்பினர் நிசாம் காரியப்பரை முதல்வராக நியமிக்க அழுத்தம் கொடுத்து வருகிறனர்.

இதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு அணிகளாக பிளவுபட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரசின் உயர்நிலைக் குழுக் கூட்டத்திலும் இது குறித்து தெளிவான முடிவு எடுக்கப்படவில்லை.

இன்று இருவரையும் அழைத்துப் பேசி யார் முதல்வர் என்று அறிவிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் சாய்ந்தமருதுப் பகுதியில் நிசாம் காரியப்பரை மாநகர முதல்வராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக வதந்தி பரவியதை அடுத்து சில இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றன.

வீதிகளில் ரயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டதுடன், மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் நிறுவனம் ஒன்றின் மீதும் கற்கள் வீசப்பட்டு, அதன் யன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளன. தனியார் பேருந்து ஒன்றும் கல் வீச்சில் சேதமடைந்துள்ளது.

சிராசுக்கு ஆதரவாக சாய்ந்தமருதுப் பகுதியில் நேற்று கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

வன்முறைகள் இடம்பெறலாம் என்ற அச்சம் நிலவுவதால் அங்கு பெருந்தொகையான படையினரும் காவல்துறையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். (த-10)

# இனப்படுகொலைக்கு எதிரான அமெ.ஆதரவுக்கு தமிழ்க் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்புக் கோரிக்கை

அமெரிக்கா வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷ அரசின் இனப்படுகொலைக்கு எதிரான அமெரிக்கா அரசின் ஆதரவைப் பெறுவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஒபாமாவுகான தமிழர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் படுகொலைகள், பெண்களின் மீதான வல்லுறவுகளுக்கு நீதி கோருவதாக இந்தப் பயணம் அமைய வேண்டும் என்றும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்க அரசிடம் தமிழர்கள் அனுபவித்த துயரத்தை தெளிவாக எடுத்துக் கூறுமாறும், ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க மக்களும் அரச அதிகாரிகளும் எமக்கு நடந்த படுகொலையை சனல்-4 தொலைக்காட்சி மூலம் பார்த்து அதிர்ந்து போய் உள்ளதாகவும், தமிழர்களின் பாதுகாப்புக்கு ஏதாவது திடமான நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்கா அதிகாரிகள் விரும்புவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் முதல்படியாக ராஜபக்ஷ ஆட்சியினரை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற அவர்கள் ஆர்வமாக இருப்பதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்க வருகை இந்த நடவடிக்கைகளுக்கு ஏதுவாக அமைய வேண்டுமே தவிர குந்தகம் விளைவிக்கக் கூடாது என்றும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

பூட்டிய அறைக்குள் நடக்கும் கூட்டங்களில் தமிழர் அபிலாசைகளை பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்தக் கூடாது என்றும், கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை இலங்கை அரசுடன் பேச்சு என்ற பெயரில் கோட்டை விட்டு விடவேண்டாம் என்றும் அது கேட்டுக் கொண்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின் வென்றெடுத்த முக்கிய ஆதரவுகளை பாழடித்து விட வேண்டாம் என்றும் இந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்கா அதிகாரிகள் பலரும் கூட்டமைப்பின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும், இந்த வருகை தமிழ் இனத்தின் நிரந்தர விடுதலைக்குப் போடும் ஒரு அத்திவாரக் கல்லாக இருக்க வேண்டுமே தவிர, அடகு வைக்கும் பயணமாக இருக்கக் கூடாது என்றும், ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (த-10)

# சவூதியில் கசிப்பு காய்ச்சிய 800 இலங்கையர் சிக்கினர்

## தற்போது அங்கு கம்பி எண்ணுகின்றனர்

கொழும்பு, ஒக்.13

சவூதி அரேபியாவில் பல தரப்பட்ட சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட '800 இலங்கையர்கள் தற்போது அந்தநாட்டு சிறைச்சாலைகளில் சிறை தண்டனை அனுபவித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

இரகசியமான விதத்தில் கசிப்பு தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற அந்தநாட்டின் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச் சாட்டிலேயே இவர்கள் சிறைவாசம் அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ரியாத்' நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் இவர்கள் அனைவரும் ஆண்களாவார்.

இவர்களில் சிலருக்கு எதிராக மட்டுமே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றது என்றும் பெரும்பாலானோர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படாமலேயே சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அங்குள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-ஞ)

# தற்கொலை புரிந்த அரச ஊழியரின் ஓய்வூதியம் மனைவி, பிள்ளைகளுக்கு

## திணைக்கள பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

அரச ஊழியர் ஒருவர் தற்கொலை செய்து மரணமடைந்தால் அவரது ஓய்வூதியத்தைப் பெற அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் உருத்துடையவர்கள் என்று ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.ஏ. திலகரத்ன தெரிவித்துள்ளார்.

அவரது சம்பளத்தின் 85 வீதமான தொகையை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்க சட்ட விதிகளில் இடமுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மரண நட்டஈட்டுப்படி உட்பட சகல கொடுப்பனவுகளையும் பெற அவர்கள் உரித்துடையவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத சேவை மற்றும் திருமணமாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டிருப்பின் மட்டுமே அத்தகைய ஊழியர்களின் ஓய்வூதியம் மற்றும் படிகளை வழங்குவது தொடர்பான இறுதிமுடிவு ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஞ)

# வழமைபோல் இம்முறையும் 'பட்ஜெட்'டில் பாதுகாப்பு அமைச்சுக்கே முதலிடம்

## ஆகக் கூடிய தொகையாக 22,994 கோடி ஒதுக்கீடு

கொழும்பு, ஒக். 13

எதிர்வரும் ஆண்டுக்கான உத்தேச வரவு, செலவுத் திட்டத்தில் ஆகக் கூடிய தொகை நிதி ஒதுக்கீடாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு 22,994 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கடுத்த அதி கூடிய தொகையாக துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 14,456 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வகையில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கென 12,977 கோடி ரூபாவும், பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கென 11,362 கோடி ரூபாவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கென 10,457 கோடி ரூபாவும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கென 12,421 கோடி ரூபாவும், சுகாதார அமைச்சுக்கென 7,399 கோடி ரூபாவும், கல்வி அமைச்சுக்கென 3,326 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அடுத்த நிதியாண்டுக்கான உத்தேச வரவு, செலவுத் திட்ட சட்ட நகல் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அது எதிர்வரும் 18ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்படி அடுத்த நிதியாண்டில் அரசின் மொத்தச் செலவீனம் 2,22,000 கோடி ரூபாவாகவும் அரசின் மொத்த வருமானம் 1,11,500 கோடி ரூபாவாகவும் அமையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. (ஒ-ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் அதிபர்
**திருமதி. சாரதாதேவி கிருஷ்ணதாஸ்**
(B.A. Hons, Dip. in Edu., SLPS 2-I)
அவர்கள் தீவக கல்வி வலயத்தில்
சிறந்த அதிபராகத் தேர்வு செய்யப்பட்டு
சர்வதேச ஆசிரியர் தினத்தில்
(06.10.2011) அலரிமாளிகையில்
நாட்டின் ஜனாதிபதியிடம் இருந்து
"பிரதீபா பிரபா" விருதினைப்
பெற்றதையிட்டு வாழ்த்துவதுடன்
மேலும் பல விருதுகள் பெற்றுச்
சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*அன்பு நெஞ்சங்கள்,*
*அம்மா, அப்பா,*
*சகோதரர்கள், உறவுகள்.*
*நெடுந்தீவு-11.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.
வித்தியாலயத்தில் தரம்-05 புலமைப்
பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்து எமக்கும்,
பாடசாலைக்கும் பெருமை சேர்த்த
**செல்வன் சந்திரதாஸ் சங்கீத்**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் இவருடன் பரீட்சையில்
70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
மாணவர்களையும் இப்
பெறுபேறுகளைப் பெற அயராது
உழைத்த அதிபர், ஆசிரியர்களையும்
பாராட்டுவதுடன் அவர்களது முயற்சி
மேலும் தொடரவும் வாழ்த்துகின்றோம்.

*பாடசாலை சமூகம்,*
*யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. வேலாயுதர் உதயகுமார்**
(Dip. in Teach, B.A (Hons); M.A (Tamil))
06.10.2011 இல் நடைபெற்ற
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
27 ஆவது பட்டமளிப்பு
விழாவில் முதுகலைமாணி
(தமிழ்-Merit) பட்டம்
பெற்றமையை மகிழ்வுடன்
பாராட்டுவதுடன் மேலும்
கல்வியில் உயர்வு பெற
வாழ்த்துகின்றோம்.

*ஆசிரிய சகோதரத்துவம்,*
*யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.*

## மனதார வாழ்த்துகின்றோம்



**பொன்னுத்துரை மதிவண்ணன்**
(யா/ஊரெழு கணேச வித்தியாசாலை)

*2011 ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருதான* **பிரதீபா பிரபா** *விருதினை [06.10.2011] வியாழக்கிழமை கௌரவ மேதகு ஜனாதிபதியிடம் அலரி மாளிகையில் பெற்றமையையிட்டு பெருமகிழ்வு அடைவதுடன் அவர் மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர் கழகம்
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.
(8968)

## பசுக்கள் காணவில்லை

மிருசுவில் வரணி பகுதிகளில் ம.ர குறியுள்ள
3பசுக்களும் 5 கன்றுகளும் வழிதவறிவிட்டன.
கண்டவர்கள் *0778286647* என்ற
தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

வண்ணார்பண்ணை மேற்கு, நாவலடி லேன், சி.ஜெகதீபன் என்னும் பெயர் முகவரியுடைய 822211007V இலக்க தே.அ. அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்ஸுடன் நாச்சிமார் கோயிலுக்கும் குளப்பிட்டிச் சந்திக்குமிடையில் தவறி விட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து தவவும். **0776979757**

## தவறிவிட்டது

நவாலி தெற்கு கொத்துக் கட்டியில் வசிக்கும் அரியம் கோகிலரஞ்சன் என்பவருடைய 8507323882v இல.NIC, A021618646(A,D) இல. சாரதி லைசென்ஸ் என்பன நவாலிக்கும் ஆனைக் கோட்டைக்கும் இடையில் 07.10.2011 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு: 0773128390, 0214909291**

## பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்

**உடன் வேலை வாய்ப்புகள்!**
1. இரவுநேர பாதுகாப்பு உத்தியோகத்தர்
2. காரியாலய லிகிதரும் வெளிக்கள உத்தியோத்தரும்

குறிப்பு: பருத்தித்துறை நகரின் அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்:**
பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்,
பருத்தித்துறை.
தொ.இ -0212263236
*அல்லது*
**செயலாளர்:**
பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.
தொ.இ: 0212263652

## வீட்டு பணிப் பெண் தேவை

இருவர் மட்டும் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்துக்கு வீட்டில் தங்கியிருந்து 7வயதுச் சிறுமியை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் நற்பண்புள்ள பெண் உதவியாளர் தேவை. வேலை மிகவும் குறைவு, தகுந்த சம்பளம், உணவு, உடை, தங்குமிடம் வழங்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும். **0777062493**

## ஒத்து மாறல்

கொழும்பு கல்வி வலய பாடசாலை ஒன்றில் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர், யாழ். கல்வி வலயப் பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

**தொடர்பு 0771135536**

## இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள்?

**பகிரங்கக் கலந்துரையாடல்!**

வளவாளர்கள்:
* திரு. தி. சிறீதரன்
* திரு. கு. குருபரன்
* வைத்திய அதிகாரி சி. யமுனானந்தா
* கலாநிதி செ. அறிவழகன்

இடம் : பௌதிகவியல்துறை
விரிவுரை மண்டபம் (P1),
விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

காலம் : 13.10.2011 (வியாழக்கிழமை)

நேரம் : பி. ப. 2.00 - 4.00

அனைவரும் வருக

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் (JUSTA)

## பிரத்தியேக/குழு வகுப்புகள்

க.பொ.த(உ/தரம்): இரசாயனவியல்
க.பொ.த (சா/தரம்) : கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் (09,10), மேற்படி வகுப்புக்கள் உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பித்துத் தரப்படும்.
(மீட்டல், பயிற்சி, மாதிரி வினாக்கள் துரித கதியில்)
தொடர்புகளுக்கு :0774014345

## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் நவக்கிரக ஹோமம்

**காலம்:** *15.10.2011 (சனிக்கிழமை)*
**நேரம்:** *காலை 8.30 தொடக்கம் நண்பகல் வரை.*

அடியார்கள் அனைவரும் மேற்படி ஹோமத்தில் கலந்து நவக்கிரகங்களின் நல்லருளைப் பெற்றுய் யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்பர்கள் தங்களதும் குடும்ப உறுப்பினர் களதும் பெயர் நட்சத்திரங்களை கோயில் அலு வலகத்தில் முன்கூட்டியே பதியுமாறும் வேண்டி நிற்கின்றோம். அர்ச்சனைக்கான கட்டணத்தையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**கோயில் நிர்வாக சபை**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தையா பத்மநாதன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29.09.1932 | 05.10.2009 |

திதி: *துதியை*

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்கள் அப்பா! எங்களைப்
பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனதுவோ!
நம்பமுடியவில்லை.

*என்றும் உங்கள் நினைவுடன்,*
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

114, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்வு



எமது பாடசாலையின் முன்னாள்
முதல்வர்
அமரர் சுப்பிரமணியம்
இராசரெத்தினம் சண்முகரெத்தினம்

அவர்களின் பிரிவினால் துயருற் றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பது டன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பாடசாலைச் சமூகம்.**
புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

## மரண அறிவித்தல்



*திருமதி* **அருளானந்தம் மரியரத்தினம்மா**
(ராசாத்தி)

பருத்தித்துறை ஊரியவத்தையை பிறப்பிடமாகவும் ஜேர்மனி Wellmar ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் மரியரத்தினம்மா 06.10.2011 அன்று ஜேர்மனியில் கால மானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை விக்டோறியா தம்பதியினரின் மகளும், டொமினிக் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், மரியம்மா (Canada), மரியராசநாயகம், லலிதா (Denmark), ஆகி யோரின் அன்புச் சகோதரியும், அருளானந்தம் (Canada), தங்கராசா (Denmark),ஆகியோரின் மைத்துனியும், ரமேஸ், ஜான்சி, லெசி, ஜென்சி, ஜெனா ஆகியோரின் அன்புச் சித்தியும் அனல்தர்சன், தனுசியா, அனல்றெஜி, அனல்ராஜ், வினுசியா ஆகியோரின் பாசமிகு அத்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மனி Wellmar இல் *(15.10.2011)* சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**அ.மரியராசநாயகம்**
(சகோதரி)

ஊரியவத்தை,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.


## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக
உங்கள் உறவுகளின்
இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில்
உங்கள் உறவுகளுக்கு கடிதங்
கள், அன்பளிப்புப் பொருட்கள்,
புடவைகள்,CD Vedio க்கள்
என்பன மிக விரைவாக
அனுப்பி



திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ... வீதி, திருநெல்வேலி.
இல. ...
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

DHL WORLDWIDE EXPRESS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பான் கீ - மூனும் அரசும் இருவேறு துருவங்களில்...

இலங்கை அரசின் நடவடிக்கைகளால் நான் பொறுமை இழந்துள்ளேன் - இவ்வாறு விசனத்துடன் தெரிவித்திருக்கிறார் உலகப் பெருமன்றமான ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன்.

"உலகில் அனைவருக்கும் 2030 ஆம் ஆண்டுக்கு முன்னர் மின்சாரம்" என்ற தொனிப்பொருளில் நோர்வேயில் நடைபெற்ற கூட்டத் தொடரின் பின்னர், தெரிவு செய்யப்பட்ட சர்வதேச ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே, ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம், மேற்கண்டவாறு பெரும் ஆதங்கத்துடன் தமது மனநிலையை வெளிப்படுத்தியிருக்கிறார். தனது உள்ளக் கிடக்கையைக் கொட்டித் தீர்த்திருக்கிறார். பாவம் அவர். இலங்கை ஜனாதிபதி தமக்கு நெருக்கமானவர் என்பதால், அவரது நாடு - அரசு - தொடர்புடைய விவகாரத்தை சற்று அடக்கி வாசிப்பதற்காக மூன் காலம் வாங்கியது சர்வதேசத்துக்குத் தெரியாதது அல்ல.

ஆனால், இரண்டாவது தடவையாகவும் அதி உயர்ந்த பதவிக்குத் தெரிவான பின்னர் அவர் இலங்கை மீதான தனது நோக்கை, போக்கை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

வன்னியில் படுமோசமான மனிதக் கொலைகள் நடைபெற்றுப் பல நாள்களின் பின்னர், இலங்கை வந்து போர்ப் பிரதேசத்தை விமானத்திலிருந்து பார்த்துவிட்டு "இது போன்ற காட்சிகளை நான் வேறு எங்கும் கண்டதில்லை" என்று கூறிச்சென்ற மூன், நீண்ட காலம் செயலளவில் மௌனம் சாதித்த அவர், பல நெருக்குதல்களின் பின்னரே, இலங்கையில் நடத்தப்பட்ட பேரழிவு குறித்துத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழு ஒன்றை நியமித்தார்.

நிபுணர் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமாக செயலாளர் நாயகத்திடம் கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி - ஆறு மாதங்களுக்கு முன்னர் - கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கை இலங்கை அரசுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

தமது நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பான் கீ - மூன் எதிர்பார்த்தார் என்பது அவர் நோர்வேயில் மனம் வெதும்பியதிலிருந்து புலப்படுகிறது.

"அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளைச் செயற்படுத்துவது தொடர்பாக, இலங்கை அரசு ஆக்கபூர்வமாகப் பதிலளிக்கும் என்று காத்திருந்தேன் காத்திருந்தேன்" என்று தமது ஆதங்கத்தை சர்வதேச ஊடகவியலாளர்களிடம் வெளியிட்டிருக்கிறார் மூன்.

ஆனால், இலங்கை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும், செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று கர்ச்சித்தனர். அது ஐ.நாவின் உத்தியோக பூர்வமான அறிக்கை அல்ல என்றும், வெறும் தருஸ்மன் அறிக்கை என்றும் குறைத்து மதிக்கும், கிண்டல் செய்யும் நிலைக்கும் சென்றனர்.

அது மட்டுமன்றி, சீனா, ரஷ்யா மற்றும் பல நாடுகளிடம் அறிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கைக்கொள்ளுமாறு ஆதரவு திரட்டினர். என்ன பாடுபட்டும் நிபுணர் குழு அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிசீலனைக்கு எடுக்கப்படாமல் தடுப்பதற்குத் தமக்குத் தெரிந்த தந்திரோபாயங்கள், சூட்சுமங்களை எல்லாம் கையில் எடுத்தனர்.

கடந்த மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் நிபுணர் குழுவின் அறிக்கை பரிசீலனைக்கு, விவாதத்துக்கு எடுக்கப்படவில்லை.

ஆனால், அதனைச் செயலாளர் நாயகம் உரிய முறைப்படி ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்திருந்தார். அது குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று இலங்கை அரசு ஆத்திரவயப்பட்டுப் பொங்கி எழுந்தது.

இலங்கை அரசு எப்படித்தான் தலையால் நடந்தாலும், ஐ.நாவின் செயலாளர் நாயகம் தமது பதவி நிலைக்குக் களங்கம் உண்டாகிவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார் என்பதனை புலப்படுத்தி உள்ளார், வெளிப்படுத்தி உள்ளார்.

ஐ.நா. அறிக்கை விவாதத்துக்கு வராமல் தடுப்பதில், முறியடிப்பதில் இலங்கை அரசு தமது சக்தியை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்திய போதிலும், அரசு எதிர்பார்த்த பெறுபேறு முழுமையாகக் கிட்டவில்லை. நிலத்தில் விழுந்தவன் தன் மீசையில் மண் படவில்லை என்று கூறியது போல, மனித உரிமைகளைப் பேணுவதற்கான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப் போவதாக கடந்த எட்டு நாள்களுக்கு முன்னர் மனித உரிமைகளைப் பேணுவதற்கான ஜனாதிபதியின் விசேட தூதுவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து வெளிப்படுத்தியதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் -

தமது நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகள் இலங்கை அரசினால் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற தனது சொந்த நிலைப்பாட்டையும் -

நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை செயற்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசு ஆக்கபூர்வமாகப் பதில் அளிக்கும் என்று "நான் காத்திருந்தேன் காத்திருந்தேன்" எனத் தமது ஆதங்கத்தையும் -

பான் கீ - மூன் தமது நோர்வே ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டிருப்பதன் மூலம் இந்த விவகாரத்தில் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பதனை ஓரளவு எதிர்வுகூறுவதாக உள்ளது.

பொறுத்தது போதும், இனிமேலும் பொறுக்க முடியாது என்ற உட்பொருள் பான் கீ - மூனின் மனதில் மறைந்து உறைந்திருப்பதைக் கூர்ந்து அவதானிக்க முடிகிறது.

போர்க் காலத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும்; தேசிய நல்லிணக்கத்தை வெறும் விசாரணை அறிக்கைகளில் எழுதி வைத்து அழகு பார்க்காமல் செயல்வடிவம் காணத்தக்க பலமான, உறுதியான நடைமுறைகள், நடவடிக்கைகள் தேவை என்பதில் ஐ.நா. இறுக்கமாகவும் கண்டிப்பாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கை இதனை முன்கூட்டியே அறிந்து கொண்டுதான், மனித உரிமைகளைப் பேணுவதற்கான செயற்றிட்டம் குறித்து முன்னேற்பாடாக உச்சரித்துள்ளதோ என்ற ஐயுறவு இயற்கையாகவே எழுகிறது!

# சவூதி பாசறையில் முதன்முதலாக வடமாகாணத் தமிழ்ச் சாரணர்கள்

வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்ச் சாரணர்கள் இருவர், சவூதி அரேபிய சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது தலைநகரான ஜெத்தாவில் நடைபெற்ற சவூதி அரேபிய 2 ஆவது தேசிய நட்புறவுப் பாசறையில் பங்கேற்றுத் திரும்பியுள்ளனர்

இலங்கைச் சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இவர்கள் இந்தப் பாசறையில் கலந்துகொள்ள சவூதி அரேபியா சென்றிருந்தனர். கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை இந்தப் பாசறை நடைபெற்றது.

இந்தப் பாசறையில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் சி.செந்தூரன், கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் ச.அமலராஜ் ஆகிய இருவருமே இலங்கையிலிருந்து பங்கு பற்றிய சாரணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன் முதலாக இந்த நிகழ்வில் பங்கு பற்றிய தமிழ்ச்சாரணர்கள் என்ற பெருமையை இவர்கள் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான உணவு, போக்குவரத்து, தங்குமிடவசதிகளை சவூதி அரேபிய சாரணர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. (ம)

# யாழ். - கொழும்பு தனியார் பஸ் தரிப்பிடம் கொழும்பில் திறப்பு

கொழும்பு, ஒக். 13

யாழ்.-கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான தரிப்பிடம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தையில் கொழும்புப் பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவினால் திறந்து வைக்கப்படுகின்றது.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு அருகில் உள்ள அரச உணவுக் களஞ்சிய வளாகத்திலேயே இந்தத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். - கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் கொழும்பில் தரித்து நிற்பது தொடர்பாகக் கடந்த சில நாள்களாக இழுபறி நிலை இருந்து வந்தது.

பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய பஸ்கள் வெள்ளவத்தை அரச உணவுக் களஞ்சிய வளாகத்தில் இருந்து புறப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இதற்கான தரிப்பிடம் நாளை திறந்து வைக்கப்படுகிறது. இதில் தனியார் பஸ் உரிமையாளர்கள், தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை முதல் பஸ்கள் இந்தத் தரிப்பிடத்தில் இருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

# பாடசாலை பதில் அதிபர்கள் நான்காயிரம் பேர் இன்று முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஒக்.13

பதவிகளை நிரந்தரமாக்குமாறு கோரி கல்வியமைச்சுக்கு முன் போராட்டம் நடத்திவரும் பதில் அதிபர்கள் இன்று வியாழக்கிழமை முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி இவர்கள் ஆரம்பித்த போராட்டம் இருவாரங்களைக் கடந்துள்ள போதும் அதிகாரிகள் எவ்வித தீர்வையும் வழங்காத காரணத்தினாலேயே இவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட முடிவெடுத்துள்ளனர்.

நாடெங்கும் நான்காயிரம் பதில் அதிபர்கள் உள்ளனர். அவர்களின் பதவிகளை நிரந்தரமாக்குவதற்கு கல்வியமைச்சு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அவர்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பதில் அதிபர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.ஜீ.ரணசிங்க தெரிவித்துள்ளார். கடந்த பத்து வருட கால மாக நாங்கள் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றி வருவதன் மூலம் அந்தப் பாடசாலைகளை மூடிவிடாமல் பாதுகாத்து வருகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எங்களை நிரந்தரமாக்குவதற்கான சகல தகுதிகளையும் நாங்கள் பெற்றிருந்த போதும் அதிகாரிகள் பாராமுகம் காட்டி வருகிறார்கள்.

தற்சமயம் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள நான்காயிரம் பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த விடயத்தில் கல்வியமைச்சு துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-5)

## வேதங்கள் உபதேசித்தவற்றை மக்கள் கைக்கொள்ளுகின்றார்களா.?

துரதிஷ்டவசமாக, இன்று, மக்கள் உண்மை பேசுவதில்லை. அவர்கள் நேர்மை பற்றிப் பேசுவார்கள். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில்லை.

இன்றைய உலகில் மனிதன் ஒவ்வொரு சொல்லிலும் உண்மையைத் தியாகம் செய்கிறான். ஒவ்வொரு செயலிலும் நேர்மையைக் கைவிடுகிறான்.

அன்பு வீழ்ச்சியடைந்து போகின்றது. சாதி, சமயம் இவற்றின் மீதான வெறுப்பு வளர்ச்சியடைகின்றது. குறுகிய மனப்பான்மையும் சுயநலமும் உச்சநிலையில் தாண்டவ மாடுகின்றன. பாவத்துக்கு அஞ்சுவதையும், இறைவன் மீது அன்பையும், சமூகத்தில் ஒழுக்கத்தையும், மக்கள் மறந்துவிட்டனர்.

மக்களிடம் மானுட உடம்பு இருக்கின்றது. ஆனால் அவை தன்னளவில் இனங்காண முடியாத நிலையிலும் (பிரித்றியும் இயல்பு) கட்டுப்பாடற்றதுமாகவும் இருக்கின்றன. ஆகவே இத்தகைய புரிந்துணர்வு இல்லாதோரால் உலகுக்கு எதுவித நன்மையுமில்லை. இனங்காணலும் கட்டுப்பாடும் தான் மனிதனின் உண்மையான குண இயல்புகள்.

தாம் உரித்தாகியுள்ள நாட்டு இனத்தின் மீது மாணவருக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அவர்கள் உலக நன்மையைப் பேணிக்காக்க வேண்டும். அவர்கள் எல்லோரதும் சந்தோஷத்துக்காகவும் இறைவனை வேண்டுதல் வேண்டும்.



*(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)*

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மையங்களாகவுள்ள நிலாவரை மற்றும் பாம் பீச்

## பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பம்

அச்சுவேலி, ஒக்.13

நிலாவரை வற்றா நீர் ஊற்று - வளலாய் 'பாம் பீச்' இரண்டும் சுற்றுலாமையங்களாக புனரமைப்புச்செய்யப்படவுள் ளன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சுற்றுலா மைய வேலைத்திட்டம் தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் தெரிவிக்கையில்:

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மையங்களை எதிர்காலத்தில் அழகுபடுத்தி சுற்றுலா மையமாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வுள்ளோம். முதற்கட்டமாக நிலாவரை வற்றா ஆழ் கிணறும் அதனோடு இணைந்த பகுதியும் வளலாய் கடற்கரையும் மறுசீரமைப்புச் செய்யப்படவுள் ளன.

இந்தச்செயற்றிடங்கள் மூலம் பிரதேச சபைக்கான வருமானத்தை அதிகரிப்பு செய்வதற்கும் வேலை வாய்ப்பு வசதியை மேம்படுத்த முடியும்.

நிலாவரை ஆழ் கிணறு நவீனமயப்படுத்தி பூங்காவோடு கூடிய சுற்றுலா மையமாக்கப் படவுள்ளது. இதற்கான அனுமதிகள் பெறுவது, மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வது போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

அழகான வளலாய் கடற்கரை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மக்கள் பயன்பாட்டுக்கு இல்லாமல் புதர்மண்டிய நிலையில் உள்ளது.

இந்தப் பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம். இதனை உரிய முறையில் மறுசீரமைப்பு செய்வதன் மூலம் சபைக்கான மேலதிக வருவாயைப் பெறமுடியும். அத்துடன் சுற்றுலாத்தலமாகப் பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (ம-11)

# யாழ்ப்பாணத்திலிருந்து 60 கலைஞர்கள் மன்னாரில் நடக்கும் இலக்கிய விழாவுக்கு

யாழ்ப்பாணம், ஒக.13

மன்னாரில் நாளை ஆரம்பமாகி இரண்டு நாள்களுக்கு இடம்பெறவுள்ள இலக்கிய விழாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 60 கலைஞர்கள் செல்லவுள்ளனர்.

அவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் என்.சிறிதேவி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பங்குபற்றும் கலைஞர்களுக்கான ஏற்பாடுகள் சம்பந்தமாக அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கலைஞர்கள் செல்வதற்கு வசதியாக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் பஸ் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பஸ் இன்று பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து புறப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பங்கு பற்றும் கலைஞர்களுக்கான தங்குமிட வசதிகள் மன்னாரில் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இம்முறை 13 ஆளுநர் விருதுகளும் 9 இலக்கிய விருதுகளும் வழங்கப்படவுள்ளன. இலக்கிய விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன - என்று கூறினார். (ம-319)

# மிருசுவிலில் ரயில் நிலைய கட்டடம் அமைப்பு

வடமராட்சி, ஒக்.13

மிருசுவிலில் புகையிரத நிலையக் கட்டட வேலைகள் பூரத்தியடைந்து வருகின்றன.

வடகில் உள்ள ரயில் நிலையங்கள் தென்பகுதி மக்களால் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக மிருசுவில் ரயில் நிலையம் கட்டப்பட்டு வருகின்றன.

வடக்குக்கான ரயில் பாதை அமைக்கும் பணி யாழ். மாவட்டத்தில் இன்னமும் மேற்கொள்ளாத நிலையில் பூர்த்தியடைந்து வரும் மிருசுவில் ரயில் நிலையக் கட்டடம் முன்னர் இருந்ததைவிட சற்றுப் பெரிதாக கட்டப்படுகிறது . ரயில் மேடையும் உயரமாகவும் கட்டப்பட்டுள்ளது.

(ம-236)



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலை முன்றிலில் அதிபர் த.வாமதேவன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பரிசில்களை உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், சட்டத்தரணி செல்வி சி.ஞானலோஜினி ஆகியோர் வழங்கிக் கௌரவிக்கின்றனர். (ம-86)

# மூலிகைத் தோட்டத்தை பார்வையிடவுள்ள அமைச்சர் சாளித்த

அச்சுவேலி,ஒக்.13

நவக்கிரி மூலிகைத் தோட்டத்தின் மேலதிக அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கு 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுதேச வைத்திய அமைச்சர் சாளித்த திஸாநாயகா மற்றும் உயர் அதிகாரிகள் மூலிகைத் தோட்டத்துக்குச் செல்லவுள் ளனர்.

நவக்கிரி மூலிகைத் தோட்டம் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இது வடக்கு மாகாணத்தில் உள்ள பெரிய மூலிகைத் தோட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.

(ம)

# ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தோர் பணம் செலுத்தாமையால் திண்டாட்டம்

## அவர்களைத் தேடி அலையும் கிராம சேவகர்கள்

சண்டிலிப்பாய், ஒக்.13

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இணைந்து கொண்ட பலர் தொடர்ந்து பணம் செலுத்த முன் வராமையால் இவர்களைத் தேடி வீடுவீடாக அலைய வேண்டிய நிலைக்குக் கிராம உத்தியோகத்தர்கள் தள்ளப்பட் டுள்ளனர்.

முதியவர்களின் நலன் கருதி அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக முதியோர்கள் இணைத்துக் கொள் ளப்பட்டனர். இந்தத் திட்டத்தில் அதிகளவிலான முதியோர்களை இணைத்துக் கொண்ட பிரதேச செயலகங்களும் கிராம உத்தியோகத்தர்களும் பாராட்டப்பட்டு பரிசில்களும் வழங்கப் பட்டன. இதைத் தொடர்ந்து போட்டா போட்டியாக உறுப்பினர்களை இணைப்பதில் கிராம உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்ட முதியவர் ஒருவர் தனது பெயரிலான கணக்கில் 22 ஆயிரத்து 121 ரூபாவை வைப்பில் இடவேண்டும். இதனை பகுதியாகவோ மாதாந்தமாகவோ சேமிக்க முடியும் குறிப்பிட்ட தொகையைச் சேமித்த பின்பு மாதாந்தம் 1500 ரூபா ஓய்வூதியமாகப் பெறமுடியும்.

இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்ட பலர் ஆரம்பத்தில் மாதா மாதம் பணத்தைத் தொடர்ந்து செலுத்தி வந்தனர். பின்பு இந்தப் பணத்தைச் செலுத்தத் தவறிவிட்டனர். இதனால் கிராம உத்தியோகத்தர்கள் இவர்களைத் தேடி வீடுவீடாக அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பயனாளி ஒருவர் ஒரே தடவையில் 22,121 ரூபாவை முழுமையாகச் செலுத்தலாம். அல்லது 5 ஆயிரத்து 729 ரூபா வீதம் ஒரு வருடத்தினுள் 4 தடவைகள் செலுத்தலாம். 60 தடவைகளில் மாதம் 470 ரூபா வீதமும் செலுத்தலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(ம-115)

# சுய தொழில் கடனுக்கு விண்ணப்பித்து ஏமாற்றம் அடைந்துள்ள மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.13

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்கள் தங்கள் சுயதொழில் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இலங்கை வங்கியிடம் கடனுக்கு விண்ணப்பித்து நான்கு மாதங்கள் கடந்து விட்டன. எனினும் எதுவித பதிலும் இல்லை என்று கூறுகின்றனர். இதனால் அவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் நடந்து முடிந்த யுத்தத்தின் பின்னர் தங்களின் வாழ்விடமான சங்கானை பகுதிகளுக்கு மீளக்குடியமர்ந்து உள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் எந்த வித தொழில் வாய்ப்புக்கள் இன்றி பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருந்தனர்.

இவர்களை இனங்கண்ட சங்கானைப் பிரதேச செயலகத்தினர் மக்களை பிரதேச செயலகத்துக்கு அழைத்து மக்கள் தேவைகளைக் கேட்டறிந்து சுயதொழில் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆலோசனை வழங்கினர்.

இதனை அடுத்து இலங்கை வங்கியின் உயர் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் காரைநகர் பிரதேசத்துக்கு வருகை தந்து இந்த மக்களை அழைத்து மக்களின் வாழ்வாதாரத்துக்கான தொகை மதிப்பீட்டை மேற் கொண்டனர்.

இதன் பின்னர் தம்து பிரிவு வங்கிக் கிளைகளில் மக்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து வழங்கி உள்ளனர்.

தற்போது நான்கு மாதமாகியும் இதுவரை எவ்வித பதிலும் அற்ற நிலையில் இருப்பதாக மக்கள் ஏமாற்றம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வங்கியின் மேலதிக பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ள முற்பட்டபோதும் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. (ம-415)

# மயிலிட்டி காசநோய் ஆஸ்பத்திரியை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.13

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீளவும் திறப்பதற்கு துரித ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் காசநோய் வைத்திய கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையின் எதிர்காலம் குறித்த நிலைப்பாடு குறித்து அவர் மேலும் கூறுகையில்;

கடந்த 20 வருடங்களின் பின்னர் இந்த வைத்திய சாலையை மீளவும் திறப்பதற்கு யாழ். அரச அதிபர் ஊடாக பெரும் முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

அதி உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த வைத்தியசாலையை மக்களின் வசதி கருதி திறந்து வைக்க வேண்டும்.

பெரும்பாலும் இந்த வைத்தியசாலையை ஒரு மாத காலத்தில் திறப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்து தரப்படும் என்று சாதகமான சமிஞ்ஞை கிடைத்துள்ளது.- என்றார்.

இதேவேளை, காசநோயால் பாதிக்கப்படுவோரை பாதுகாப்பான முறையில் வைத்து அவர்களுக்கு உரிய சிகிச்சை வசதிகளை வழங்குவதற்கு போதிய விடுதிகள் இல்லை.

இதற்காகவே மயிலிட்டி வைத்தியசாலையை மீண்டும் செயற்பட வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட் டுள்ளன. - என்று மேலும் கூறினார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்று கற்றலில் ஈடுபடாது போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ். மாவட்ட அரச அதிபரால் தெரிவிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் நேற்று கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்குக் கலாசாலையின் அதிபர் ஆதரவு தெரிவிப்பதாக தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.மாவட்ட அரச அதிபரால் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் முறைகேடுகள் நடப்பதாகத் தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே ஆசிரிய மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக கலாசாலையின் அதிபர் எம். இக்னேஷியஸ் தெரிவித்ததாவது:

எமது கலாசாலையில் எந்த விதமான துஷ்பிரயோகங்களும் இடம்பெறவில்லை. அரச அதிபர் உரிய வகையில் விசாரிக்காமல் மேற்படி தகவலை வெளியிட்டது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.




அரச அதிபர் தனக்கு யாரோ முறைப்பாடு செய்ததாக தெரிவிக்கின்றார். அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டும். சிறுபிள்ளைத் தனமாக வெளியிடமாட்டேன் என்கின்றார். எனவே எமக்கு நீதியான தீர்வு வேண்டும். அதற்காகப் போராடும் மாணவர்கள் என்னிடம் அனுமதி பெற்று போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

எமது ஆசிரியர் கலாசாலை மாணவர்களிடமும், விரிவுரையாளர்களிடமும் இங்கு இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறவில்லை என்பதுடன் இது தொடர்பாக அரச அதிபருக்கு எவரும் முறையிடவில்லை என்றும் கடிதம் எழுதித் தருமாறு கேட்டுள்ளேன். அவற்றை அரச அதிபருக்கு அனுப்பவுள்ளேன்- என்றார்.

இதேவேளை, அரச அதிபர் வெளியிட்ட கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்திருந்தீர்கள். அரச அதிபர் அதற்குத் தயார் என்று அறிவித்துள்ளார். இதற்கு தங்களின் பதில் என்ன என்று கேட்டபோது, சந்தர்ப்பம் வரும் போது நீதிமன்றம் செல்வேன் என்றார்.

அத்துடன்பலாலிஆசிரியர்கலாசாலை தொடர்பில் ஏதாவது கருத்துத் தெரிவிப்பதானால்அதிபர் என்ற வகையில் நான் மட்டுமே தகவல்களை வெளியிட முடியும். வேறுயாராவது தெரிவிப்பார்களாக இருந்தால் அது அவர்களுடைய தனிப் பட்ட கருத்தாகவே அமையும்.- என்றார்.

அரச அதிபர் உரியவர்களை அடையாளம் காட்ட வேண்டும். இல்லையேல் அவர் கூறிய கருத்துத் தவறு என்று அறிக்கை வெளியிட வேண்டும் என்று மாணவர்கள் கூறினர். (ம-15)

## தாளையடியில் சட்ட ஆவணங்களுக்கு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.13

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் சட்ட ஆவணங்களுக்கான நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை தாளையடி அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் மணற்காடு, போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பிறப்பு, இறப்பு, திருமணம், மரணம், காலந்தாழ்த்திய பிறப்பு, தேசிய அடையாள அட்டை போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## செஞ்சிலுவை தொண்டர்கள் ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவின் ஏற்பாட்டில் தொண்டர் ஊக்குவிப்பு நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் புதிய தொண்டர்கள், பழைய தொண்டர்கள் தற்போது சேவையிலுள்ள தொண்டர்கள் அங்கத்தவர்களின் சிபார்சுகளுக்கு அமைவாகக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தக் குழுவுக்கான தெரிவுக் குழுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறைப் பிரிவுக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிளைக் குழுவின் தொண்டர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வின் போது தொண்டர்களுக்கான கடமைகளும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

எனவே இந்தக் குழுக் கூட்டத்துக்கு சகல உறுப்பினர்களையும் தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறைப் பிரிவு தலைவர் அறிவித்துள்ளார். (ம-313)

## ஏ-9 வீதி புனரமைப்பு பணிகளில் பெண்களும்

யாழ்ப்பாணம், ஒக்.13

ஏ-9 வீதியின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வீதியில் நாவற் குழிக்கு அப்பால் அகலிப்புப் பணிகள் தற்போது துரிதப் படுத்தப்பட்டுள்ளன. தனியார் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்படும் இந்தப் புனரமைப்புப் பணியில் பெண் தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் அதற்கான சீருடை அணிந்து பணியில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# பெண்களுக்காக நியாயம் கேட்க நீதிமன்றம் செல்லவும் தயார்

## ஆதாரங்கள் உள்ளன என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக்.13

சட்டத்தின் முன்னால் பெண்களுக்காக நியாயம் கேட்கத் தயாராக இருக்கின்றேன். சட்டம் இந்த விடயம் தொடர்பாக எப்போது என்னை அழைக்கும் என்று காத்திருக்கின்றேன். நீதிமன்றம் செல்லுமிடத்து எனக்கு அனுப்பப்பட்ட அனைத்து முறைப்பாடுகளையும் மற்றும் ஆதாரங்களையும் சமர்ப்பிப்பேன்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். பலாலி ஆசிரியர் கலாசாலை பகிஷ்கரிப்பு தொடர்பாகக் கூறும் போதே இதனைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பலாலி ஆசிரியர் கலாசாலை யில் பகிஷ்கரிப்பு செய்கிறார் கள். இருப்பினும் இதுவரை எனக்கு, அங்கு கற்கும் எந்தப் பெண்ணும் தனிப்பட்ட ரீதியில் இவ்வாறு தமக்கு எதுவும் நடக்கவில்லை என்று கூறவில்லை. அவர்கள் நிர்வாகத்தினரால் பழிவாங்கப்படலாம் என்ற பயத் தால் கற்றல் நடவடிக்கைகளை புறக்கணிக்கலாம். தமக்கு இது போன்ற சம்பவங்கள் நடக்கவில்லை என்று அங்கு வைத்து அவர்களால் சொல்ல முடியாது.

இதுவரையில் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறுகின்றன என்ற போது மௌனம் சாதித்தவர்கள் இப்போது மட்டும் ஏன் அறிக்கை விடுகிறார்கள். இதுவரை 175 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வைத் தியசாலை அறிக்கை தெரிவிக்கின்றது. இதை செய்தது யார்? இவையனைத்தும் நிகழும் போது பேசாமல் இருந்து விட்டு இப்போது மட்டும் கோபப் படுவது ஏன்?

என்னிடம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பலவற்றுக்கு வீடியோ மற்றும் ஒலி ஆதாரங்கள் உண்டு. நீதிமன்றத்தில் அவை அனைத்தும் சமர்ப்பித்துப் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவேன்- என்றார். (ம-15)

## கடந்த 9 மாதங்களில் 275 பேருக்கு காசநோய் தாக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டின் கடந்த ஒன்பது மாத காலத்தில் 275 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக காசநோய் வைத்திய கட்டுப்பாட்டு அதிகாரி எஸ். யமுனானந்தா தெரிவித்தார்.

இந்த வைத்திய பரிசோதனையின் போது 96 பேருக்குச் சளியில் கிருமி காணப்பட் டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியான இருமல், சளி காணப்படுவோர் சளிப் பரிசோதனை மேற்கொள்வது அவசியமாகும்.

பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையம் மற்றும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற அரசினர் வைத்தியசாலைகளில் இந்த சளிப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும்- என்று கூறினார். (ம-26)

# சிறந்த அதிமேற்றர அஞ்சல் அலுவலகமாக யாழ்.பிரதம தபாலகம் தேசிய ரீதியில் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.13

137 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள தபாலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியில் சிறந்த அதிமேற்றர அஞ்சல் அலுவலகமாக யாழ். பிரதம தபாலகம் வெற்றி பெற்றுள்ளது. சிறந்த இரண்டாம் தர அஞ்சல் அலுவலகப் பிரிவில் கைதடி தபாலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.



தபாலகத்தின் தூய்மை, அதன் வளர்ச்சி மற்றும் தபாலக கட்டடத்தின் அழகு, நிர்வாகக் கட்டமைப்பு, பணியாளர்களின் அயராத சேவை போன்றவற்றின் அடிப்படையில் யாழ். பிரதம தபாலகம் சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமது தபாலகம் வெற்றி பெற்றிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக வட மாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் என். இரத்தினசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு அஞ்சல் தலைமையகத்தில் நடைபெற்ற சர்வதேச அஞ்சல் தின விழாவில் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்ட பிரதமர் டி.எம். ஜயரெட்ணவினால் இந்த விருது அஞ்சல்மா அதிபரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகத் தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர் ணான்டோ உட்படப் பலர் கலந்து கொண்டனர். (உ-26-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் படைப்புக்கள் ஊடாக மலையக மக்களை உயர்நிலைப்படுத்தியவர் பேராசிரியர் நந்தி

## சென்னைப் பல்கலை பேராசிரியர் அரசு கருத்து

சுன்னாகம், ஒக்.13

மலையகத் தமிழர்களைச் சாதாரண மனிதர்களாகக் கூட யாழ்ப்பாணத் தமிழர்கள் பார்க்காத மனோநிலை கொண்டிருந்த வேளையில், அந்தச் சூழலில் பிறந்த நந்தி மலையக மக்களைத் தம் படைப்புக்கள் மூலம் மிக உயர்ந்த நிலையில் வெளிக் காட்டினார். இவ்வாறு தெரிவித்தார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழிலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு.

பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவுப் பேருரை நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேருரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றும்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

18 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தமிழ்நாட்டிலிருந்து ஆரம்பமான குடிபெயர்தலின் வரலாறு சோகமானதாகும். இந்தக் காலத்தில் தமிழர்கள் தெற்கு, தென் மேற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் குடிபெயர்ந்தார்கள்.

இவ்வாறான பெயர்தல் பெருந் தோட்டக் கூலிகளாக தமிழர்களைக் கட்டமைத்த வரலாறு ஆனது. தமிழன் என்றால் கூலி என அடையாளப்படுத்தப்பட்டதாக அந்த வரலாறு அமைந்தது. ஒக்ஸ்போர்ட் அகராதியில் தொழிலாளர் (labour) என்ற சொல்லுக்கு இணையாகக் 'கூலி' என்ற சொல்லும் இடம்பெற இந்த வரலாறு வழி கோலியது. இலங்கையின் மலையகத் தேயி லைத் தோட்டங்களிலும், மலேசிய இறப்பர் தோட்டங்களிலும் இவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

இத்தகைய தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை நந்தி மிகச் சிறந்த புனைகதைகளாகத் தந்துள்ளார். தமிழ்ப் புனைகதைத் துறையில் அவரது பங்களிப்பு உயர்வானதாகும். நந்தி ஒரு மருத்துவராக, மருத்துவப் பேராசிரியராக இருந்தபோதும் சாதாரண மானவர்களது மனோநிலையுடன் அவர்களை நேசித்து, இணைந்து செயற்பட்டிருக்கிறார்- என்றார். (வ-38)

# உலக சனத்தொகை 700 கோடியாகிறது மாத்தறையில் அறிவிப்புப் பலகை

உலக சனத்தொகை எண்ணிக்கை இந்த மாத இறுதி நாளன்று 700 கோடியாகும் என்று ஐக்கிய நாடுகளின் சனத் தொகை நிதியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மாத்தறை நகரில் நேற்று முன்தினம் பெரியளவிலான அறிவிப்புப் பலகையொன்று நிறுவப்பட்டது.

இரண்டு மாடிக் கட்டடமொன்றில் சுமார் 20 அடி உயரமும் 30 அடி அகலமும் கொண்ட இந்தப் பலகையின் திறப்பு விழாவுக்கு மாத்தறை உதவிப் பிரதேசச் செயலாளர் சுசந்த அத்த நாயக்கவும் மாத்தறை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹேரத்தும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உலக சனத்தொகை அதிகரித்துக் கொண்டு போவதால் இயற்கை வளங்கள் அருகிப் போவதை சித்தரிக்கும் வீதி நாட்டியம் ஒன்றும் நடைபெற்றது.(வ-5)

# ஆசிய சிறந்த திரைப்பட விருது சிங்களப் படத்துக்கு

இலங்கையில் செல்வம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட சிங்களத் திரைப்படம் ஒன்று கோலாலம்பூரில் இடம்பெற்ற மலேசியத் திரைப்பட விருது வழங்கும் விழாவில் விருது பெற்றுள்ளது.

சஞ்சைய லீலாரத்ன இயக்கிய 'செல்வம்' என்ற திரைப்படம் இந்த வருடத்துக்கான ஆசியாவின் சிறந்த திரைப்படத்துக்கான விருதை பெற்றுள்ளது. அத்துடன் சஞ்சைய லீலாரத்ன வளர்ந்து வரும் சிறந்த இயக்குநர் என்ற விருதையும் வென்றுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற 30 வருட யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. 30 வருட யுத்தத்தின் பின் இலங்கையில் செல்வம் தேவை என்பதை வலியுறுத்துவதாக இந்தப்படம் அமைந்துள்ளது. இந்தப்படத்தை மொஹமட் முஜாய்தீன் தயாரித்துள்ளதுடன் ரோகண வீரசிங்க திரைப்படத்துக்கு இசை அமைத்துள்ளார். (வ)

# தமிழ் பெண்களின் தாலி அறுக்கும் சம்பவங்கள் பிரிட்டனில் அதிகரிப்பு

பிரிட்டனின் சில பகுதிகளில் கடந்த சில தினங்களில் 3 தாலிக்கொடி அறுக்கும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக சில சம்பவங்கள் பட்டப் பகலில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பவுணின் விலை முன்னெப்போதும் இல்லாது உயர்வடைந்துள் ளது. இதனை சர்வதேச தொலைக் காட்சிகள் பலவும் நாளாந்தம் ஒளிபரப்பி வருகின்றன. பல தமிழ் பெண்கள் தமது தாலிக் கொடியை எந்தநேரமும் அணிந்திருப்பது இல்லை. கோயில் அல்லது நன்மையான நிகழ்வுகளுக்குச் செல்லும் போதே அதை அணிவது வழக்கம்.

ஆனால் சில பெண்கள் தாலிக் கொடியை எப்போதும் அணிவது வழக்கம். அவர்கள் அன்றாட தேவைகளுக்கு வெளியே செல் லும் போது கூட அதனை அணிந்தே செல்கிறார்கள். இவர்களையே தற்போது ஒரு கும்பல் குறிவைத்துள்ளது என்று நம்பப் படுகிறது.

எனவே திருடர்களுக்கும் இது போன்று திட்டமிட்டு செயற்படும் குழுக்களுக்கும் அதிக பணம் கிடைக்கிறது. அண்மையில் வால்த்தம்ஸ்ரோ பகுதியில் குழந்தை ஒன்றை தள்ளு வண் டியில் வைத்து தள்ளி வந்த தாய் ஒருவரை இந்தக் கும்பல் குறி வைத்துள்ளது. திட்டமிட்ட ரீதியில் குழந்தையின் நகைகளைத் திருட முனைய அதனைத் தடுக்கும் நோக்கில் அவர் குனிந்த வேளை பின் புறத்தில் நின்றவர் தாயின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியை அறுத்துள்ளார். இதன்போது ஏற்பட்ட போராட்டத்தில் அந்தத் தமிழ் பெண் மீது இந்தக் கும்பல் சரமாரியாகத் தாக்கியுள்ளது. ஈவிரக்க மற்ற வகையில் மூக்கு மற்றும் கண்களை நோக்கித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் மூக்கில் இருந்து ரத்தம் சிந்த அந்தப் பெண் நிலத்தில் வீழ்ந்திருக்கிறார்.

இதேபோல மற்றுமொரு சம்பவம் என்பீல்ட் பகுதியில் நடைபெற்றுள்ளது. கிடைக்கப் பெற்ற தகவலின்படி ஆபிரிக்க நாட்டவர்கள் சிலரே இவ்வா றான செயலில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## வல்லை வெளிக்கு நல்ல காலம் வருவதற்கு வாய்ப்புண்டா...?

வல்லைவெளியைக் கடந்துபோகும் தருணங்களில் எல்லாம் ஈழத்து இலக்கிய மூலவர் இலங்கையர்கோன் எழுதிய வெள்ளிப் பாதசரம் சிறுகதைதான் ஞாபகத்துக்கு வரும். வல்லிபுரக் கோவில் திருவிழாவுக்கு மாட்டுவண்டிலில் சென்று திரும்பும் ஒரு இளந் தம்பதியினரின் ஊடலும் கூடலுமே அக்கதை. வல்லிபுரக் கோவில் திருவிழா என்றால் தூர இடங்களில் இருந்து பக்தர்கள் புறப்பட்டு, திருவிழா முடியும் வரை அங்கு தங்கி நின்று வருவார்கள். இறைவனைத் தியானிப்பது, அங்கு நிறுவப்பட்ட மடங்களில் சமைத்துண்பது, மடங்களில் உறங்கு வது என்று அவர்களது நிகழ்ச்சி நிரல் காணப்படும். கடல் தீர்த்தமாடித்தான் வீட்டிற்கு வருவார்கள். இது பழங்கதை.

வெள்ளிப் பாதசரம் கதையில் வல்லைவெளியின் இரு மருங்கிலும் பனைகள் பேய்கள் போலத் தோற்றம் காட்டி நின்றதாக கதாசிரியர் எழுதியுள்ளார். இன்றோ அது மூளியாக நிற்கிறது. வெயில்தான் சுட்டெரிக்கிறது. வல்லைவெளியை ஒரு நகரமாகக் கட்டியெழுப்புவது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நன்செய் நிலங்களிலும், பழைய பூங்கா போன்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களிலும் கட்டடங்களை அமைக்க முட்டி மோதுவோர் வல்லைவெளியில் கட்டடங்களை நிறுவுவது பற்றிச் சிந்திப்பது நல்லது.

வல்லைவெளி எனப்படும் கடல் நீரேரிப் பகுதி தொண்டமானாறு பாயும் பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் தொண்டமானாற்றின் கரைகளை எல்லைப் படுத்தி அணை கட்ட வேண்டும். அணையின் தென்புறத்தேயுள்ள நிலத்தை உயர்த்த வேண்டும். தென்புறமானது யாழ்ப்பாண நகரத்துடன் தொடர்பு கொள்ள வசதியாக அமைந்துள்ளதுடன் குடியிருப்பு நிலங்களின் தொடர்ச்சியாகவும் அமைந்துள்ளது.. அத்துடன் பிரதேசத்தில் குடியிருப்போ, கட்டடத் தொகுதிகளோ அமையும் பட்சத்தில் குடிநீர்த் தேவை அதிகமாக எழும். இதற்கு வாய்ப்பாக நிலாவரைக் கிணறு காணப்படுகிறது. திருகோணமலை நகரத்தின் பெரும்பாலான பிரதேசங்களின் குடிநீர்த் தேவையை கந்தளாய்க் குளத்து நீரே பூர்த்தி செய்வது குறிப்பிடத்தக்கது. நிலாவரைக் கிணறு வல்லைவெளியிலிருந்து தென்மேற்கே சில கிலோ மீற்றர்கள் தொலைவிலேயே உள்ளது.

சிறந்த முறையில் விரிவாக்கப்பட்ட வீதி அமைப்புக் காணப்படும் இந்தப் பிரதேசத்தில் அலுவலகத் தொகுதிகள், விருந்தினர் விடுதி, கடைத் தொகுதிகள் அமைக்கப்படும்போது பிரதேசமும் அபிவிருத்தி காணும். அதேவேளை பிரதேசத்தின் முக்கியத்துவமும் அதிகரிக்கும். நகரத்தில் ஒண்டிக் குடித்தனம் நடத்தும் மாகாண அலுவலகங்களின் நடைமுறைப் பிரச்சினைகளும் தீரும்.

இந்தப் பிரதேச அபிவிருத்தியில் சமகாலத்தில் சூழலியல் அபிவிருத்தியும் செய்யப்பட வேண்டும். குறிப்பாக பிரதேசத்தை எல்லைப்படுத்தும் வகையில் சவுக்க மரங்களை நட வேண்டும். அத்துடன் தென்னை, பனை மரங்களையும் நடவேண்டும். இவை இந்தப் பிரதேசத்தில் வளரக் கூடிய சாதகமான மரங்கள். காற்றுத் தடையாகவும், வெப்பச் சீராக்கிகளாகவும் இவை செயற்படும். சிறந்த சுற்றுலா மையமாக இந்தப் பிரதேசத்தை எதிர்காலத்தில் மாற்றியமைப்பதற்கும் திட்டமிட்ட மரநடுகை உதவும்.

அபிவிருத்தியின் விளைவாக இந்தப் பிரதேசம் குப்பைகள் குவியும் இடமாக மாறிவிடலாகாது. கடலுயிரிகளின் சமநிலை,பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்படாதவாறு செயற்பட வேண்டியது அவசியம்.

நீண்ட காலத் திட்டமிடலில் தொண்டமானாற்றை, - கடலூடான தொடர்பைத் தடுப்பணைகள் மூலம் நீக்குவதன் மூலம் - நன்னீர் ஆறாக மாற்றியமைப்பின் பிரதேசம் மேலும் வளமுற்றுச் சிறப்புறும். அதற்குரிய சாதகங்கள் தொடர்பாக வடக்கின் அபிவிருத்தி குறித்து தம்பட்டம் அடிக்கும் அரசாங்கம் ஆராயலாமே.

உப்புக் காற்றில் வேதனைகள் சுமந்து வந்த பாடல்கள் இழைந்த வல்லைவெளியில் வசந்தப் பாடல்கள் துளிர்க்கும் நாள் எந்நாளோ?

விழிச்சான் குஞ்சு.

# தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதாக என்னிடம் வாக்குறுதி தந்துள்ளார்மஹிந்த

## ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் கூறுகிறார்



கொழும்பு,ஒக்.13

தமிழ் மக்களின் மனித உரிமைகளை உறுதிப்படுத்தி, அதனைப் பாதுகாக்க ஊக்குவிப்பதாகவும், நீதியை நிலைநாட்டுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

நோர்வேஜிய ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா நிபுணர்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

நிபுணர்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை உள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் நிபுணர்குழுவின் அறிக்கையை ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக்கும், மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனுப்புவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்துக்கு வந்த இலங்கை ஜனாதிபதியுடன் இந்த விவகாரம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. (ச)

# ‘ஓசன்லேடி’ யை விற்க கனேடிய அரசு நடவடிக்கை



கொழும்பு,ஒக்.13

2009ஆம் ஆண்டு கனடாவுக்கு 76 அகதிகளுடன் சென்றடைந்த ஓசன்லேடி கப்பலை விற்பனை செய்யக் கனேடிய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தக் கப்பலின் உண்மையான உரிமையாளரைக் கண்டு பிடிக்க முடியாததாலும், அதனை உரிமை கோரி யாருமே இன்னமும் வராததாலும் அந்தக் கப்பலை விற்க முடிவு செய்த கனடா அதற்கான விலையாக 8 லட்சம் கனேடிய டொலர்களைக் கோரியுள்ளது.

ஓசன் லேடி என்ற பெயரில் கப்பல் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைத் தேடியபோது அப்படி அது பதிவு செய்யப்படவில்லை. இதனையடுத்து இடம்பெற்ற விசாரணையின்போது பிலிப்பைன்ஸின் சண்சிப் கடற்சேவை நிறுவனமே உரிமையாளர் என்ற ரீதியில் 243 ஆயிரம் டொலர்கள் அனுமதிக் கட்டணமாகவும், 2.4 மில்லியன் டொலர்கள் கப்பலை இவ்வளவு காலமும் கப்பல் தளத்தில் நிறுத்தி வைத்ததற்கான கட்டணமாகவும், 5 மில்லியன் டொலர்கள் நம்பிக்கை வைப்பு முற்பணமாகவும் கோரப்பட்டிருந்தது.

இந்த சண்சிப் கடற்சேவை நிறுவனம் இந்தக் கப்பலின் உரிமையாளர் அல்ல என்பதை தகுந்த ஆதாரங்களோடு நிரூபித்ததையடுத்தே இந்தக் கப்பலை விற்பனை செய்ய கனடா உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கப்பலை வாங்குபவர் யாராக இருந்தாலும் கனேடிய நீதிமன்றம் இந்தக் கப்பலை அந்த நபர்களுக்கு விற்கலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்த பின்பே கப்பல் கைமாற்றம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஓட்டோ சாரதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஒக்.13

முன்பள்ளிச் சிறுமியொருவரை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் மருதானை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஓட்டோ சாரதியொருவர் மாளிகாகந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் மருதானை பொலிஸில் செய்த முறைப்பாட்டில், சந்தேக நபரின் ஓட்டோவில் தனது பிள்ளை பாடசாலைக்கு செல்வது வழக்கம் என்று தெரிவித்துள்ளார். சம்பவதினம் ஆளரவமற்ற இடமொன்றில் வைத்து சந்தேகநபர் சிறுமிமீது பலாத்காரம் புரிந்துள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பணத்தைப் பெறுவதற்காக ஜனாதிபதிக்கு தண்டனையா?

## பஸில் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு,ஒக்.13

வெளிநாட்டு பணத்துக்காக சிலர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முயற்சித்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நுகேகொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

டொலர்களுக்காகவும், யூரோக்களுக்காகவும் இவ்வாறு ஒரு சிலர் ஜனாதிபதியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த தீவிரம் காட்டுகின்றனர்.

முப்பது ஆண்டுகளாக நாட்டைப் பீடித்திருந்த பயங்கரவாதத்திலிருந்து மக்களை விடுவித்து, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துவரும் தேசிய தலைவனுக்கு எதிராக சிலர் சதித்திட்டங்களை தீட்டி வருகின்றனர்.

பல்வேறு வழிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் சிலர் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 ஒக்ரோபர் 2011 வியாழக்கிழமை

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து கிருஷ்ணபுரத்தை பிரித்தெடுக்க வேண்டாம்

## கிளிநொச்சி அரச அதிபருக்குக் கடிதம்

கிளிநொச்சி, ஒக்.13

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டதும் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ளதுமான கிருஷ்ணபுரம் கிராமத்தைப் புதிதாகத் தோற்றம் பெறவுள்ள அக்கராயன் பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்க வேண்டாமெனத் தெரிவித்து கிருஷ்ணபுரம் கிராம மக்கள் கிருஷ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்கள்.

இந்தக் கடிதம் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக கிருஷ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தாலும், மக்களாலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கும் எமது கிருஷ்ணபுரம் கிராமத்துக்கும் இடையே உள்ள தூரம் மூன்று கிலோமீற்றர் ஆகும். ஆனால் எமது கிராமத்துக்கும் அக்கராயனுக்கும் இடையே உள்ள தூரம் 11 கிலோ மீற்றர் ஆகும். போக்குவரத்து வசதி செய்து கொடுத்தாலும் எமது மக்கள் தமது தேவைகளுக்கென அக்கராயன் செல்வது கடினமாகவே இருக்கும்.

மக்கள் தேவைக்கும், சேவைக்குமே அலுவலகம் அமைய வேண்டுமேயொழிய அலுவலகத்துக்காக மக்கள் அல்ல என்பதே எமது கருத்து.

முறிப்புக்குளத்துக்கு அப்பால் உள்ள கிராமங்களை அக்கராயன் பிரதேச செயலகத்துடன் இணைத்து அவர்களுக்குச் சேவையாற்றுவதே சிறந்தது.

எனவே எக்காரணம் கொண்டும் எம்மைக் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து பிரித்து வேறு இடத்துடன் இணைக்க வேண்டாம் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று அக் கடிதத்தில் உள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம். சிறீதரன், முருகேசு சந்திரகுமார் ஆகியோருக்கும் கரைச்சிப் பிரதேச செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக கிருஷ்ணபுரம் கிராம மக்களால் கூறப்படுகின்றது.

(க-426)

# திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் இன்று நடைபெறும் மூன்று நிகழ்வுகள்

மல்லாவி ஒக்.13

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் இன்று மூன்று நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் முற்பகல் 11 மணியளவில் பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இதில் துணுக்காய்க் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்) கடமையாற்றித் தமது 40 வருடகால கல்விச் சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் ஓய்வு பெறும் சி.இராஜேஸ்வரனின் பிரிவுபசார வைபவமும் ஜனாதிபதியால் பிரதீபா பிரபா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட திருமுறிகண்டி இந்து வித்தியாலய அதிபர் ஆ.சூசைநாதருக்குப் பாராட்டு விழாவும் மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வும் இணைந்து நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன், முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மேலும் கொக்காவில் இராணுவ அதிகாரி எஸ்.பீரிஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் அயல் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், திருமுறிகண்டி வர்த்தக சங்கத்தினர், பெற்றோர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-425)

# வெற்றுக் காணிகளில் புதிதாக முளைக்கும் இராணுவ முகாம்கள்

மன்னார், ஒக்.13

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள வெற்றுக் காணிகளில் இராணுவத்தினர் புதிய முகாம்களை அமைத்து வருகின்றனர்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள இரண்டாம் கட்டைச் சந்தி மற்றும் கரிசல் பகுதியில் உள்ள அடர்ந்த காடுகளைக் கொண்ட வெற்றுக் காணிகளிலேயே மேற்படி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வரும் நிலையில் இவை தற்போது மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றமை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மக்களின் இயல்பு வாழ்க்கை மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இத்தகைய இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்படுகின்றமை ஏன் என்ற கேள்வியும் மக்களிடையே எழுந்துள்ளது. (க-601)

## உரிய கௌரவம்...



சாதனை தொடரும்: துணுக்காய் கல்வி வலயத்தில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 24 மாணவர்கள் கணினிக் கல்வி நிலையமொன்றால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் அமர்ந்திருக்கின்றனர். (425)

# துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதீபா பிரபா விருது பெற்றவர்கள்

**அதிபர்கள்**

101-200 - கந்தசாமி ஜெயமோகன் (நட்டாங்கண்டல். அ.த.க.பாடசாலை).

201-300- ஆசீர்வாதம் சூசைநாதர் (திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்.

301-1000 - துரைராசா ஜேசுதானந்தன் (மல்லாவி மத்திய கல்லூரி).

**ஆசிரியர்கள்**

**ஆரம்பக்கல்வி**

யோகரஞ்சினி தவச்செல்வம் (பாலிநகர் மகாவித்தியாலம்).

**இடைநிலைக்கல்வி** -

இராசேந்திரம் நிக்சன் (யோகபுரம் மகாவித்தியாலயம்), சுந்தரலிங்கம் கஜேந்திரன் (நட்டாங்கண்டல் அ.த.க.பா)

**உயர்தரம்**

இராமநாதர் இன்பதாஸ் (யோகபுரம் மகாவித்தியாலயம்)

இந்த விவரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் வழங்கியுள்ளார். (க-425)

# முன்பள்ளி ஆசிரியர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, ஒக்.13

கிளிநொச்சி, முரசுமோட்டையில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் முன்பள்ளியில் ஆசிரியர் தின நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்வுகள் கடந்த 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

நிகழ்வின் முன்னதாக ஆசிரியர்கள் முரசுமோட்டை வைரவர் ஆலய முன்றிலில் இருந்து அழைத்துவரப்பட்டனர். இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கிராம மட்ட அமைப்பின் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(க-6)

# கிளிநொச்சி மாவட்ட பெண்களுக்காக மகளிர் அபிவிருத்தி அமைப்பு உதயம்

நாவற்குழி, ஒக்.13

கிளிநொச்சி மாவட்ட மகளிர் அபிவிருத்தி அமைப்பு அண்மையில் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி த.கிருபாகரன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளான இ.நவநீதன், பொறியியலாளர் எஸ்.கடம்பசீலன், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி கே.தமிழ்ச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் அனைத்து சமூக சேவை, கிராம அபிவிருத்தி அதிகாரிகளும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப உறுப்பினர்கள் 200 பேரும் யுனி செவ் சமூக சேவை செயற்றிட்ட சமூகசேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தி அமைப்பின் காப்பாளராக அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

கண்டாவளையைச் சேர்ந்த ரி.செல்வராணி தலைவராகவும் பூநகரியைச் சேர்ந்த கிறிஸ்ரீனம்மா செயலாளராகவும் கரைச்சியைச் சேர்ந்த சி.வி.தவசிறி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய பதவிகளுக்கும் நிர்வாகசபை உறுப்பினர்களுமாக 19பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இந்த அமைப்புக்கு நான்கு மில்லயன் ரூபாவை வழங்கவுள்ளது. அதன் மூலமாக அங்கத்தவர்களுக்குச் சிறுவட்டியுடன் மீள்சுழற்சிக் கடன் வழங்கப்பட்டு வறுமையில் வாடும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவுள்ளது. (க-121)

# யுத்தத்தால் உறவுகளை இழந்த நிலையில் துயரத்துடன் வேதனமில்லாது கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள்

கிளிநொச்சி ஒக்.13

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 370 முன்பள்ளி ஆசிரியர்களில் 65 பேர் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் உறவுகளை இழந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தில் 86 முன்பள்ளிகளும் கண்டாவளை பிரதேசத்தில 36 முன்பள்ளிகளும் பூநகரி பிரதேசத்தில் 43 முன்பள்ளிகளும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 18 முன்பள்ளிகளும் என 182 முன்பள்ளிகளில் சுமார் 6946 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி முன்பள்ளிகளில் 370 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் 65 ஆசிரியர் தமது உடன்பிறப்புக்களையும் உறவினர்கள், பிள்ளைகள் எனப் பலரையும் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இதனைவிட இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் பலர் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக வேதனங்கள் எதுவும் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மிகுந்த வேதனையுடன் வாழ்ந்து வருகின்றனர். (க-6)

# வவுனியா நகரில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள்

வவுனியா, ஒக்.13

வவுனியா நகர்ப் பகுதிகள் நகர்ப் பகுதிகளை அண்டிய கிராமப் புறங்களில் தினமும் வீதி விபத்துக்களில் எண்ணிக்கை அதிகரித்து வருவதை வவுனியா பொது வைத்தியசாலையின் தரவுகள் மூலம் தெரியவருகின்றன. இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்ரெம்பர் வரை 791 பேர் வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆனால், 2007 ஆம் ஆண்டு 156 பேரும், 2008 ஆம் ஆண்டு 462 பேரும், 2009 ஆம் ஆண்டு 317 பேரும் 2010 ஆம் ஆண்டு 801 பேரும் வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ள னர். எனவே தினமும் வீதி விபத்துக்கள் அதி கரித்து வருவதால் வீதியால் பயணிப்போர் விழிப்புணர்வுடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமெனக் கூறப்படுகின்றது. (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்வி வலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை

## வெளிமாவட்ட ஆசிரியர்கள் வராமையே காரணமாம்

முல்லைத்தீவு,ஒக்.13

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பல பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 57 பாடசாலைகளில் சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் 615 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றபோதும் இந்த வலயத்துக்குக் கீழ் இயங்கும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி போன்ற உயர்தரப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான பாடரீதியிலான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதனைவிட ஏனைய ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் நடுத்தரப் பாடசாலைகளிலும் பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இவ்வாறு பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறையால் பின் தங்கிய கிராமத்தில் வாழும் மாணவர்களின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகத் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் இந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய முப்பத்தி ஏழு மாணவர்கள் வரை உள்ளனர். ஆனால் இந்தப் பாடசாலைகளில் கணித ஆசிரியர் எவரும் இல்லை எனவும் பிற இடத்துக்குச் சென்று மேலதிக கல்வியைத் தொடரக் கூடிய வசதிகள் இல்லை எனவும் கடந்த ஆண்டும் இந்தப் பாடசாலையில் கணித ஆசிரியர் இல்லாத நிலையில் ஏழு மாணவர்கள் தமது உயர்தரக் கல்விக்கான வாய்ப்பை இழந்துள்ளனர் எனவும் இந்தப் பாடசாலைச் சமூகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

துணுக்காய் வலயப் பாடசாலையில் போதிய ஆசிரிய வளம் இல்லை என்பது உண்மைதான். குறிப்பாக ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்புக்களில் உயிரியல் ஆசிரியர் இல்லை. பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியர் இல்லை. பாலிநகர் பாடசாலையில் புவியியல் ஆசிரியர் இல்லை. இதைப்போன்றே கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலையில் கணித ஆசிரியர் நீண்டகாலமாக இல்லை. இதைப்போன்றே ஆரம்பப் பிரிவுகளுக்கும் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வெளிமாவட்டங்களிலிருந்து ஆசிரியர்கள் இங்கு வருவதற்குப் பின்னடிப்பதே இதற்குக் காரணமாகும்.

இங்கு நான்கு வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அவர்களது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் வழங்குகின்றோம். ஆனால் இவர்களின் இடங்களுக்கு வருவதற்கு எவரும் முன்வருவதில்லை.

தற்போது வசதிகள் ஓரளவு கிடைக்கின்றபோதிலும் இங்கு வருவதற்கு வெளிமாவட்ட ஆசிரியர்கள் தயங்குகின்றனர்.

பல வருடங்களாக வேதனமின்றிக் கடமையாற்றும் தொண்டராசிரியர்களாலேயே ஆரம்ப வகுப்புக்கள் ஓரளவு திருப்தியான முறையில் இயங்குகின்றன என்றார்.

(க-6)

## ஊர்கோலம்...



முதல் மரியாதை: துணுக்காய் கல்வி வலயத்தினரால் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பௌர்ணமி கலைவிழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (425)

# வேப்பங்குளம் அன்பகம் இல்லத்தில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம்



வவுனியா, ஒக்.13

வவுனியா வேப்பங்குளத்தில் அமைந்துள்ள இந்து அன்பகம் சிறுவர் இல்லத்தில் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

வவுனியா ஸ்ரீலஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலய மண்டபத்தில் சாமி அம்மா ஜெயராணி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஸ்ரீ ரெலோ அமைப்பின் தலை வர் உதயராசா இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். பின்னர் ஆலய மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

தற்போது எமது பிரதேசங்களில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றமை மிகப் பொருத்தமாக அமைந்துள்ளதாக பலரும் கருத்தத் தெரிவித்துள்ளனர். (க-86)

# அக்கராயன் அ.த.க.பாடசாலையும் இரு பிரிவுகளாக இனிமேல் இயங்கும்

அக்கராயன், ஒக்.13

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் அ.த.க.பாடசாலையின் ஆரம்ப பிரிவு தனிப்பாடசாலையாக இயங்கவுள்ளது.

1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இந்தப் பாடசாலை உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதால் இதன் ஆரம்பப் பிரிவும் இடைநிலைப் பிரிவும் இருவெவ்வேறு பாடசாலைகளாக இயங்கவுள்ளன.

தற்போது சுமார் 800 மாணவர்கள் இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். ஆனால் அடிப்படை வசதிகள் குறைந்த அளவிலேயே உள்ளன. மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமமொன்றில் இந்தப் பாடசாலை அமைந்திருப்பதால் இதன் அபிவிருத்தியும் மந்தகதியிலேயே நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் 1000 பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பாடசாலையும் உள்வாங்கப்பட்டுள்ளமை இந்தப் பாடசாலை அமைந்துள்ள கோணாவில் கிராம மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(க-410)

# வன்னியில் சேதமுற்ற 79 பாடசாலைகள் ரூ. 187 மில்லியன் செலவில் புனரமைப்பு

கிளிநொச்சி,ஒக்13

கடந்த யுத்தத்தின்போது வன்னிப்பிரதேசத்தில் சேதமடைந்த 79 பாடசாலைகள் இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி , முல்லைத்தீவு, துணுக்காய்,வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 79 பாடசாலைகளே 187 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் சேதத்தின் அளவுக்கேற்றவாறுஒவ்வொரு பாடசாலைக்கும் அரை மில்லியன் தொடக்கம் ஏழு மில்லியன் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகளை வடமாகாணக் கல்வி அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

மேலும் சேதமடைந்த பாடசாலைகளின் வேலைகள் முடிவடையும் பட்சத்தில் 42 ஆயிரம் மாணவர்களும் , 2 ஆயிரத்து 400 இற்கும்மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர்களும் பயனடைவார்கள். (க)

# கால ஒழுங்கின் பிரகாரம் செயற்பட்டால் அதிக நெல் விளைச்சலைப் பெறலாம்

## கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் அறிவுரை

அக்கராயன், ஒக்.13

நெற்செய்கைக்கெனத் தீர்மானிக்கப்படும் கால ஒழுங்கின் பிரகாரம் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதன் மூலம் அதிக விளைச்சலைப் பெறமுடியுமென கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் நடைபெற்ற அக்கராயன் குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கையில் ஈடுபடுதல் தொடர்பான கூட்டத்தில் தலைமையுரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். விவசாயக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும். நெற்செய்கைக்கென வகுக்கப்படும் கால அட்டவணையை விவசாயிகள் ஒழுங்காகக் கடைப் பிடிப்பதன் மூலம் ஒழுங்குகள் மற்றும் பயன்களைப் பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-410)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரையிலும் 37 ஆயிரம் பேர் மீளக்குடியமராத நிலையில்

கிளிநொச்சி, ஒக்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் 91ஆயிரத்து 66 பேர் வரையில் இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளதாக அரச செயலகப் புள்ளி விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளின் கீழ் இதுவரை 28 ஆயிரத்து 795 குடும்பங்களைச் சேர்ந்த 91 ஆயிரத்து 66 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இதேவேளை இடப்பெயர்வின் பாதிப்புக்களுக்கு உள்ளாகிய சுமார் 2 ஆயிரத்து 286 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 512 பேர் மீளக்குடியமர்வு செய்யப்படாமல் செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இதைவிட மேலும் அதிக தொகையானவர்கள் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து பிற மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது 37 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலயங்களில் மிருக பலியிடுதல்

## ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றே

ஆலயங்களில் மிருகபலியிடுதல் என்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தொன்றே. அது எமது கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்ததாக மாறிவிட்டது.

எமது முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மிருக பலியிடுதல் என்ற நடைமுறை எந்த வழியிலும் தவறாக முடியாது. முன்னோர்கள் எதனையும் சீராகத் திட்டமிட்டு அதனை ஒரு வழிமுறையாகப் பின்பற்றி வந்தார்கள்.

அத்தகைய நடைமுறைகளை மாற்ற முனைவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று.

ஓர் இனத்தின் கலாசாரப் பண்பை நாம் மாற்றியமைக்க விடுவோரே ஆலயங்களுக்குள் பாதணிகளுடன் செல்லக்கூடாது என்று முன்னோர்கள் சொன்னதன் அடிப்படையில் காலம் காலமாக பின்பற்றி வருகின்றோம். அதை மாற்றியமைக்கவில்லையோ. இவ்வாறு இருக்கையில் மிருகபலியிடுதலை ஏன் மாற்றியமைக்க வேண்டும்.

ஓர் இனக்குழுமத்தின் பாரம்பரிய வழிபாட்டு முறையை மாற்ற முயல்வது ஏன்? ஆகவே எமது பாரம்பரிய பழக்கவழக்கங்களின் பிரகாரம் மிருகபலியிடுதல் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்று.

**செ.ரதீஸ், அரியாலை.**

## ஏற்றுக் கொள்ள முடியாது

ஆன்மிகத்தை மக்கள் மத்தியில் வளர்க்கும் ஆலயங்களிலே மிருகபலி என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகவே காணப்படுகிறது.

மனிதனாகப் பிறந்தவர்களிடம் இரக்கப் பண்பு இருக்க வேண்டும். ஆனால் மிருகபலி இடுபவர்களிடம் சிறிதளவும் இரக்கக் குணம் இருக்கவே முடியாது.

மிருகபலி என்று கூறிக்கொண்டு உயிர்களைக் கொலை செய்வது கண்டிக்கத்தக்க ஒரு விடயமே ஆகும். புனிதமான ஆலயங்களில் மிருகபலியிடுவதால் அந்த ஆலயமே புனிதமற்றுப் போகிறது.

ஓர் உயிரைக் கொல்வது எவ்வளவு பாவகரமான செயலாகும். அந்தச் செயலை செய்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. பலியிட்ட உயிர் மீண்டும் உயிர்பெற்று வருமா? கூறுங்கள். இது எவ்வளவு இழிவான செயல். மிருகபலியிடுதலை யாராலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

**வி.மதுமதி, மீசாலை வீரசிங்கம்.ம.வி.**



# தற்கொலை செய்யும் பறவைகள்

இந்தியாவின் அஸ்லாம் மாநிலத்தில் 'ஜாதிங்கா' என்றொரு கிராமம் உள்ளது. சுமார் 2 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள இந்தச் சிறிய கிராமத்தில் 1200 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு சில மாதங்களில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு பறவையினங்கள் இந்தக் கிராமத்துக்கு வந்து நிலத்தில் விழுகின்றன. மனிதர்கள் நெருங்கி வந்தாலும் அவை எழுந்து ஓடுவதில்லை. அந்த இடத்திலேயே கிடந்து உயிர் துறக்கின்றன.

1905 ஆம் ஆண்டில் இருந்து இவ்வாறு நிகழ்ந்து வருவதாக அந்தக் கிராம மக்கள் இது பற்றி ஆராய்ந்து விலங்கியல் அறிஞரான சென்குப்தாவுக்குத் தெரிவித்துள்ளனர். 1905 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு நாள் மாலை காணாமற் போன ஒரு எருமையைத் தேடிச் சென்ற கிராமவாசிகள் காட்டில் வழி தெரியாது சிக்கிக் கொண்டனர். அங்கிருந்து எப்படியாவது விடுபட வேண்டும் என்று தீப்பெட்டியின் துணையோடு முயற்சி செய்த அவர்களைப் பறவைகள் கூட்டம் ஒன்று சூழ்ந்து கொண்டு தாக்கியது. அவர்கள் அவற்றைப் பிடித்து வாட்டி உண்டனர். அன்று முதல் இன்றுவரை இவ்வாறு வரும் பறவைகளை அவர்கள் எளிதாகப் பிடித்துத் தங்கள் உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

ஜாதிங்கா கிராமத்தின் எல்லாப் பகுதிகளிலும் இவ்வாறான தற்கொலைகள் இடம்பெறுவதில்லை. குறித்த ஒரு கிலோமீற்றர் இடைவெளிப் பிரதேசத்தில் மட்டுமே நிகழ்கிறது. மின்சார வெளிச்சம், தீப்பெட்டி என்பவற்றால் கவரப்பட்டு பறவைகள் வந்து விழுகின்றனவா? என்ற ஐயப்பாட்டில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விளக்கு வெளிச்சமுள்ள நேரங்களிலும் அவ்வாறில்லாத வேளைகளிலும் அவை பறந்து வந்து விழுந்து அடிபட்டு உண்ணாவிரதம் இருந்து மடிவது கண்டறியப்பட்டது. வானில் கருமேகங்கள் சூழ்ந்த அந்திப் பொழுது, அடைமழை பெய்து ஓய்ந்த மாலைப்பொழுது, மணிக்கு 30- 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் போது இவ்வாறு பறவைகள் வந்து விழுகின்றன. விழுந்தபின் அசையாமல் கிடக்கின்றன. பகல் வேளைகளில் ஜாதிங்கா கிராமத்தின் சூழலில் எப்பறவையையும் காணமுடியாது என்பது ஓர் அதிசயமாகும். அதைவிட பறவைகளின் இவ்வாறான தற்கொலை முயற்சி விடை காணமுடியாத அதிசயமாகும்.

**ஆத்மிகா பகவத்சிங்கம்,**
**நீர்வேலி தெற்கு.**

### இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**ஆலயங்களில் மிருக பலியிடுதல்**

| ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்று | ☐ | ஏற்றுக் கொள்ள முடியாது | ☐ |
|---|---|---|---|


பெயர்: ..................................
முகவரி: ..................................
அடையாள அட்டை இல.. 
..................................

உங்கள் தீர்ப்புக்களை 27.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இடப்பெயர்வு

சுற்றித் திரிந்த முற்றம்
முற்றும் சூரைப் பற்றையாய்
சுழன்றடித்த தெருக்கள்
இருந்தவிடம் தெரியவில்லை
எல்லைக்கதியால்கள்
ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடம்

தென்னந் தோட்டங்கள்
பனங்கூடல்களாகத் திரிபடைவு
வெளிநாடு புது ஆய்வு தேடி
விண்வெளி செல்கின்றது
நாம் இங்கு எமது இடம் தேடி
தினம் தினம் அலைகின்றோம்
பதினைந்து வருட இடப்பெயர்வின் பின்
பரிசாகக் கிடைத்தது இவ்வளவுமே



**ந. விஜோகுமாயன்,**
**யா/நெல்லியடி ம.ம.வி.**

## இருளில் பயணித்த பயணங்கள்

தாய்வீட்டுச் சீதனமாய்
தன்மானம் கூட இல்லாமல்
தாய் மண்ணிலே
தமிழர்கள் நாம்

உறவுகளை இழந்து
உரிமைகள் பறிக்கப்பட்டும்
உணவுக்கும் உறைவிடத்துக்குமாய்
அநியாய ஆதிக்க அரசியலுக்குள்
அறியா முடங்களாக இன்றும்
அந்நியனை நம்பியே தொடர்கிறது எம் பயணம்...

எம் உரிமைக்காய் எழுந்த வீரனின்
எஞ்சிய சுவடுகள்; அவர்தம் பரிவாரங்களின்
ஆயிரம், ஆயிரம் அர்ப்பணிப்புக்கள் - யாவும்
அர்த்தமற்று மண்ணுக்குள் ஆழ்ந்து போயின

புலம் பெயர்ந்தோர் கொடிதூக்கி புலம்பியென்ன?
புதினம் தேடி ஐ.நா. நிபுணர்குழு வந்ததென்ன?
எமக்காய் நாம் சிந்திக்கும் வரை
எம்மினத்தின் ஒவ்வொரு விடியலுமோ!
இருளில் பயணித்த பயணங்களே!



**ஜெ.இஊரிகவின்,**
**மட்/இலிஇர்.**

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :- ..................................
முகவரி :- ..................................
..................................
.................. ..................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர் பதவிக்கு நிஸாம் காரியப்பரா? கல்முனை மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

சாய்ந்தமருது, ஒக். 13

கல்முனை மாநகரசபையின் மேயராக முஹமட் நிஸாம் காரியப்பரை நியமிப்பது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் நேற்றுமுன்தினம் கொழும்பில்கூடி முடிவெடுத்திருக்கிறது என்று வெளியான தகவலையடுத்து நேற்றுமுன்தினம் இரவு சாய்ந்தமருது பிரதான வீதிகளில் மக்கள் திரண்டு கட்சியின் முடிவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளின் இருபுறங்களிலும் ரயர்களைக் கொளுத்தினர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பித மடைந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களால் கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரொருரின் நிறுவனமொன்றும் அடித்து நொருக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பிரதேசங்களில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை படையினர் விரட்டியடித்தனர். இந்த சம்பவத்தால் சாய்ந்தமருதில் நேற்றுமுன்தினம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்ததையடுத்து முஹம்மது சிராஸ், கொழும்பிலிருந்து தொலைபேசியில் பள்ளி ஒலிபெருக்கி மூலமாக அமைதி காக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தனது ஆதரவாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கல்முனை மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக அதிக எண்ணிக்கையான விருப்பு வாக்குகளை பெறுபவர்களே கல்முனை மாநகரசபை மேயராக நியமிக்கப்படுவார் என்று கட்சி முக்கியஸ்தர்களால் உறுதியளிக்கப்பட்டது. (ச-சி)

# தொடர்ந்து நிலவும் வரட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

மஸ்கெலியா, ஒக். 13

மலையகத்தில் கடந்த ஒரு வார காலமாகக் கடும் வரட்சியான காலநிலை நிலவுவதால் நீரேந்துப் பகுதிகளான மவுசாகலை, காசல்ரீ, கென்யோன், விமல சுரேந்திர, லக்சபான, பொல்பிட்டிய ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்து வருகின்றது.

இந்த வரட்சிநிலை காரணமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாள்களும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீட்டுத்தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் ஊற்றுக்கள் கூட வற்றி வருவதால் பயிர்கள் போதிய நீரின்றி வாடிப்போகின்றன என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த வரட்சி நிலை தொடர்ந்தால் பெருந்தோட்ட மக்களின் வேலை நாள்களை மேலும் குறைக்க நேரிடலாம் என்று தோட்ட முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தீபாவளி பண்டிகையை ஒட்டி தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் முற்பணத்தைக் கூட அதிகரித்து வழங்கமுடியாத நிலை தோன்றியுள்ளது என்று தோட்ட முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# வாகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துக

## ஜனாதிபதிக்கு யோகேஸ்வரன் எம்.பி. மகஜர்



வெல்லாவெளி, ஒக்.13

வாகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற செயற்பாட்டை உடன் தடுத்து நிறத்துக. அத்துடன், அந்தப்பிரதேச தமிழ் மக்களை இலங்கைத் தமிழர் என்ற பதத்தை அழித்து 'வேடர்' முத்திரையை ஒட்டிப் புதிதாக வேடர் பரம்பரையை உருவாக்க வேண்டாம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் ஓமடியாமடு கிராமத்தில் தற்போது மகாவலி அபிவிருத்தித்திட்ட பூமி வழங்கல் என்ற வகையில் அந்தப் பகுதிக்கு வந்துள்ள சிங்கள அதிகாரி ஒருவர் 30 சிங்களக் குடும்பங்களை அந்தக் கிராமத்தில் குடியேற்றியுள்ளார்.

இந்தக் குடியேற்றம் சார்பாக அங்கு வசிக்கும் தமிழ் மக்கள் இந்த அதிகாரியிடம் தமிழ் பகுதியின் நடுவில் இவ்வாறு குடியேற்ற வேண்டாம் எனக் கூறியபோது "உங்களுக்கு கஷ்டமாக இருந்தால் நீங்கள் இந்தப் பகுதியில் இருந்து வெளியேறுங்கள்" ஊத் தமிழ் மக்களுக்கு அந்தச் சிங்கள அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவ்வேளை கடந்த சில காலமாக சிங்கள மக்களைத் தமிழ்ப் பகுதியில் குடியேற்றும் வகையில் பல நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச்செயற்பாடானது. 'வெந்த புண்ணில் வேல் நுழைப்பது' போன்று துன்பத்தை நீண்ட காலமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு மேலும் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், பொலநறுவை மாவட்டத்தில் தேவையான காணிகள் இருக்கும்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களை தமிழர் குடியிருப்பு மத்தியில் குடியேற்றுவதால் இன முரண்பாடு வலுவடைவதற்கான சந்தர்ப்பத்தைத் தோற்றுவிக்குமே தவிர இனஒற்றுமையை ஒருபோதும் வளர்க்காது- இவ்வாறு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அவசர மகஜரில் தெரிவித்துள்ளார். (ச-சி)



கல்முனை மாநகரசபைக்குத் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்.

# புதூர் வங்கிக் கொள்ளை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஒக்.13

மட்டக்களப்பில் வங்கிக் கொள்ளையில், ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரை நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் மட்டக்களப்பு, புதூரில் உள்ள அரச வங்கி ஒன்றில் பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வந்த பொலிஸார், சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன், அவரை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர். இதனையடுத்து, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவம் குறித்து மட்டக்களப்புப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

# கிண்ணியா பிரதேச செயலர் கி.மா.சபைக்கு இடமாற்றம்

மூதூர், ஒக்.13

கிண்ணியா பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய எம்.முபாரக் கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இந்த இடமாற்றத்தை வழங்கியுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த எம்.முபாரக் கடந்த 6 வருடங்களாக கிண்ணியாவில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். இதேவேளை, கிண்ணியா உதவிப் பிரதேச செயலாளராகப் பணிபுரியும் சீ.கிருஷ்ணேந்திரன் பிரதேச செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ச)

# உடுதும்பர பிரதேச அபிவிருத்திக்கு நிதி

ஹரிஸ்பத்துவ, ஒக்.13

கண்டி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேச செயலகப் பிரிவான உடுதும்பர பிரதேசத்திற்கு உட்பட்ட பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக மத்திய மாகாணசபை மூன்று கோடி 36 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது என்று பிரதேசசபையின் தவிசாளர் செணரத் பண்டாரஹாஸ்யா தெரிவித்துள்ளார்.

மத்தியமாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் வேண்டுகோளின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ இந்த நிதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந்த நிதிமூலம் சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராமிய வீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் விநியோகத் திட்டம், கல்வி அபிவிருத்தித் திட்டம் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பயனாளிகளுக்கு கடனுதவி

மட்டக்களப்பு,ஒக்.13

எகெட் கரித்தாஸ் நிருவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் சுய உதவி குழுக்களில் இயங்கும் 60 பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கடனுதவி தொகை ஆரையம்பதி, தேற்றாத்தீவு, களுதாவளை, பாலமுனை ஆகிய கிராமங் களில் செயற்பட்டுவரும் குழுக்களுக்கே வழங்கப்பட்டது.

# கோட்டையிலிருந்து கண்டி செல்லும் ரயிலுக்குச் சொகுசு பெட்டி இணைப்பு

கண்டி,ஒக்.13

கொழும்பு கோட்டையிலிருந்து கண்டிக்குச் செல்லும் கடுகதி ரயிலுக்குக் கடந்த வியாழக்கிழமை முதல் அதிசொகுசு பெட்டியொன்று இணைக்கப்பட்டுள்ளது.

'புளூலைன்' நிறுவனத்தின் அனுசரணையில் இணைக்கப்பட்டுள்ள இந்தப் பெட்டியில் வாயுசீராக்கி, நவீன கழிப்பறைகள் வசதியுடன் 48 ஆசனங்கள் உள்ளன.

பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பழைய ரயில் பெட்டியொன்று நவீன மயப்படுத்தப்பட்டு இந்த சொகுசுப் பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. ஒருவழிப் பயணத்துக்கான கட்டணம் 850 ரூபாவாகும். இதே ரயிலில் முதல் வகுப்புக் கட்டணம் 360 ரூபாவாகும்.

இந்தப் பெட்டியைத் தயாரிக்க சுமார் பத்துக்கோடி ரூபா செலவாகியுள்ளது. ரயில்சேவையில் இது ஒரு திருப்புமுனை எனத் தெரிவித்துள்ள போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம இதேபோன்று மேலும் நான்கு சொகுசு பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

பிரதான ரயில் நிலையங்களிலும், தொலைபேசி மூலமாகவும் சொகுசுப் பெட்டிகளுக்கான பிரவேசச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்சி வேறுபாடு, இன, மத பேதமற்ற சேவையே எனது குறிக்கோள்

## அரச தரப்பு உறுப்பினர் றகுமான் தெரிவிப்பு

மருதமுனை, ஒக். 13

எதிர்காலத்திலே எந்தவித கட்சி வேறுபாடுகளுமின்றி இன, மத பேதமற்ற முறையில் எல்லா மக்களுக்கும் சேவை செய்வதே எனது குறிக்கோளாகும்.

- இவ்வாறு கல்முனை மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள மருதமுனையைச் சேர்ந்த இஸட்.ஏ.எச். றகுமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டிலே வாழுகின்ற எல்லா இன மக்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ வேண்டும் என்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார். அதேபோன்று இந்த நாட்டை அபிவிருத்தி செய்து மக்கள் சுபீட்சமாக வாழவேண்டுமென்று பாடுபடுகின்றார். அவரது பணியில் நானும் இணைந்து செயற்படுவதே எனது எதிர்கால இலக்காகும் - இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வீண் பேச்சு, ஆரவாரம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டிய நாள். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். எதிர்பாராத முக்கிய செய்திகளைக் கேட்கலாம்.

**இடபம்:**
மாமன், மைத்துனர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி, உற்சாகம் பெறுவீர்கள். புதிய சிந்தனைகள் குடிகொள்ளும். நீண்ட நாள்களாக இழுத்தடித்த வேலை ஒன்று இன்று சுலபமாக முடிவுக்கு வரலாம். சிக்கலான நபர்களிடமும் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி பாசம் அதிகரிக்கும்.

**மிதுனம்:**
நீங்கள் எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் எதிர்பாராத ஒரு காரியம் நடக்கலாம். பிரியமான சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பீர்கள். ஒரு வரவை எதிர்பார்க்கும் நேரத்தில், மற்றொரு வரவும் சேர்ந்து வரலாம். பெற்றோர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கும். .

**கடகம்:**
தொழில் சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். போட்டி, எதிர்ப்புகளால் கோபம், பதற்றம் உண்டாகலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை சோம்பல் காரணமாக மாற்றி அமைப்பீர்கள். மருத்துவச் செலவு உண்டு.

**சிங்கம்:**
வேண்டாத வேலைகளில் ஈடுபட்டு மன உளைச்சலுக்கு ஆள்படலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். எளிதில் முடிந்து விடும் என, நினைத்த காரியம் ஒன்றுக்கு நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்கள் மீது பொறாமை கொண்டு சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ளலாம்.

**கன்னி:**
உறவினர்களால் அனுகூலம் பெறலாம். நண்பர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் சாமர்த்தியமாகச் செயற்பட்டு கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக செய்த தவறு ஒன்றைச் சாமர்த்தியமாக மறைக்க முற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மனதில் நல்ல ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் குடிகொள்ளும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் துடிப்போடு செயற்படுவீர்கள். உங்களிடம் கடந்த காலத்தில் உதவி பெற்ற ஒருவர் இப்போது உதாசீனமாகப் பேசலாம். சக ஊழியர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளும். தொழில் ரீதியான செல்வாக்கைப் பயன்படுத்துவீர்கள்.

**தனுசு:**
மற்றவர்களின் உதவியை நாடாமல், எந்த வேலையையும் நீங்களே செய்து முடிக்க முற்படுவீர்கள். பணிபுரிவோர் புதிய பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர், உங்களின் மூலம் காரியம் சாதிக்கலாம். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று, பனிபோல் விலகி விடும். தடை, தாமதங்கள் விலகும் நாள்.

**மகரம்:**
மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். நண்பர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.

**கும்பம்:**
பழைய அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து, புதிய விடயங்களில் இறங்குவீர்கள். உறவினர்கள் சிலரின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவீர்கள். கனவுகளால் குழப்பங்கள் அதிகரிக்கலாம். பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்கலாம். வெளியூர்களில் வசிக்கும் உறவினர்கள் வீட்டிற்கு வரலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து விடலாம்.

**மீனம்:**
ஒன்றுக்கு பல மடங்காக வேலைகளைச் செய்வீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். சில நாள்களுக்கு முன், அரைகுறையாக விட்ட வேலைகளை இன்று முழுமையாக முடிப்பீர்கள். கோபம், வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்பட வேண்டும். மற்றவர்கள் பெருமையாக நினைப்பதற்காகவே சில செலவுகளைச் செய்வீர்கள்.

# தெரு வள... அபிவிரு...

கணா

தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்கள் தற்போது போருக்குப் பிந்திய அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற இடங்களாக மாறியுள்ளன. காடழிப்புக்களும், மலையுடைப்புக்களும் ,மண் குவிப்புக்களும் இப்பிராந்தியத்தில் அபிவிருத்தி பணிகள் மிக உக்கிர வேகம் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன.இப்பகுதியூடாக புதிதாக பயணிக்கும் ஒருவர் இந்தப் பிரமாண்ட அபிவிருத்தியைக் கண்டு வியப்படையக் கூடும் ஆனால் வன்னி மக்களைப் பொறுத்தவரையில் இது வெறும் கண்ணாமூச்சி ஆட்டம் என்பதை உணரத்தொடங்கியிருக்கின்றனர்.

மே 2009 இல் சிறிலங்காவின் குருதி தோய்ந்த உள்நாட்டுப் போரானது நிறைவுக்கு வரும்வரை வன்னிப் பிராந்தியத்தை ஊடறுத்துச் செல்கின்ற 100 கிலோமீற்றர் நீளமான ஏ-09 வீதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வருவதற்காக அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1997-1999 வரை மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் 3000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர். அதற்குப் பின்னர் இலங்கை அரசு மேற்கொண்ட மனிதாபிமானப் போரில் பலியானவர்கள் தொகை இன்னமும் கணக்கிடப்படவில்லை. கிளைமோர்களும், மிதிவெடிகளும்,கிபிர் தாக்குதல்களும் பலிகொண்டவர்கள் தொகையும் எண்ணிக்கையில் அடங்காத வகையாய் நீள்கின்றது.இந்தத் துயர் மிகு மரணங்களை எல்லாம் மறந்து, மண் மூடி பயணிக்கின்றது அபிவிருத்திப்பாதை.

இவ்வீதியின் இரு மருங்கிலும் துரிதமான அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது சிறிய விடுதிகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் எனப் பல்வேறு விதமான கட்டடங்கள் இங்கு துரிதமாகக் கட்டப்பட்டு வருவதுடன், குழந்தைகளுக்கான உணவு வகைகள் தொடக்கம் ஆண்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருள்கள் வரை இந்த வீதியின் இரு மருங்கிலும் பரந்து காணப்படுகின்றன.வணிகத்தை மையப்படுத்தி எழுப்பப்படும் கட்டடங்கள் அதிகமானவற்றின் உரிமைகள் வன்னி மக்களுக்கு சொந்தமானவையாகக் காண்பதரிது. நடைபாதை வியாபாரம் தொடக்கம் பெரு முதல்களைக் கொட்டி ஆரம்பிக்கப்படும் வியாபாரங்கள் வரைக்கும் சிங்களவர்கள் கண்காணிப்பில் தான் இயங்குகின்றன.இவை பெரும்பான்மை இனத்தவரின் மறைமுக ஆதிக்கத்தை வெளிக்காட்டுகினன்றவாய் அமைகின்ற போதிலும் அதனை இலகுவாக அடையாளம் கண்டுவிடமுடியாது. ஏனெனில் அபிவிருத்திப் பணிகளில் தான் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்ற கற்பிதம் முன்னரேயே சொல்லப்பட்டுவிட்டது.இதனை மீறி யாரும் கேள்வி கேட்க முடியாது.அத்தோடு இந்த பிரமாண்ட அபிவிருத்திக்குப் பின்னால் மறைமுகமான அரசியல் ஒன்று இழையோடுவதையும் காணலாம்.


கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டனர் என ஏ-09 வீதியின் ஊடாகப் பயணிப்பவர்கள் நம்புவதற்கேற்ற வகையில் இவ்வாறான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் வன்னியின் உண்மை நிலைமைக்கு முரணானதாகவே இவை அமைந்துள்ளதாக இந்தப் பிரதேசத்தில் பணியில் ஈடுபடும் மனிதாபிமான உதவி வழங்கும் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. இந்த மக்களின் வாழ்க்கை மிகவும் போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது.ஒரு நாளைக் கடத்தவே பெரும் சிரமங்களை அனுபவிப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

2006-2009 வரை இடம்பெற்ற போரின் விளைவாக தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்ற 213,000 பொதுமக்கள் உள்ளடங்கலாக 380,000 பேர் வன்னியிலுள்ள தமது வீடுகளுக்கு மீண்டும் திரும்பி வந்துள்ளதாகவும் 2006 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் இடம்பெயர்ந்த 168,000 பொதுமக்களும் இதற்குள் உள்ளடங்குவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையால் இறுதியில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏ-09 நெடுஞ்சாலையை அண்டிய பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக மில்லியன் கணக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி மீள்குடியேற்றம் மற்றும் [illegible]

ஐ.நாவின் தகவற்படி, உள்ளூரில் இடம்பெயர்ந்து தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களுக்கு 140,000 160,000 வரையிலான வீடுகள் தேவைப்படுவதாக சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெகத் அபயசிங்க தெரிவித்துள்ளார்.



சிறிலங்காவில் யுத்தமானது நிறைவுக்கு வந்து இரு ஆண்டுகளும் மூன்று மாதங்களும் முடிவடைந்துள்ள நிலையில் 34,500 வீடுகள் மட்டுமே நிர்மாணிக்கப்பட்டுள்ளன அல்லது திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக செப்ரெம்பர் 27 அன்று வெளியிடப்பட்ட ஐ.நாவின் மனிதாபிமான மற்றும் மீட்புப் பணிக்கான புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கமானது சிறிலங்காவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் 50,000 புதிய வீடுகளை நிர்மாணித்துத் தருவதாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

அண்மையில், சிறிலங்கா அரசாங்கமானது இத்திட்டத்தின் கீழ் தற்போது 10,000 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இதன் இரண்டாம் கட்டப் பணியை ஆரம்பிப்பதற்கான நிதியைத் தருமாறு சிறிலங்கா அரசாங்கம், இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால் இன்னமும் இதற்கான நிதி சிறிலங்காவை வந்தடையவில்லை.அரசாங்கமும்,இந்தியாவும் இங்கு வாழுகின்ற மக்களுக்கான வீட்டு நிர்மாணத்துக்கான திட்டங்களை தாம் வைத்திருப்பதாகவும்,அதற்கான வேலைத் திட்டங்கள் விரைவாக நடைபெற்று வருதாகவும் தமது கணக்கிடல்களை தெரிவித்து வருகின் றன. இவ்வாறு ஒவ்வொரு முறையும் தொகையளவிலான வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய அறிக்கைகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையே
# ருத்தி

**யுத்தக் குற்றங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும் என அனைத்துலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வருவதில் கவனஞ் செலுத்துவதால், உதவி வழங்கும் நாடுகள் மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதில் அதிக கரிசனை கொள்ளவில்லை**



ணத்தில் அதிகரித்து வரும் வேலையில்லாப் பிரச்சினையும் இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. வடபகுதியில் ஐந்து,ஆறு கடைகள் இருந்தாலே அவ்விடத்தில் பிச்சைக்காரர்கள் தொழில் நடத்தும் நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் வடமாகாண மக்களுக்கு உதவி செய்யும் நிறுவனங்களின் தொகையும் குறைவாகவே காணப்படுகின்றது. இதே வேளையில், இப்பிராந்தியத்தில் நிலவும் போருக்குப் பிந்திய அரசியல் நிலைப்பாடுகளும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி மீது தாக்கத்தைச் செலுத்துகின்றன.

வடக்கில் மீள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக 289 மில்லியன் டொலர்கள் நிதியை ஒதுக்குமாறு ஐ.நாவும் சிறிலங்கா அரசும் இணைந்து அனைத்துலக சமூகத்திடம் கூட்டு விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். எட்டு மாதங்களின் பின்னர், இத்தொகையின் 29 சதவீதமானது அல்லது 76 மில்லியன் டொலர்கள் வடக்கின் அபிவிருத்திக்காகப் பெறப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை மேற் கொள்வதற்கு சிறிலங்கா அரசாங்கமானது முன்வர வேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அனைத்துலக நாடுகள் அழுத்தங் கொடுத்து வருவதில் கவனஞ் செலுத்துவதால், உதவி வழங்கும் நாடுகள் மனிதாபிமான உதவிகளை சிறிலங்காவிற்கு வழங்குவதில் அதிக கரிசனை கொள்ளவில்லை எனத் தான் நம்புவதாக அபயசிங்க தெரிவித் துள்ளார்.

யுத்தத்தாலும் இயற்கையாலும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு நான் உதவி வழங்குநர்களிடம் கோரிக்கை விடுத்த விடயமானது மறக்கப்பட வேண்டியதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கு சென்றடைய வேண்டிய தேவைப்பாடுகள் சிலவற்றை ஏற்கனவே உதவி வழங்குநர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

உதாரணமாக, அனைத்துலக இடப்பெயர்வு அமைப்பானது, வன்னிப் பிரதேச மக்களுக்காக கடந்த இரண்டரை ஆண்டுகளாக வழங்கி வந்த தனது நோயாளி காவுவண்டி (அம்புலன்ஸ்) சேவையை இடைநிறுத்தியுள்ளது.

ஆனாலும் வடக்கிற்கான பெரிய கட்டுமானத் திட்டங்கள் ஏராளமாக நிறைந்திருப்பதாக அங்கு பணிபுரியும் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்தின் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகள் வீதி அபிவிருத்தி அல்லது நீர்ப்பாசன வேலைத்திட்டத்துடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட முடியாது என வடக்கு மாகாணத்திற்கான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்ட [illegible] யாளரான அந்தோனிப்பிள்ளை விநோதராஜ் தெரிவித்துள்ளார்.

வேண்டுதல்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால் வன்னி மக்கள் தான் வரப்போகின்ற மாரிகாலத்தையிட்டு ஐயுறுகின்றனர்.மீள் குடியேற்றத்துடன் வழங்கப்பட்ட தகரக் கொட்டில்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் தாக்குப் பிடிக்கப் போகின்றன?அவர்கள் கதைகளில் கேள்விகள் எழாமல் இல்லை.

இப்பிராந்தியத்தில் நிலவும் உணவுத்தட்டுப்பாடானது இந்த மக்களின் மனிதாபிமான சூழலை மேலும் நலிவுற்றதாக்கும் என ஏற்கனவே தொழினுட்ப ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வன்னியிலுள்ள மக்களில் அரைவாசிப் பங்கினர் தற்போது அதிகூடிய உணவுப் பாதுகாப்பின்மையை உணர்வதாக உலக உணவுத் திட்டம் சுட்டிக் காட்டியுள்ளது.

இப்பிராந்தியத்தைச் சென்றடைகின்ற உணவுப் பொருட்களின் அளவு குறைவடைந்து செல்வதால் வரும் மாதங்களில் இங்கு உணவுப் பாதுகாப்பின்மை நிலவும் என இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

மிதிவெடி விதைப்புக்கள் வயல் நிலங்களை இந்த மக்களின் வாழ்வுப் புலங்களில் இருந்து தள்ளி வைத்துள்ளது.முதற் காலத்தைப் போல ஏக்கர் கணக்கினான விதைப்புக்களுக்கு போதிய வருமானமின்மையால நெல் உற்பத்தியும் குறைந்து வருகின்றது.

இந்த அடிப்படையில், வடமாகாணம் முழுமையும் நெருக்கடியைச் சந்தித்துவருகின்றது. வடமாகா

## கொழுப்புச் சத்தும் மாரடைப்பும்



பலவிதமான பொருள்கள் சேர்ந்துதான் நம்மை உருவாக்கி இருக்கின்றன. அதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொரு ளாக விளங்குவது கொழுப்பு. இதனை ஆங்கிலத்தில் கொலஸ்ரோல் என்று சொல் வர். மனித உடலுக்கு முக்கியமான சக்தி வழங்கியாகக் கொழுப்பு தொழிற்படுகி றது.எனவே அளவான கொழுப்புச்சத்து எமது உடம்பில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மாரடைப்பு ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயத்தினால் உடம்பில் கொழுப்பே சேரக்கூடாது என்று பல பேர் நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. அதே சமயத்தில் அளவுக்கு மீறிய கொழுப்புச் சேர்ந்தால் மாரடைப்பு என்னும் பேராபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

நம் உடலில் இருக்க வேண்டிய கொழுப்பின் அளவை எப்படி உணர்ந்து கொள்வது. இதைப்பற்றி நன்கு ஆய்வு செய்த நிபுணர் குழுவினர் இப்படிக் கூறுகிறார்கள்.கடுமையாக வியர்வை சிந்தப் பாடுகின்ற உழைப்பாளி வர்க்கத்துக்கு கொழுப்பு மிகமிக அவசியம். லவ்வேனியாய் என்கின்ற அறிஞர் இரண்டு விளையாட்டு வீரர்களை ஆராய்ந்து ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டிருக்கிறார். அதன்படி அவர்களுக்குக் கிடைக்கும் கலோரியின் அளவு 17.5 முதல் 17.6 சதவீதம் வரை புரதச்சத்தின் மூலமும் 44 சதவிகிதத்துக்கு மேலாகக் கொழுப்புச் சத்திலிருந்தும் 34 சதவீதம் மாப்பொருளிலிருந்தும் பெறப்படுகிறது என்பது தெரியவருகிறது.

எனவே நாம் உழைப்பதற்குத் தேவையான சக்தியில் பெரும்பாலான அளவு கொழுப்பிலிருந்து கிடைக்கின்றது. ஆகையால் உழைக்காமல் கொழுப்புடன் இருக்கக் கூடாது.

இந்த நாக்கு ருசி இருக்கிறதே அது மனிதனை ஆட்டிப்படைக்கிற ஒரு பயங்கர யமதுதன். இதனை அழகாக விளக்கக்கூடிய ஒரு குட்டி நகைச்சுவைக் கதையொன்று உண்டு.

ஒரு கிராமத்தில் ஒருவர் பலசரக்குக் கடை நடத்தி வந்தார். அத்தோடு வெல்லப்பாகுவை சிறு சிறு கடைகளுக்கு விநியோகிக்கும் மொத்த வியாபாரியாகவும் இருந்தார். அவருடைய கடையில் பெரிய பெரிய பாத்திரங்களில் வெல்லப்பாகு எப்போதும் இருக்கும்.

அந்தக் கடைக்கு ஒரு சிறுவன் பொருள் வாங்க அடிக்கடி வருவது வழக்கம். அப்படி வரும் போதெல்லாம் ஒரு பாத்திரத்தினுள் கைவிரலை விட்டு அந்த வெல்லப்பாகுவை நக்கிக் கொள்வான். அந்த அளவுக்கு வெல்லப்பாகுவின் மீது அவனுக்கு அளவற்ற விருப்பம்.

இதைப் பார்க்கும் போதெல்லாம் கடைக்காரனுக்கு அவன் மீது கோபம் வரும். அவன் தலையில் ஒரு குட்டு குட்டுவார். ஆனால் அந்தச் சிறுவனும் வெல்லப்பாகு நக்குவதை விடவில்லை. அந்தச் செட்டியாரும் அவனைக் குட்டுவதை விடவில்லை.

ஒரு நாள் செட்டியாரின் கோபம் உச்சந்தலைக்கு ஏறிவிட்டது. அந்தச் சிறுவனைத் தூக்கி அந்தப் பெரிய பாத்திரத்துள் போட்டு விட்டார். வெல்லப்பாகுவில் மூழ்கிக் கொண்டிருந்த அந்தச் சிறுவன் ''கடவுளே என் நாக்கை இன்னும் கொஞ்சம் பெரிதாக்கி உதவுங்கள்'' என்றான். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? அந்தச் சிறுவனுக்கு உயிர் மீது அக்கறையில்லை நாவின் ருசி மீதுதான் அக்கறை இருந்திருக்கிறது. இதுதான் பொதுவான உணவு பற்றிய மனித இயல்பு.

லார்ட் ராபர்ட் என்னும் மற்றோர் ஆராச்சியாளர் கடுமையான யுத்தத்தில் ஈடுபடுகின்ற படைவீரர்களை ஆய்வு செய்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் கூறப்பட்டிருந்த கருத்து இதுதான். அதிகமான கொழுப்புச்சத்து உடையவர்கள் போரில் தங்களைச் சமாளித்துக் கொள்கிறார்கள். சீதோஷ்ண நிலை மற்றும் சூழ்நிலை ஆகியவை முற் றிலுமாக மாறி இருக்கின்ற போதும் அதனை எதிர்கொண்டு சமாளிப் பதற்கான வலிமை அவர்களுக்கு இருக்கிறது.

அந்த ஆய்வுகளின் மூலம் நாம் தெரிந்து கொள்கிற விடயம் என்ன தெரியுமா? கொழுப்பு அளவாகக் கொண்டவர்கள்; அதாவது அதிகமாகவும் இல்லாமல் குறைவாகவும் இல்லாமல் அளவாகக் உட்கொண்டிருப்பவர்கள்தான் அதிக திறனுடைய வேலைகளைச் செய்து முடிக்கிறார்கள்.

அதே சமயத்தில் கொழுப்புச்சத்து அளவுக்கு மீறிப் போகின்ற போது அந்தக் கொழுப்பு கல்லறையை நோக்கி எம்மை அடியெடுத்து வைக்கச் செய்கிறது.

எனவே கொழுப்புச் சத்துக்கும் மாரடைப்புக்கும் இடையே இருக்கிற பிணைப்பு இவ்வாறு ஆய்வுபூர்வமாக; அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உடனே எம்மவர்கள் மாரடைப்பைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகக் கொழுப்புச்சத்தை அறவே சாப்பிடாமல் விட்டுவிடுவார்கள். அப்படிச் சாப்பிடும் போது இரத்தக்குழாயில் இரத்தப் படிமங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் மருத்துவம் சொல்கிறது.

எனவே முற்றுமுழுதாகக் கொழுப்புச்சத்து இல்லாமலும் ஒருவர் இருந்துவிட முடியாது. கொழுப்புச்சத்தை குறைக்கக்கூடிய மருத்துவ குணம் பீன்ஸ்க்கு உண்டு.பீன்ஸின் இந்தத் தனிச்சிறப்பு மிக்க ஆற்றல் அனைவருக்கும் தெரியவந்தால் சந்தையில் அதைக் கிலோக்கணக்கில் விற்கமாட்டார்கள். ஒரு பீன்ஸ் இன்னவிலை என்று விற்கத் தொடங்கி விடுவார்கள்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண ஆங்கிலதினப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற 'A wooden bowl' எனும் ஆங்கில ஆரம்பப் பிரிவு நாடகத்தில் நடித்த யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள். (ம)

# ஆதரவற்றோருக்கு உதவிகளை வழங்கி சாதாரண மனிதராக வாழ்வதே பாக்கியம்

## சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உரை

தென்மராட்சி, ஒக்.13

இரக்கமுள்ள மனிதராக இருந்து ஆதரவில்லாதோருக்கு உதவி செய்து சாதாரண மனிதராக வாழ்வதே எமது பெரிய பாக்கியம்.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ம.கணேசராஜா.

மீசாலை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டத்தின் உலக சகோதரத்துவ விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

வாழ்வின் குறிக்கோள் என்ன என்பது குறித்து நான் பலவிதமாகச் சிந்தித்ததுண்டு. மக்கள் நினைக்கின்றார்கள் குடும்பம் இருக்கின்றது. பொறுப்புக்கள் இருக்கின்றது. உறவினர்கள் இருக்கின்றனர். இவையெல்லாம் தான் வாழ்க்கை என்று. இந்த மூச்சு எப்போது நின்று விடுகின்றதோ அன்று உன் உறவு, உன்வேலை, உன் செல்வம், உன் கௌரவம் என்னவெல்லாம் நீ உன் வாழ்க்கையென்று நினைக்கின்றாயோ அவையெல்லாம் முடிந்து விடும்.

வாழ்க்கையில் ஏதாவது இலட்சியம், குறிக்கோள் இருக்க வேண்டும் எல்லாவற்றையும் விட சிறந்த இலட்சியமாக எந்தப் பொருள் இல்லாவிடில் நான் ஒன்றும் இல்லையோ, எது இருப்பதால் எனக்கு எல்லாமே இருக்கிறதோ அந்தப் பொருளை நாம் அறிய வேண்டும். இது தான் எல்லாவற்றையும் விட சிறந்த குறிக்கோளாக இருக்க முடியும்.

நம்முடைய இரக்கமின்மை, சுயநலம் தீய செயல்கள் நமக்கு எமனாக உருவெடுக்கின்றன என்பதுதான் அப்பட்டமான உண்மை. தயவு நெறிக்கு சாதி, சமயம், மதம், இனம் முக்கிய தடையாக இருப்பதால் இவற்றை விட்டுவிட வேண்டுமென்று வள்ளலார் வலியுறுத்துகின்றார்.

நாம் பிறரிடம் குற்றம் காண்பதற்குப் பதிலாக நம்மிடமுள்ள சிறுமைகளை, குற்றங்களை ஆராய்ந்து அவற்றை நீக்கிக் கொள்ள உண்மையாக முயன்று வெற்றி பெற்றால் நமக்கு எந்நாளும் எந்தக்குறையும் வராது என்பது சாத்தியம்.

எந்த வித பயனும் கருதாமல் உண்மையான உயிர் இரக்கம் காரணமாக செய்யப்படும் உதவியே உண்மையான தயவாகும். பிறரை வெறுப்பது நம்மை நாமே வெறுப்பது போலாகும். மற்றவரை நாம் வெறுத்தால் உலகமே நம்மை வெறுத்து ஒதுக்கிவிடும்.

இன்றைய மாணவர்கள், இளைஞர்கள் மிகவும் புத்திசாலிகள், ஆற்றல் மிக்கவர்கள். அவர்களின் அறிவும், திறமையும் நல்ல முறையில் பயன்படுத்தப்படாமையால் பலர் திசைமாறிச் செல்கின்றனர். அவர்களின் அறிவாற்றல்களை ஆக்கரீதியில் பயன் படுத்தி நம் நாடு முன்னேற வள்ளலாரின் உபதேசங்களும் பணிகளும் நமக்கு பேருதவி புரியும். - என்றார். (ம-207)

# யாழ்ப்பாணத்தில் இசைக்கலையை பாதுகாக்க வேண்டியது அவசியம்

## இந்தியாவின் கர்நாடக இசைக்கலை வித்துவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்ப்பாணத்தின் இசைக் கலைகளை மறைந்து போக விடாமல் பாதுகாக்க வேண்டும். இதற்கு இசைக்கலைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

இதற்கு பிரதேசங்கள் தோறும் நடத்தப்படும் இசை நிகழ்வுகள், கலைநிகழ்வுகள் இவற்றில் இசைக்கலைஞர்கள் பங்கு பற்றித் தமது கலைத் திறனை வெளிப்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்

இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவின் கர்நாடக இசைத்துறை வித்துவான் ரி.எம்.கிருஷ்ணா. வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், இந்திய உயர்ஸ்தானிகர் திணைக்களமும் இணைந்து நடத்திய கர்நாடக இசைக்கச்சேரி நிகழ்வு அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

கலைகளுக்கு சிறப்புமிக்க பிரதேசமாக யாழ்ப்பாணம் உள்ளது. எனினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக கலைகள் பல மறைந்து போய்விட்டன.

இதனைத் தொடர்ந்தும் மறைந்து போகவிடாமல் பாதுகாக்க கலைஞர்களை ஊக்குவித்து எதிர்காலத்தில் கலைகளை வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

கலைஞர்கள் இசைக் கச்சேரிகளில் பங்குபற்ற வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். கலைகளை மீளவும் கட்டியெழுப்புவதற்கு இதுவே சிறந்த செயற்பாடாக அமையும். -என்றார். (ம-311)

# விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

கீரிமலை கூவிலில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக சங்கானை பிரதேச சமூக சேவையாளர் கதிரேசு ஜீவகன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கியுள்ளார்.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான துடுப்பாட்டம் கரப்பந்தாட்டம், வலை பந்தாட் டம் என்பனவற்றுக்குரிய உபகரணங்களை வழங்கியுள்ளார். (ம-313)

# மீண்டும் திறக்கப்பட்ட சனசமூக நிலையம்

சுன்னாகம், ஒக்.13

வலி.வடக்கின் மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசமான கருகம் பனையில் தமிழ் மன்றம் சனசமூக நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.20 ஆண்டுகளின் பின் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சேதமடைந்த நிலையிலிருந்த இந்தச் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு விஜயதசமி தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் நாடா வெட்டி இதனைத் திறந்து வைத்தார். பிரதேச மக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-38)

# பொது அறிவு போட்டிப் பரீட்சை

நீர்வேலிப் பிரதேசப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் பொது அறிவைப் பரீட்சிக்கும் வகையில் நீர்வேலி அணியப் பாடசாலை மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அத்தியார் இந்துக் கல்லூரியில் இப்பரீட்சை இடம்பெற்றது. நீர்வேலி நற்பணிச் சங்கத்தின் சுவிஸ் கிளையின் அனுசரணையுடன் தரம் 04 முதல் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு இப்பொது அறிவுப் பரீட்சை கடந்த 8 ஆண்டுகளாக இலவசமாக நடத்தப்பட்டுவருகிறது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இப்பரீட்சைக்குத் 478 மாணவர்கள் தோற்றியுள்ளதாக பரீட்சைக் குழுவின் தலைவரும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபருமாகிய இ.குணநாதன் தெரிவித்துள்ளார். (ம-38)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க திறன்வெளிப்பாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.13

வலுவிழந்தோர் புனர் வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட திறன் வெளிப்பாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**தையல் உயர்நிலை**- வி.தீபா (அரோட்), எஸ்.சுதா (அரோட்), இ.தயாநிதி (அரோட்).

**அடிப்படைத்தையல்**- பி.டொறின் ஷியாமினி (அரோட்), வி.தனுசியன் (கடவுளின் குழந்தைகள் காப்பகம்).

**என்வலப் ஒட்டுதல்**- கே.ஜதீபன் (நவீல்ட் பாடசாலை), சி.தர்சன் (நவீல்ட் பாடசாலை), எஸ். சலக்சிகா (அரோட்).

**மாலை கட்டுதல்**- எஸ்.நிவர்த்திகா (கொக்குவில்), பி.நிரோயினி (ஆனைக்கோட்டை), எஸ்.லக்சிகா (அரோட்), பி.கிருஷாந்தி (அரோட்).

**கோலம் போடுதல்**- கே.மதியழகன் (இனிய வாழ்வு இல்லம்), என்.றொகின்சிகா (ஆர்க் பாடசாலை), இ.விதுசன் (கடவுளின் குழந்தைகள் காப்பகம்).

**கணினி அடிப்படை**- கே.கல்ப்பனா (அரோட்), எஸ்.பிருந்தாபரன் (அரோட்), கே.புவனதாஸ் (அரோட்).

**சித்திரம் வரைதல் சிறுவர்**- கே.றொபேக்கா (கடவுளின் குழந்தைகள் காப்பகம்), ஏ.நிதர்சன் (நவீல்ட் பாடசாலை).

**சித்திரம் வரைதல் மேற்பிரிவு**- ஜே.துஷ்யந்தி (கோண்டாவில்), எஸ்.சுரெசினி (நவீல்ட் பாடசாலை), கே.மதியழகன் (இனிய வாழ்வு இல்லம்).

**தலை அலங்காரம்**- பி.கிருஷாந்தி (அரோட்), பி.டொறின் ஷியாமினி (அரோட்), எஸ். கவிதா (அரோட்).

**கைப்பணி வேலை**- ஜெ.வசந்தகுமார் (வாழ்வகம்), ஏ.அனிற்றலா (வாழ்வகம்), வி.வாசினி( வாழ்வகம்).

**கதிரை பின்னுதல்**- எ.எமினியாம்பிள்ளை (பரந்தன் புதுக் குடியிருப்பு கிளிநொச்சி) ரி.திருக்குமரன் (அரோட்), எம். பொன்னுத்துரை(அரோட்).

**விளக்குமாறு அடித்தல்**- ரி.திருக்குமரன்(அரோட்), வி.திருநாவுக்கரசு( விழிப்புலனற்றோர் சங்கம்).

**நடனம்**- ஜெ.தமிழரசி (வாழ்வகம்), கே.சிரோன் பிரவீணா(யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ரி.பிறின்சலா(யா/சென். தெரேசாள் மகளிர் கல்லூரி).

**பாட்டு**- ஜ.சுதர்சன் (நவீல்லட் பாடசாலை) கே.ஜெகதீஸ்வரன் (வாழ்வகம்), எஸ்.புவனேஸ்வரி (இனியவாழ்வு இல்லம்).

**கட்டுரை எழுதுதல்**- இ.இராசகுமார்- (விழிப்புலனற்றோர் சங்கம்), வி.தயாளினி (வாழ்வகம்), பி.டொறின்ஷியாமினி (அரோட்), என்.துஷியந்தி (வாழ்வகம்).

**கவிதை வாசித்தல்**- வி.கஜகுகன் (இனிய வாழ்வு இல்லம்), என்.சங்கீர்தன் ( கடவுளின் குழந்தைகள் காப்பகம்), எம். பொன்னுத்துரை (அரோட்).

**பேச்சுப் போட்டி**- கே.பிரகான் (வாழ்வகம்), எஸ்.பிருந்தாபரன் (அரோட்), இ.இராசகுமார் (விழிப்புலனற்றோர் சங்கம்).

**திருக்குறள் மனனம்**- ஜே.பார்த்தீபன் (இனியவாழ்வு இல்லம்), ஏ.ரங்கடம்பநாதன் (விழிப்புலனற்றோர் சங்கம்), ஏ.சுஜுபன் (நவீல்ட் பாடசாலை).

**சிறுவர் பழம் பொறுக்குதல்**- அ.நிதர்ஷன் (நவீல்ட் பாடசாலை), இ.றிவால்டோ (நவீல்ட் பாடசாலை), ஜெ.தமிழரசி (வாழ்வகம்).

**சிறுவர் பந்தெறிதல்**-வி.ஜனூபா (வாழ்வகம்), வி.ஆன்செபெஸ்தியான் (நவீல்ட் பாடசாலை), ஜ.அஷ்வினி (நவீல்ட் பாடசாலை).

**சிறுவர் பொது**- வி.ஆன்செபெஸ்தியான் (நபீல்ட் பாடசாலை), ஜெ.ராஜ்குமார் (வாழ்வகம்), இ.றிவால்டோ (நவீல்ட் பாடசாலை).

**சதுரங்கம்**- ரி.ஞானம்மா (அரோட்), எஸ்.சுதா (அரோட்), வி.தீபா (அரோட்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான சமூகம் நோக்கிய நகர்வுக்கு கல்வி முகாமைத்துவம்

தரம் என்பது கல்வியின் இதயம் போன்றது. இதன் ஆதிக்கமானது மாணவர்கள் என்ன கற்கின்றார்கள்; எவ்வாறு அவர்கள் கற்கின்றார்கள், எத்தகைய அனுபவங்களைக் கல்வி மூலம் அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள், என்பது தொடர்பானதாகவுள்ளது.

தரம் என்பதை வரையறை செய்வது கடினமானதாகவுள்ள போதும் அதன் தேவை எல்லா இடத்திலும் எல்லோராலும் வேண்டப்படுவதாகவும் உள்ளது.

இத் தரத்தைப் பின்வரும் இரு பிரதான விடயங்களாக அர்த்தமுள்ள வகையில் நோக்க முடியும்.

1. தெரிவு செய்யப்பட்ட நியமங்களூடாக அளவீடு செய்ய முடிதல்
2. சேவை பெறுநரின் தேவையுடன் தொடர்புபடுத்தி நோக்க முடிதல்

தரமென்பதற்கான வரைவிலக்கணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சேவை பெறுநரின் திருப்தியாகும்
2. பொருத்தப்பாடடைதலாகும்
3. நம்பிக்கையின் உத்தரவாதம்
4. குறைபாடுகளற்ற நிலை
5. இலாப அடைவுக்கான முதலீடு
6. மேன்மையடைவதற்கான திட்டமிட்ட செயலொழுங்கு

இன்று கல்வியிலும் கலைத் திட்டத்திலும் நிர்வாகத்திலும் தரம் என்ற விடயம் முக்கியத்துவமுடையதாகத் தோற்றம் பெற்றுள்ளது. இன்று உலகிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களும் தரமேம்பாட்டைக் கொண்டவைகளாகப் பட்டதாரிகளை வெளியேற்றுதல் என்பதை மிக முக்கியமான பணியாக ஏற்றுள்ளன. அதேபோல் பாடசாலைச் சுற்றுவட்டாரத்தை விட்டு வெளியேறும் மாணவர்களும் இந்தத் தரமேம்பாட்டின் குறியீடுகளாக இருக்க வேண்டும். தனியே ஒருபக்க வளர்ச்சியைக் காட்டியவர்களாக வெளிவரக் கூடாது.

முழுமையான ஆற்றல், முழுமையான ஆளுமை பல்துறை ஆற்றலுள்ளவர்களாக வெளியேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தரத்தை அடைவதற்கான செயன் முறையானது மூன்று வினாக்களாகத் தோற்றம் பெறுகின்றது.

1. நாம் கல்வியில் எங்குள்ளோம் ?
2. நாம் கல்வி நிலையில் எங்கு செல்ல வேண்டும்?
3. எவ்வாறு நாம் அந்நிலைமைக்குச் செல்ல முடியும்?

இந்த மூன்று வினாக்களுக்கும் விடை காண்பதன் மூலம் கல்வியில் தரத்தை அடைய முயற்சிக்கலாம். தமக்கும் மற்றவர்களுக்கும் உதவக்கூடிய வகையில் தேவையான அறிவு, பயனுறுதியான திறன் என்பவற்றோடு பொருத்தமான மனப்பாங்குகளையும் ஆரோக்கியமானதாயும் பாதுகாப்பானதாயும் பெற்றுக் கொள்ளச் செய்தல் தரமான கல்வியாகவுள்ளது.

தரமான கல்வி என்பது எதனைக் குறிக்கின்றது என்பது தொடர்பில் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் கல்வி என்பது பல காரணிகளோடு தொடர்புடையோர் எண்ணக்கரு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்கமாட்டாது. வினைத்திறன், விளைதிறன், சமத்துவம், தரம் என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பல்பரிமாண வடிவமாகத் தரமான கல்வி என்ற விடயம் இன்று நோக்கப்படுகின்றது.

இங்கு நாம் வழங்கும் கல்வியால் மாணவர்கள் கற்றலுக்கு தூண்டப்படுவதால் அதனை அவர்கள் உள்வாங்கக் கூடிய நிலையிலுள்ளனரா என நோக்குதலும் இன்றியமையாததாகும். இச் சந்தர்ப்பத்தில் பாடவிதானத்தின் பொருத்தப்பாடு தொடர்பில் எமது கவனம் திரும்பும் நிலை இயல்பாகவே உருவாகும். அதேவேளை ஆசிரியர்கள் குறித்த பாடவிதானத்தில் உள்ள விடயங்களைத் தெரிந்து வைத்துள்ளார்களா கற்பித்தல் நுட்பமுறைகள் பற்றி அறிந்துள்ளார்களா என்பதையும் இனங்காண்பது அவசியம். கற்பதற்கான காலம் கற்றல் கற்பித்தல் சாதனங்களின் கிடைப்பனவு என்பன தொடர்பிலும் கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

கல்விச் செயன்முறை தொடர்பில் சமூகத்தில் அதிருப்தி நிலவாது இருப்பதற்கும் அறிவின் நீட்சியினூடாக ஆராய்ச்சிகள் எல்லாம் வேகமான மாற்றங்களைத் தோற்றுவிப்பதாயுள்ளன. இந்த நிலையில் இவற்றுக்கு மாணவர்களை இசைவுறச் செய்வதற்கும் சந்தை நிலவரங்களும் சந்தைக் கேள்விகளும் மாற்றமடைந்தவண்ணமுள்ளமை பாடசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கக் கூடியதாகப் பொருளாதாரம் விரிவடையாமை, குறைந்த செலவில் கூடிய கல்வியைப் பெற வேண்டுமெனப் பெற்றோரும் மாணவர்களும் விரும்புகின்றமை, குறைந்த செலவில் கூடியளவு வெளியீட்டை எதிர்பார்க்கும் அரசு என்ற பல்வேறு தரப்பினரின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் தரமான கல்வி பற்றிச் சிந்தித்தல் கல்விப் புலம் சார்ந்தோரின் கடமையாக மாறியுள்ளது.

இந்த நிலையில் முழுநிலைத்தர முகாமைத்துவம் தொடர்பிலும் நோக்குதல் இன்றியமையாததாகும். முழுநிலைத்தர முகாமைத்துவம் என்பது ஒரு முகாமைத்துவ அணுகுமுறையாகும். முழுநிலைத் தர மேம்பாட்டின் தந்தையாக எட்வேட் டேமிங் கொள்ளப்படுகின்றார். இவரது கருத்துக்கள் வெளியீட்டையும் தரத்தையும் மட்டும் நோக்குவதாக அல்லாது நிறு வனத்தின் தூரநோக்கு மற்றும் நிறுவன மாற்றங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பதாக அமையும்.

இது சேவை பெறுநரின் திருப்தியினூடாக வெற்றி இலக்கை அடையும் நீண்டகாலச் செயன்முறையாகும். இம் முகாமைத்துவச் செயலொழுங்கின் செயற்பாட்டுக்காக நிறுவனத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் பங்குகொள்ளுதல் அவசியமாகும்.

இந்த முழுநிலைத்தர முகாமைத்துவமானது ஐந்து மூலங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1. முதலெடுப்பிலேயே தரமான வேலைக்குத் தூண்டப்படல்
2 .சேவை பெறுநரை முதன்மைப்படுத்தியது
3. முன்னேற்றத்துக்கான தந்திரோபாய அணுகுமுறைகளைத் தன்னகத்தே கொண்டது.
4. தொடர்ச்சியான முன்னேற்றச் செயலொழுங்கு உள்ளது.
5. ஆள்களிடையேயான புரிந்துணர்வும் அணிச் செயற்பாடும்

முழுநிலைத்தர முகாமையானது இரண்டு அடையக் கூடிய இலக்குகளைக் கொண்டிருக்கும். அதாவது இயங்குதலுக்கான குறைந்த செலவும் தரத்தினது உயர் நிலையும் என்பதோடு அதிகளவான சேவைபெறுநரைக் கவருதலுமாகும்.

**நடேசு தயாளன்,** கோழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

இதற்காக ஊழியர்களதும் சேவைபெறுநர்களதும் கருத்துக்கள் உள்வாங்கப்படல் அவசியமாகும். அத்தோடு நாளாந்தச் செயற்பாடுகளில் தொடர்ச்சியான முன்னேற்றங்களும் அவசிமானது. இதற்காக அணியாகச் செயற்படலும் அணி அங்கத்தவரிடையே நம்பகத் தன்மையும் ஒருவரை ஒருவர் மதிக்கும் நிலையும் தோற்றுவிக்கப்பட வேண்டும். நிறுவனத்தினது அனைத்துச் செயலொழுங்கிலும் தரத்தை எதிர்பார்த்தலோடு புள்ளி விவரவியல் ரீதியிலான முறைமூலம் தர உறுதிப்பாடு பேணலும் முக்கியத்துவமுடையதாகவுள்ளது .

(வளரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்க மருந்து பாவனையால் ஆபத்தான நோய்கள் ஏராளம்

கொழும்பு.ஒக்.13

பாலியல் உணர்ச்சியைத் தூண்டும் ஊக்க மருந்துகளைப் பாவிப்பதன் காரணமாக ஏராளமான நோய்கள் ஏற்படுவதாக ஆய்வொன்று உறுதிப்படுத்தியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தலைமை மருத்துவ நிபுணரான சாந்த ஹெட்டியாராச்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றே இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

மருந்தகங்களில் பெருமளவில் விற்பனையாகும் மருந்துகள் இந்த பாலியல் ஊக்க மருந்துகளே என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

வரையறையின்றி அளவுக்கு அதிகமாகப் பாலியல் ஊக்க மருந்துகளைப் பாவிப்பதால் இதய நோய்கள் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, சினைப் பையில், புண்கள் போன்றன ஏற்பட்டு திடீரென கண்பார்வையை இழத்தல், காது செவிடாகிப்போதல் பாதிப்புகளுக்கு உள்ளாகலாமென மருத்துவ விஞ்ஞானம் உறுதிப்படுத்தியுள்ளதையும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மருத்துவ ரீதியான பரிந்துரையின்றி இவ்வாறு இந்த மருந்துகளைப் பயன்படுத்துவோரில் பாடசாலை மாணவிகளும் இருப்பதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. பாரதூரமான இந்த நிலைப்பாட்டை தடுத்து நிறுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-22)

# இதுவரை பதவி உயர்வு கிடைக்காத அதிபர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.ஒக்.13

கடந்த 1996 டிசம்ப 31ஆம் திகதி வரை இலங்கை அதிபர் சேவை வகுப்பு I இல் பணியாற்ற தகைமையிருந்தும் வகுப்பு II வகுப்பு III ஆகியவற்றுக்கு பதவியுயர்வு வழங்கப்படாது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மத்திய கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இற்கு நியமனம் பெற்ற திகதி இக் காலப் பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படாமைக்கான சான்றிதழ் வருடா வருடம் சம்பள ஏற்றம் பெற்றமைக்கான சான்றிதழ் போன்றவையும் சேவையிலிருந்து இளைப்பாறியிருந்தால் இளைப்பாறுவதற்கான அனுமதிக் கடிதம் ஓய்வூதிய அன்பளிப்புக் கடிதம் ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப் பிக்குமாறு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அறிவித்துள்ளார்.

(ம-207)

## தவறிவிட்டது

இல. 73, காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி பாலசுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (492710237V) சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பச்சை நிற பேஸ் கடந்த 2.10.2011 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும். T.P: 0212225261

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978 புனர் பூசம் 4 ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற 20 3/4 கிரக பாவமுடைய டாக்டர் (MBBS) மண மகனுக்கு அரச சேவையில் உள்ள மண மகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.

தொடர்பு: 0215210054, 0212228748

## அபூர்வ ஜோதிடம்

கொலஸ்ரோல் அடைப்பு, ஆஸ்மா, சிறுநீரகக்கல், குழந்தையில்லாமை, ஹோமோன்ஸ் தடைப்பட்ட மாதவிடாய், சாதனை படைக்கும் சிகிச்சை முறை.

கிழமைநாள் 3pm -6pm
சனி, ஞாயிறு 8am -2pm
T.P: 0773212740

உயரப்புல பிள்ளையார் கோயிலடி, தபால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம் 26 . 05 . 1957



ஆண்டவனிடம் 08 . 10 . 2006

பளை தர்மக்கேணியை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கந்தையா கனகசிங்கம்**

(பளை மாமா)

திதி: துதியை (13.10.2011)

கண்ணீரில் கரைந்து ஆண்டுகள் ஐந்து ஆனவரே
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மை அழைக்கின்றன
இறுதி வரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடை நடுவே தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள்
எம் உயிர் உள்ள வரை உங்களை மறவோம்.

என்றென்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி - க. பரமேஸ்வரி
(பிள்ளை)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

## 13ஆம் வருடாந்த அஞ்சலி

பிறப்பு 1978★10★22



இறப்பு 1998★10★13

**செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா**

(இல. 419, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்)

திங்கள் முகத்தாமரையே! தேன்கலந்த தெள்ளமுதே!
மஞ்சள் நிற வான்மதியே! மாஞ்சோலைப் பூங்குயிலே!
நீ வாழ்ந்த கோயிலிலே தீபங்கள் அணையவில்லை!
நீ பிறந்த இல்லத்திலே நேசமின்னும் குறையவில்லை
ஆழப் பெருங்கடலே ஆலய மணிச்சுடரே!
காலைப் பனித்துளியே கண்மூடி நீ உறங்கு!
சோலைப் பூமரமே! தோகை மயிலினமே!
சோகம் தனை மறந்து சொர்க்கத்தில் நீ உறங்கு!
ஆண்டுகள் பதின்மூன்று ஆனதென்ன மாயமம்மா!
ஆனாலும் நாள்தோறும் ஆசைமுகம் மலருதம்மா

சோகம் சுமந்து வாழும் சொந்தங்கள்





தகுதி

- இலங்கை வங்கியில் 18 plus கணக்கு வைத்திருத்தல்.
- 2010ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிற்கு தெரிவுசெய்யப்பட்டவராக இருத்தல்
- 2010/01/01 திகதியிலிருந்து 2010/12/31 வரை ரூபா 5000/- இற்கு குறையாத நிலுவையைப் பேணிய 18 plus கணக்காக இருத்தல்

மேற்குறிப்பிட்ட தகைமையை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தினைப் பூர்த்தி செய்து கீழ் காணப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2011 ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

புலமைப்பரிசில் விருது

திறமைக்கான புலமைப்பரிசில்

கணக்கு வைத்திருப்பவர்களுள் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய துறைகளில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுள் தலா 5 பேர் படி தெரிவுசெய்து புலமைப்பரிசில் வழங்கப்படும்.

பொதுப் புலமைப்பரிசில்

தகைமையுடைய 18 plus விண்ணப்பதாரர்களுக்கிடையே சீட்டிழுப்பு மூலம் பொதுப் புலமைப்பரிசிலுக்கு தெரிவுசெய்யப்படுவர்.

தபால் விலாசம்

இலங்கை வங்கி 18 plus கணக்கு இலக்கம் :
2010 க.பொ.த உயர்தரப் பரீட்சை இலக்கம் :

18 plus புலமைப்பரிசில் 2010

www.boc.lk

BOC
தேசத்தின் வங்கியாளர்



இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.


எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-19,20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலைவை விட்டுத்தள்ளுங்கள்!

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288

Head Office Colombo - 011 4874854


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**துரைசிங்கம் விஜயமனோகர்**

(BBA)

(அபிவிருத்தி உதவியாளர் - மாவட்ட திட்டமிடல் செயலகம் கிளிநொச்சி)

திதி: 13.10.2011

தோற்றம் 03.05.1974

மறைவு 25.09.2010

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் கவர்ந்திட்ட அன்பு மனோவே
உன்னுள்ளே புதைத்து வைத்த இன்பத்தை எல்லோருக்கும் விதைத்தவனே
சத்தியத்தின் உறைவிடமாய் சகலருக்கும் நிறைகுடமாய்
வாழ்ந்து காட்டிய அருமைச் சோதரனே
ஒரு வருடம் ஓடி மறைந்துவிட்டது
உன் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது

அன்னாரது ஆண்டு திதி நிகழ்வு பாடசாலை வீதி, ஆழியவளையிலுள்ள எமது இல்லத்தில் இன்று (13.10.2011) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பகர்கள், சக உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உன் நினைவால் வாடும்:
தந்தை, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.
பாடசாலை வீதி, ஆழியவளை.

தகவல்:
த.துரைசிங்கம் (தந்தை),
T.P. 0775080872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம் மூலம் வி அன் ரி அறக்கட்டளை நிதிய சமூக பணிகள்

ஆவரங்கால் என்றால் நினைவுக்கு வருவது சிவசக்தி மணிமண்டபம். யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் சிவன்கோயிலுக்கு அருகில் வீதிக்கு மேற்குப் புறத்தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. சிவசக்தி மணிமண்டபம் மூலம் பெறப்படும் வருமானம் முழுவதும் வி அன் ரி அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் மூலம் சமூக மேம்பாட்டுப் பணிக்கு பயன்படுத்தப்படுகின்றது.



வருமானம் ஈட்டுவதற்கு போட்டி போட்டு மண்டபங்களை அமைத்து வாடகைக்குக் கொடுத்து வரும் யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் 2003 ஆண்டு 10 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் மணிமண்டபத்தை தனது தாய் தந்தையரின் நினைவாக 13 பரப்புக் காணியில் நிறுவி வி.ரி. அறக்கட்டளை மூலம் பொதுச் சொத்தாக்கிய வர் பரோபகாரி வேலுப்பிள்ளை சிவசுந்தரம்.

ஆவரங்கால் வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூன்று புதல்வர்களில் இளையவர் வே.சிவசுந்தரம். வருமான வரித்திணைக்களத்தில் உயர்பதவி வகித்தவர். 1983 ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்று தனது சுயமுயற்சியாலும் உழைப்பாலும் உயர்ந்தவர். தமது பெற்றோர் நினைவாக ஆவரங்காலில் மணிமண்டபத்தை நிறுவுவதற்கு தீர்மானித்தார். மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு 10 மில்லியன் ரூபா செலவாகும் எனத் திட்டமிட்ட வேளையில் வயல்நிலமாக தாழ் நிலமாக இருந்த 13 பரப்பு நிலத்தையும் மண்டபக் கட்டுமானத்துக்குரிய நிலமாக உயர்த்துவதற்கு பல லட்சம் ரூபா செலவு செய்யவேண்டி ஏற்பட்டது.

சிவசுந்தரம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துக்கும் மூத்த சகோதரன் இளையதம்பியும் சகோதரன் வே. கந்தசாமியும் (அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொருளாளர்) பூரணமாக ஒத்துழைப்பு வழங்கி களத்தில் இருந்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டனர். மண்டபத்தின் நிர்மாணப்பணியின் திட்ட மிடல் மேற்பார்வையை சிவசுந்தரத்தின் வேண்டுகோளின் பேரில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மேற்கொண்டுவந்தார்.

வி அன் ரி அறக்கட்டளையின் மூலதனச் சொத்தாக சிவசக்தி மணிமண்டபம் மாற்றப்பட்டு மண்டபத்தின் வருமானம் முழுவதும் வி அன் ரி அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் ஊடாகக் கல்வி, சமய, சமூக, மேம்பாட்டுப் பணிகளுக்கு பயன்படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை தொடர்பான உயில் இந்து மாமன்றத்தின் தலைவர் சட்டத்தரணி கந்தையா நீலகண்டனால் களால் எழுதப்பட்டு சட்ட ரீதியிலான நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மணிமண்டபத்தில் மற்றும் வி அன் ரி அறக்கட்டளையின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான முறையில் ஆலோசனைகளை வழங்கி உதவுவதற்கு ஓய்வு பெற்ற அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் சிவசக்தி மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. அதில் துறைசார் நிலையில் 15 பிரமுகர்கள் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளனர்.

வி அன் ரிஅறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின் பணி முன்னெடுப்பு எல்லையாக ஆவரங்கால் மற்றும் அயல்கிராமம், யாழ்.மாவட்டம், அகில இலங்கை என்ற வகையில் வரையறை செய்யப்பட்டு விரிவடைந்து செல்கின்றது. சிவசக்தி மணிமண்டபத்தின் 8 ஆவது அகவை நிறைவும் அறக்கொடை வழங்கல் நிகழ்வும் வைபவ ரீதியாக 2011.09.04 ஆம் திகதி சிவசக்தி மணிமண்டப நம்பிக்கை பொறுப்புச் சபையின் செயலாளர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி. சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராக்வும் கலந்து கொண்டனர்.

சிவசக்தி மணிமண்டபம் 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் செயற்படத் தொடங்கியதில் இருந்து அதன் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் வி அன் ரி அறக்கட்டளையின் மூலதனமாகக் கொள்ளப்படுகிறது. தாபகரின் தாய் தந்தையரான அமரர் வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் முதல் எழுத்துக்களான வி அன் ரி என்பன அறக்கட்டளையின் பெயராகக்கொள்ளப்பட்டது.

சிவசக்தி மண்டபம் உள்ளவரை நிலைத்துநிற்கக் கூடிய இந்த தர்ம கைங்கரியத்தை பிள்ளைகள் மேற்கொண்டு
''மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல்
என்னும் சொல்''
என்ற வள்ளுவப் பெருந் தகையின் வாக்குக்கு அமைய இருப்ப தோடு இவர்களின் முன்னோடிச் செயற்பாடு ஏனையவர்களுக்கும் முன் மாதிரி யாக அமைந்துள்ளது.

**ஞான ஆதவன்**

வி அன் ரி அறக்கட்டளையின்பணிகள் ஆவரங்கால் பகுதிக்கோ என்றோ யாழ். குடாநாட்டுக்கு மட்டுப்படுத்தப் படாமல் ஆவரங்காலில் இருந்து அகில இலங்கை வரை விரிவடைந்து செல்கின்றது. சமூகம், சமயம், கல்வி, அறப்பணி பல நோக்குக் கொண்டதாக பரந்து செல்வது தாபகர்களின் பரந்த சிந்தனையையும் தீர்க்க தரிசனமான உணர்வையும் புலப்படுத்தி உள்ளது. *(தொடரும்)*

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288.

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி ஞானம்மா இம்மானுவேல்**



தோற்றம்:
17.03.1935

மறைவு:
13.10.1991

எங்களின் அன்பான அம்மாவே
நீங்கள் மறைந்து ஆண்டுகள் 20
சென்றாலும் தங்களின் புன்னகை ததும்பிய
மலர்ந்த முகம் இன்றும் எம்மைவிட்டு
நீங்கவில்லை

என்றும் உங்களை அன்புடன்
நினைவு கூரும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உறவினர்கள் (கனடா)

க.நவரத்தினம் - மைத்துனர்
இல.4, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**அன்பொளி கல்வியகம்**
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011
சித்தியடைந்த மாணவர்களுக்கான
**பரிசளிப்பு நிகழ்வு**
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு **16.10.2011 ஞாயிற்றுக்கிழமை** பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள **சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
**இயக்குநர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தர் இராஜரட்ணம்**

*திதி: பிரதமை*
*13.10.2011*



வேராய் இருந்து ஒளியாய் ஒளிர்ந்து
நற்பண்புகள் பல கற்றுத்தந்து
நற்பலன்கள் பல அளித்து
நலமோடு நாம் வாழ
நல்வழி காட்டி நின்று
எமை வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே - அப்பா
நீங்கள் இறைவனுடன்
இரண்டறக்கலந்து
ஆண்டோன்று ஆனதுவே
என்றும் உங்கள் நினைவலைகள் எம்மோடு.....
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்
குடும்பத்தினர்.
காளிகோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.

மலர்வு:
26.09.1934

உதிர்வு:
24.09.2010

**தவறிவிட்டது**
இணுவில் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய கதிரவேலு றஜிந்தன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இணுவில் சந்திக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
க.றஜிந்தன்
மே/பா-பூ.கதிரவேலு,
இணுவில் தெற்கு,
கணேசுசாமியார், வைரவர் கோயிலடி, சுன்னாகம்.
தெ.பே:0750439132

**வீடு விற்பனைக்கு**
பயன்தருமரங்கள், சுற்றுமதில் ஆகியவற்றுடன் கூடிய $1\frac{1}{2}$ பரப்புக் காணியில் அமைந்த புதிய வீடு கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0779633993

**வீடு வாடகைக்கு உண்டு**
4 வாகனங்களுக்கு மேல் பார்க்பண்ணக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு கொக்குவில் கேணியடியில் உண்டு. அரச/ அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0773058872
0779799706

**விற்பனைக்கு**
இந்திய தயாரிப்பு சுவராச் 725 மொடல் ரக்ரர் பெட்டியுடனோ தனித்தோ நம்ப முடியாத விலையில் விற்பனைக்குண்டு. சுயதொழில் முயற்சியாளருக்கு உகந்தது.
27.10.2011 முன்பாக தொடர்புகொள்ளவும் (நிதித்தேவைக்காகவே விற்கப்படுகிறது).
26, சீனிவாசகம் வீதி,
மில் சேவைகள்,
கொட்டடி, யாழ்ப்பாணம்

**விற்பனையாளர் தேவை (ஆண்கள் மட்டும்)**
கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் பேசும் விடயங்களை மறைப்பதேன்? சம்பந்தன் எம்.பியிடம் ஆனந்தசங்கரி கேள்வி

கொழும்பு,ஒக்.13

வடக்கில் காணிப்பதிவு நடவடிக்கைக்கு எதிராக கூட்டமைப்பு நடவடிக்கை எடுப்பதாயின் நாம் முழு ஆதரவு வழங்கத் தயார். இல்லையேல் இந்த விடயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு எமக்குக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும் - என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் கோரியுள்ளார்.

அத்துடன் இதுகுறித்து நீங்கள் அரசுடன் பேசுகின்ற விடயங்களை உங்களுடைய குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறைக்க வேண்டுமா - என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப்பிய கடிதத்தில் ஆனந்தசங்கரி தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணிப்பதிவுப் பிரச்சினை இன்று மிகப்பெரிய பிரச்சினையாக வளர்ந்துள்ளது. வடபகுதி மக்கள் இது பற்றி மிகவும் கவலையுற்றுள்ளனர். இடம்பெயர்ந்த வடபகுதி மக்களிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. காணிப் பதிவுக்கு எதிராக ஓர் உறுதியான நடவடிக்கையே இன்றைய தேவையாகும்.

நீங்கள் இந்த விடயம் சம்பந்தமாக அரசுடன் நடத்துகின்ற பேச்சில் ஏற்கனவே எடுத்திருக்க கூடுமெனக் கருதி உங்களுடைய நிலைப்பாட்டை அறியாது எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க நான் தயங்குகின்றேன். எமக்கு ஏற்பட்டிருக்கும் இந்தப் பயத்துக்குக் காரணம் கடந்த 2011.09.25 அன்று நடைபெற்ற எமது கட்சியின் மாநாட்டில் தமிழரசுக் கட்சி மட்டும் கலந்துகொள்ளாமையே ஆகும்.

நீங்கள் அரசுடன் பேசுகின்ற விடயங்களை உங்களுடைய குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறைக்க வேண்டுமா என மிக ஆர்வத்துடன் கேட்க விரும்புகின்றேன்.

என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்று நான் முறையிடவரவில்லை. ஆனால், நான் அறிய விரும்புவது அரசுடனான உங்களுடைய பேச்சுக்கு இடையூறு ஏற்படுத்தாது எந்தெந்த விடயங்களில் என்னைப் போன்றவர்கள் தலையிடலாம் என அறிய விரும்புகின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிருஷ்ணராசா சுகந்தராஜ்
(B.Com(Hons), (Special in Accounting)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 27 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கணக்கியல்வணிகமாணிப் பட்டத்தைப்பெற்ற திரு. கிருஷ்ணராசா சுகந்தராஜ் அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பதவிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மச்சாள்மார்
(யமுனா, தேவா, சித்திரா, றதி, சிந்து)

வேலணை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்ற செல்வன்

*பத்மநாதன் அபிராம்*
*(யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)*
அவர்களைப்



பாராட்டுவதுடன்
எல்லையில்லாத
கல்வியினைத் தடைகள்
இல்லாது பெற்றிடவும்
கலையிலும், கல்வியிலும்
உயர்ந்தோனாய் பார்போற்ற
பல பட்டங்களையும்
உயர்பதவிகளையும்
பெற்றிட
உளம் கனிந்து
வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய குழாம்
எழுது வினைஞர்கள்,
உதவிப் பணியாளர்கள்,
பொருளியற் கல்லூரி
இணுவில்,
யாழ்.நாவலர் வீதி,

**Barathy**
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.

# போதைப்பொருள் கடத்தல்; இரு தமிழர்கள் கைது

இராமநாதபுரம், ஒக்.13

தமிழகத்தில் இருந்து போதைப் பொருள் கடத்திய இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ஒன்றரைக் கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

தலைமன்னாரைச் சேர்ந்த நிக்கோலஸ் சுதர்சன் (வயது-25), மற்றும் முள்ளிவாய்க் காலைச் சேர்ந்த சிதம்பரம் சாந்தகுமார் (வயது-54) ஆகிய இருவரும் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி அருகே ஏராந்துறை கடற்கரையில் கியூ பிராஞ்ச் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து ஒன்றரைக் கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இவர்கள் நீண்ட காலமாக ஆள் கடத்தல் வேலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை அனுப்புவதற்காக அவர்களை ஏர்வாடிக்கு வரச்சொல்லி, அவர்களுடன் கஞ்சாவையும் கடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே அவர்கள் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

இதுகுறித்து ஏர்வாடி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# மேசையிலிருந்து விழுந்த குழந்தை மரணம்

கொழும்பு, ஒக்.13

வெல்லவ பிரதேசத்தில் மேசையிலிருந்து கீழே விழுந்த ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

வெல்லவ, பன்னல பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த இந்தச் சம்பவத்தில் டீ.எம்.ஹிருகேஷாதி எனும் குழந்தையே மரணமடைந்துள்ளது.

இந்தக்குழந்தை தனது சகோதரியுடன் அறையொன்றிலிருந்த மேசையில் இருந்து கட்டிலுக்கு தாவிக்குதித்து விளையாடிக் கொண்டிருந்தபோது தவறி தரையில் வீழ்ந்து மரணமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெல்லவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

# தேர்வுகள் பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.சைவபரிபாலன சபையால் எதிர்வரும் 22ஆம் 29ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தமிழ்மொழி சைவநெறித் தேர்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 22ஆம்திகதி பரீட்சை திணைக்களத்தால் தரம் 12 மாணவர்களுக்கான பொதுத்தகவல் தொழில் நுட்பப்பாடம் நடத்தப்பட இருப்பதால் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ் மொழித் தேர்வும் மறுநாள் சனிக்கிழமை சைவநெறித் தேர்வும நடைபெறும் எனத் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ம313)

## காணி உடன் விற்பனைக்கு

திருநெல்வேலி, தாளையடி வீதியில் கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் இரண்டு பரப்பு
[illegible]
[illegible]
தொடர்பு : 021 225 5005

# பெண்களுடன் அநாகரிகமாக நடந்துகொள்ளும் கிராம அலுவலர்

## பொதுமக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.13

அனலைதீவில் கடமையிலுள்ள கிராம அலுவலர் ஒருவர் பெண்களுடன் அநாகரிகமாக நடந்துகொள்வதாக பொதுமக்கள் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். யாழ்.அரச அதிபர், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் மற்றும் பலரிடம் பொது மக்கள் இந்த முறைப்பாட்டை கடந்த ஏப்ரல் மாதம் செய்துள்ளனர்.

அனலைதீவு ஜே/38 கிராம அலுவலர் றொபேட்சன் ஜோன்சன் என்பவருக்கு எதிராகவே இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கிராம அலுவலர் பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தும் விதமாக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுவருவதுடன். அந்த விதமாக நடந்துகொள்ள முயல்வதாகவும் பொதுமக்கள் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-14)

# ஆறு.திருமுருகனுக்கு பாராட்டு விழா



வலி வடக்கு, ஒக் .13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டமையைப் பாராட்டி தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய பரிபாலனசபைத் தலைவரும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனைப் பாராட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் சபையின் உபதலைவர் சி.அருளானந்தம் தலைமையில் இடம்பெற்றது.

ஆலய முன்றிலில் இருந்து துர்க்கா இல்லச் சிறார்களின் வரவேற்புடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், இந்துமதக் குருமார்கள் உட்பட பலரும் புடை சூழ விழா மண்டபத்துக்கு விழாநாயகன் அழைத்து வரப்பட்டார். இந்தநிகழ்வில் வரவேற்புரையை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் விநாயகரெத்தினம் நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கலாநிதி என்.சண்முகலிங்கன், பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ.சண்முகதாஸ், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் சிவாஜி, வட மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் உட்பட பலர் நிகழ்தியுனர். (ச-86)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
வல்லிபுரம்
கந்தையா



*மலர்வு*
*04-10-1930*

*உதிர்வு*
*14-09-2011*

கடந்த (14.09.2011) புதன்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வல்லிபுரம் கந்தையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.10.2011) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (14.10.2011) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0212222074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களுடன் துப்பாக்கிதாரிகள் சென்றால் தான் தீர்வு கிடைக்கும்

## ஜெயலலிதாவுக்கு ராமதாஸ் தெரிவிப்பு



தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினால் அழிக்கப்படுவது தொடர்வது வழக்கமாக உள்ளது. எனவே இது குறித்து மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதுவதால் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. துப்பாக்கி ஏந்தியவர்களை உடன்செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்வாறு பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

கடலுக்குள் செல்லும் மீனவர்களுடன் பாதுகாப்புக்காக பொலிஸாரை அனுப்ப வேண்டும். மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதால் தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு என்று தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலை நிறுத்தக்கோரி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் கடிதம் எழுதி உள்ளார்.

அதில் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது 16 முறை தாக்குதல் நடத்தி உள்ளது. இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கைப் பயணத்தின் போதும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது.

மண்டபம் கடற்பகுதியில் மீன் பிடித்தோரை இலங்கை கடற்படை விரட்டி அடித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை அரசிடம் இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மூவரின் தூக்கை ரத்து செய்யக்கோரி விரைவில் வேலூர் சிறை முற்றுகை

## தேசிய லீக் கட்சி அறிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்குக் கைதிகளான சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி விரைவில் வேலூர் சிறையை முற்றுகையிட்டு சிறையைச் சிறைப்படுத்தும் போராட்டம் நடத்துவோம்.

- இவ்வாறு தேசிய லீக் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் பேராசிரியர் தி.மு.அப்துல்காதர் தெரிவித்துள்ளார்.

வாணியம்பாடியில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில்:

தேசிய லீக் வேட்பாளர்கள் விருதுநகர் மாவட்டம், வீர சோழம் பேரூராட்சித் தலைவர் பதவியில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் பல்வேறு பதவிகளுக்கு 60 இடங்களில் போட்டியிடுகின்றனர். ஏனைய பகுதிகளில் தி.மு.கவுக்கு ஆதரவான நிலை எடுக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்குக் கைதிகளான சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும். இதனை வலியுறுத்தி மக்களின் ஒத்துழைப்போடு வேலூர் மத்திய சிறையை முற்றுகையிட்டு சிறையைச் சிறைப்படுத்தும் போராட்டம் விரைவில் நடக்கும் - என்றார். (வ)

# மூவரின் மரண தண்டனையை உடன் ரத்துச் செய்ய வேண்டும்

## சோனியாவுக்கு ராமதாஸ் கோரிக்கை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி பிரதிபா பாட்டீலுக்கு சோனியாகாந்தி வெளிப்படையாகக் கடிதம் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மயிலாடுதுறையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், தமிழகத்தில் உரத் தட்டுப்பாட்டால் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். உரத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் மின்வெட்டு நீடித்து வருகிறது. மின்வெட்டைப் போக்க அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மின்தடை பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் - என்று அவர் தனது பேட்டியின்போது தெரிவித்தார். (வ)

## பொலிஸாரின் விரலைக் கடித்துக் குதறிய இளைஞர்

பொலிஸ் நிலையத்தில் விசாரணையின்போது, எஸ்.ஐயின் விரலைக் கடித்துக் குதறிய இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

சேலம், அம்மாபேட்டையை சேர்ந்த ஜெயபிரகாஷ் தனது மனைவியை மதுபோதையில் தகராறு செய்து அடித்துத் துன்புறுத்தியுள்ளார்.

இதனால் விஜயலட்சுமி பெற்றோர் வீட்டுக்கு சென்று விட்டார். இது குறித்து வீராணம் பொலிஸில் அவர் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து ஜெயபிரகாஷை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து பொலிஸார் விசாரித்தனர். எஸ்.ஐ. வெங்கடேசன், ரைட்டர் பழனி ஆகியோர் விசாரணை செய்து கொண்டிருந்தனர். திடீரென ஆவேசமடைந்த ஜெயபிரகாஷ், மனைவியை பொலிஸார் முன்னிலையில் சரமாரியாகத் தாக்கினார். இதைத் தடுத்த எஸ்.ஐ. வெங்கடேசனின் இடது கையின் சுண்டுவிரலை, ஜெயபிரகாஷ் கடித்துத் துப்பினார். ரத்தம் கொட்டிய நிலையில் எஸ்.ஐ.அலறினார். ஏனைய பொலிஸார் எஸ்.ஐயை உடனடியாக சேலம் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். (வ)



காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி, உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி மாவட்டத்தில் உள்ள ஏழைக்கிராமங்களுக்கு திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

# பயங்கரவாதத்துக்கு எதிராக ஒத்துழைப்புத் தேவை

## மன்மோகன் கருத்து

டில்லி, ஒக்.13

இந்தியா எப்பொழுதுமே பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படக் கூடிய நாடு என்று பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் டில்லியில் முப்படைகளின் உயர்நிலைத் தளபதிகள் கலந்து கொண்ட மாநாடு டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பிரதமர் பேசுகையில்:

இந்தியா தற்போது கூட பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் உலகளாவிய ல் ரீதியில் ஒத்துழைப்பைக் கோருகிறது.

உலகளாவிய ஒருங்கிணைந்த ஒத்துழைப்பைப் பெறுவது என்பது கடினமான ஒன்று. பயங்கரவாத குழுக்கள் திறமையான குழுக்களுடன் விரைவாகச் செயற்பட்டு வருகின்றன. இது மிகவும் அபாயகரமானதாகும். இந்தத்தருணத்தில் இந்தியா ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பைப்பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

நாடு பல்வேறு வகையான சவால்களைச் சந்தித்து வரும் வேளையில் இந்த மாநாடு இடம் பெறுகின்றது. பயங்கரவாதம், இடதுசாரி தீவிரவாதம், கடற்கொள்ளை போன்றவை எமக்குப் பெரும் சவால்களாக இருக்கின்றன. தகவல்கள் வேகமாகப் பரவும், பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்கள் அதிரடியாக அறிமுகமாகிவரும் இந்தக் காலகட்டத்தில் இது போன்ற சவால்களுக்கு மிக விரைவாகவும் ஒருங்கிணைப்புடன் பதிலடி தருவதும் நாட்டின் பாதுகாப்புக்கு மிக முக்கியமான தாகும்- என்றார்.

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி. -சி18

இந்தியாவின் பி.எஸ்.எல்.வி -சி 18 ரொக்கெட் நேற்று முற்பகல் 11 மணியளவில் விண்ணில் வெற்றிக்கரமாகச் செலுத்தப்பட்டது.

வளிமண்டலம் மற்றும் பருவநிலை குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட இந்தியா-பிரான்ஸ் இணைந்து தயாரித்த Megha& Tropiques செயற்கைக் கோள் உட்பட 4 செயற்கைக் கோள்களை பி.எஸ்.எல்.வி -சி18 நேற்று விண்ணில் ஏவியது.

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஏவப்பட உள்ள இந்த ரொக்கெட்டின் ஆரம்பக்கட்டணங்கள் 50 மணித்தியாளங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

இறுதிக்கட்ட சோதனைகள் முடிந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் விண்ணில் செலுத்தப்பட்டது. 4 கட்ட எரிபொருள்களுடன் தனது பயணத்தைத் தொடர்ந்த ரொக்கெட் எடுத்து சென்ற 4 செயற்கை கோள்களையும், சரியாக பாதையில் விட்டது.

நான்கு செயற்கைக் கோள்களும் புவிச் சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. திட்டமிட்டபடி 4 கோள்களும் பிரிந்து சென்று சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தும் செய்யப்பட்டது. ரொக்கெட்டின் செயற்பாடு திருப்திகரமாக உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (வ)

# கலாநிதி, தயாநிதி வீடுகளில் சோதனை மக்களை ஏமாற்ற நடந்த கண்துடைப்பு

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஒக்.13

''கலாநிதி, தயாநிதி ஆகிய இருவரின் வீடுகளில் சி.பி.ஐ., விசாரணை நடத்தி இருப்பது, மக்களை ஏமாற்ற நடந்த கண்துடைப்பு வேலை'' என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஏர்செல் நிறுவனத்துக்கு, அலைக்கற்றை ஒதுக்கீடு செய்தது, ஏர்செல் பங்குகளை விற்க, சிவசங்கரனை நிர்ப்பந்தித்தது தொடர்பாக, தயாநிதி மற்றும் கலாநிதி உள்ளிட்டோர் மீது, சி.பி.ஐ. வழக்குப் பதிந்துள்ளது. இதையொட்டி, அவர்களது வீடுகளில், சி.பி.ஐ. கடந்த திங்கட்கிழமை விசாரணை நடத்தியது. ஆனால், நான் காண்டுகள் கால தாமதமாக நடந்த இந்த விசாரணை வெறும் கண்துடைப்பு என்றும் பல்வேறு தரப்பில் கருத்துகள் வெளியாகியுள்ளன.

சி.பி.ஐ.யின் காலதாமதமான விசாரணை குறித்து, முதல்வர் ஜெயலலிதாவிடம், செய்தியாளர்கள் கேட்டபோது:

அவர் பதிலளிக்கையில்:

மாறன் சகோதரர்கள் மற்றும் அவர்களது அலுவலகங்கள், நெருங்கியவர்களிடம் சி.பி.ஐ. நடத்திய விசாரணை மக்களை ஏமாற்றுவதற்காக செய்யப்



பட்ட வெறும் கண்துடைப்பு செயல் போல உள்ளது. எனினும், இந்த விசாரணைகள் மூலம், ஏதாவது தகவல் வெளி வரும் என்று நம்புவோம். ஆனால், இது, மக்களை மோசடி செய்ய நடந்த ஒரு செயல் என்றே தெரிகிறது. இதற்குக் காரணம், இந்த ஊழல் குறித்து, ஊடகங்களில் முதலில் செய்தி வெளிவந்து, நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது.

இந்த நான்கு ஆண்டுகளில், ஏராளமான உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். இந்த நான்கு ஆண்டுகளின் இடைவெளியில், கலாநிதி, தயாநிதி சகோதரர்கள், தங்களது வீடுகள் அல்லது அலுவலகங்களில், சம்பந்தப்பட்ட ஆவணங்களை இன்னும் வைத்திருப்பர் என்பதை, கற்பனை செய்யவே முடியவில்லை. எனவே, இந்த விசாரணைகளால் ஏதாவது வெளிவருகிறதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இவ்வாறு முதல்வர் கூறினார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
13 ஒக்ரோபர் 2011 வியாழக்கிழமை

## முல்லேரியா சம்பவம் போன்ற மோதல்கள் இடம்பெறுவது ஏன்?

முல்லேரியா பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற இரண்டு அரசியல்வாதிகளுக்கு இடையிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் இவ்வாறான சம்பவங்கள் ஏன் இடம்பெறுகின்றன என்று அரசியல்வாதிகளிடமே கருத்துக் கேட்டோம்.

## பாதாளக் குழுவினர் எம்.பியானால் அரசியல் சாக்கடையாக மாறும்

**சந்திரசேகரன்**

மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாதவர்களும், பாதாள உலகக் கோஷ்டியினரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானால் இவ்வாறான சண்டையே ஏற்படும். 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விருப்பு வாக்கு முறைமை இன்றைய கால அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனினும், முன்னைய தேர்தல்களிலும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றன. முல்லேரியா சம்பவமானது பாதுகாப்புச் செயலாளரைக் கண்காணிக்க அரசினால் நியமிக்கப்பட்ட எம்.பி. ஒருவருக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பிரதிநிதி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்டதாகும். அண்ணன் - தம்பிக்கு இடையிலான முறுகல்நிலை முல்லேரியா சம்பவத்தை அடுத்து வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளது என மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் சாக்கடை அரசியல் கலாசாரமே உருவாகியுள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர்ந்தால் அது எதிர்கால சந்ததியினரையே பாதிக்கும். இப்படிக் கூறினார் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 06 . 1935



உதிர்வு 25 . 09 . 2010

திருமதி சின்னத்துரை பாக்கியம்

திதி: அபரபக்க துதியை

எமது அன்பின் திருவுருவமே! பாசதீபமே!
பாரினில் எமை விட்டு ஆண்டொன்று
சென்றாலும் ஆறாது தாயே! நம் துயரம்.

'இராஜ வீதி',
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## மஹிந்த - கோத்தபாய இடையிலான போரால் அரங்கேறிய கொடூர சம்பவம்

**பாலித ரங்கபண்டார**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையிலான போர் முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலிருந்து ஆரம்பித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உண்மையாக உழைத்தவர்கள் ஜனாதிபதியின் பக்கம் திரண்டுள்ளனர். அதேசமயம், நாட்டிலுள்ள பாதாள உலகக் கோஷ்டியினர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பக்கம் திரண்டுள்ளனர்.

இதனால் ஒட்டுமொத்த பாதுகாப்புத் துறையினர் சுதந்திரமாகச் செயற்பட முடியாது தவிக்கின்றனர். அத்துடன், அரசின் கைப் பொம்மைகளாகவும் அவர்கள் மாறியுள்ளனர்.

நாட்டின் நிலைமை மோசமடைகிறது. இதற்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்.

நாடாளுமன்றில் ஹன்சாட்டில் பதிவாகும்படி கொலை செய்வேன், ஆள்களை வைத்து முடித்திடுவேன், தாக்குதல் நடத்துவேன் என அரச அமைச்சர்கள் பிரசித்தமாகக் கூறுகின்றனர். பொது இடங்களில் மேர்வின் சில்வா போன்ற சண்டித்தனம் புரியும் அமைச்சர்கள் பொதுமக்களின் மீது தாக்குதல் நடத்தி மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துகொள்கின்றனர்.

இவ்வாறானதொரு கலாசாரமே இன்று ஏற்பட்டுள்ளது என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. பாலித ரங்கபண்டார.

## கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் விபரீதம்

**முத்து சிவலிங்கம்**

கட்சிக் கட்டுப்பாட்டை மீறி உறுப்பினர்கள் நடந்துகொண்டதாலேயே முல்லேரியாவில் இவ்வாறானதொரு கொடூரச் சம்பவம் இடம்பெற்றது.

அதற்காக விருப்புவாக்கு முறைமைதான் இந்தச் சம்பவத்துக்கு மூலகாரணம் எனக் கூறமுடியாது.

தேர்தல் காலங்களில் போட்டித் தன்மை காரணமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது சகஜம்தான். இதற்காக விருப்புவாக்கு முறைமையைக் குறை கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறு இந்த விருப்புவாக்கு முறைமையை நீக்கினால் அது தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும்.

ஏனென்றால், நடைமுறையிலுள்ள விருப்பு வாக்கு முறைமையால்தான் எமது கட்சியிலும்சரி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மையினரைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற கட்சிகளிலும் சரி பிரதிநிதித்துவம் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில், அந்த முறைமை இரத்துச்செய்யப்பட்டால் அது தமிழ்க் கட்சிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும். - என்று தெரிவித்தார் பிரதி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்து சிவலிங்கம்.

## கவலையளிக்கிறது; விமர்சிக்க முடியாது

**அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா**

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ மானது கவலையளிக்கிறது. இருந்தபோதிலும், குற்றவாளியாக இனங்காணப்படுபவர் எவராக இருந்தாலும் சட்டத்தின் முன்நிறுத்தி தண்டிக்கப்படுவர்.

இந்தச் சம்பவம் தொடர்பான சுயாதீன விசாரணைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார். அதன்படி விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலைமையில் இச்சம்பவம் குறித்து விமர்சிக்கவோ அல்லது எதிர்வுகூறவோ எம்மால் முடியாது.

அரச தரப்பினர்களுக்கு இடையிலான சம்பவத்தால் மிகுந்த கவலையடைகின்றோம். அதேவேளை, எதிர்காலத்தில் இவ்வாறான கொடூர சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

இதேவேளை, முல்லேரியா சம்பவமானது விருப்புவாக்கு முறைமையால் இடம்பெற்ற ஒன்றல்ல.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட இந்த முறைமையால் இதுவரை பெரிய சம்பவங்கள் இடம்பெறவில்லை. கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் விருப்புவாக்கு முறைமையால் அல்ல - என்றார் சுற்றாடல் வள அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா.

## விருப்பு வாக்குமுறைமையே காரணம்

**குணதாஸ அமரசேகர**

விருப்புவாக்கு முறைமை காரணமாகவே அரசியல்வாதிகளுக்கு இடையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

எதிர்காலத்திலும் இவ்வா றான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே. ஆர். ஜயவர்தனவால் கொண்டுவரப்பட்ட விருப்பு வாக்கு முறைமையை அரசு உடன் இரத்துச்செய்ய வேண்டும்.

இலங்கையில் எதிர்வரும் தேர்தல்களில் வேட்பாளர்கள் ஆயுதங்கள் ஏந்தும் நிலைமை உருவாவது நிச்சயம்.

அத்துடன், இந்த முறைமையை இரத்துச்செய்யாவிட்டால், சுயாதீனமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்து வதற்குத் தேர்தல்கள் செயலகம் பெரிய நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். அதேவேளை, வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது - என்று கூறினார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர.


அரசாங்க அறிவித்தல்
யாழ். மாவட்டச் செயலகம்
வாகனங்களை வாடகைக்கு
பெற்றுக்கொள்வதற்கான கேள்வி விலை கோரல்

குடிசன வீட்டு வசதித் தொகை மதிப்பீடு -2011 வெளிக் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் வாகனம் (Van) ஒன்றைப் பெற்றுக்கொள்ளவுள்ளதால் விண்ணப்பிக்க விரும்பும் தனியார் போக்குவரத்துச் சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவ் விடயம் தொடர்பான மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் மாவட்டச் செயலகத்திலுள்ள புள்ளி விவரக் கிளையில் அலுவலக நாள்களில் 13.10.2011 ஆம் திகதியிலிருந்து காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.4.15 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனங்களை வாடகைக்கு விடுவிப்பதற்கான கேள்வி விண்ணப்பம் -2011 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ, அல்லது பிரதம கணக்காளர் அலுவலகக் கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 19.10.2011 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பி.பகல் 3.00 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபரும்/ மாவட்டத் தொகை
மதிப்பு ஆணையாளரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/4944)






சகஜ யோகா வழங்கும்

"அகத்துள் உறைந்திருக்கும் பேருண்மையை, மன அமைதியைத் தேடி ஒரு தியானப் பயிற்சி"

நமக்குள் ஆழ்ந்திருக்கும் குண்டலினி எனப்படும் இறைசக்தியினை விழிப்படையச் செய்வதன் மூலம் சகஜ யோகா ஒரு தனித்துவமான, எளிய தியான முறையினை வழங்குகிறது. இச்சக்தியானது நம் சக்கரங்கள் எனப்படும் சக்தி மையங்களை சமநிலைப்படுத்தி, அதற்கு சக்தியூட்டுகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர் அனைவருக்கும் பயனுடையது.

அனைவரும் வருக!

சகஜ யோகா தியானப் பயிற்சி மலேசியாவிலிருந்து வருகை தந்துள்ள சகஜ யோகிகளால் இலவசமாகப் பயிற்றப்படும்.

இடம்: நாவலர் மணி மண்டபம்
நல்லூர் கந்தசாமி கோயில் அருகில்

காலம்: ஒக்.15,16 ஆம் திகதி

நேரம்: பி.ப.3 மணிக்கு நடைபெறும்

பிரதி சனிக்கிழமை தோறும் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும்.

யா/ கைதடி சகஜ யோகிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருள் விலையேற்றம் ஆபிரிக்க நாடுகளுக்கு ஆபத்து

## ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை



நியூயோர்க், ஒக்.13

உலகளவில் உணவுப் பொருள்களின் விலையேற்றம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இறக்குமதிகளை மட்டுமே நம்பியிருக்கும், சிறிய நாடுகள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் கடும் நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

2015ஆம் ஆண்டளவில் உலகில் பசியினால் வாடுபவர்களின் எண்ணிக்கையைப் பாதியாக குறைக்கும் நோக்கில், மூன்று நிறுவனங்களுடன் இணைந்து ஐ.நா மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டத்தின் இலக்குகளை எட்டுவதில் உணவுப் பொருள்களின் விலையேற்றம் பெரும் சவாலை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை, விலையேற்றத்தினால் கடும் நெருக்கடி நிலைமை ஏற்பட்க் கூடும் என எச்சரித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதி நாடான தாய்லாந்து, அங்கு ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக் காரணமாகத் தனது நெல் விளைச்சல் இந்த ஆண்டு 15 சதவீத அளவுக்கு வீழ்ச்சி அடையக் கூடும் என எச்சரித்துள்ளதையும் ஐ.நா சுட்டிக் காட்டியுள்ளது.

## அதிகாரத் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு

# உக்ரெய்னின் முன்னாள் பிரதமருக்கு 7 வருட சிறைத்தண்டனை விதிப்பு



அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட் டின் பேரில், உக்ரெய்னின் முன்னாள் பிரதமர் ஜுலியா ரைமோசிங்கோவுக்கு 7 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிகாரத் துஷ்பிரயோகத்தினால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்காக 186 மில்லியன் அமெரிக்க டொலர்களை அபராதம் செலுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ரஷ்யாவுடன் எரிவாயுப் பரிமாற்றம் தொடர்பான உடன் படிக்கையை ஏற்படுத்துவதில் அதிகாரத் துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள முன்னாள் பிரதமர் ஜுலியா, அரசி யல் ரீதியான பழிவாங்கலாகவே இதனை தாம் கருதுவதாகவும் தனது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தத் தண்டனைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கண்டனம் வெளியிட்டுள்ளன.



*சீனத் தலைநகர் பீஜிங்கிற்கு சென்ற ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினை சீனப் பிரதமர் வென்.ஜியாபோ வரவேற்றுக் கை குலுக்குகிறார்.*

# இணங்கி வந்திருக்கும் மியன்மார்; கைதிகளை விடுவிக்கவும் சம்மதம்!

லண்டன் ,ஒக்.13

மியான்மார் நாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் பொதுமன்னிப்புச் சட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்படுவர் என்று அறிவித்துள்ள அரசு அவர்களில் எத்தனை அரசியல் கைதிகள் உள்ளனர் என்ற விவரத்தை வெளியிடவில்லை.

இதன் கீழ் முதலாவதாக விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளில் பிரபல நகைச்சுவை நடிகரும் அதிருப்தியாளருமான சர்கநர் என்பவரும் அடங்கியுள்ளார்.

மியன்மாரில் 140,000 பேர் வரையில் உயிரிழக்கக் காரணமான நர்கீஸ் சூறாவளி பற்றி பகிரங்கமான விமர்சித்து கருத்து·வெளியிட்டதற்காக இவர் 2008 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

2 ஆயிரம் வரையான அரசியல் கைதிகள், பத்திரிகையாளர்கள், ஜனநாயகவாதிகள் 2007 இல் இருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.15,000 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று 2011 மே மாதம் அறிவித்திருந்தது. 2009 இல் 7000 பேரை விடுவித்தது. அந்தக் கைதிகளில் அரசியல் கைதிகள் எவரும் இடம் பெறவில்லை. இதனை மனித உரிமைக்குழுக்கள் கண்டித்திருந்தன. கைதிகள் அனைவரையும் விடுவிக்கும்படி மியன்மாரின் புதிய மனித உரிமைகள் ஆணைக்குழு நாட்டின் அதிபரை கடந்த திங்கட்கிழமை கோரியிருந்தது.

அரசியல் கைதிகளைத் தடுத்து வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மியன்மார் மீது மேற்கு நாடுகள் தற்போது பொருளாதாராத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அப்பாவிகளைக் கொன்ற எகிப்து ராணுவம்

## இறுதிச் சடங்கில் மக்கள் கொந்தளிப்பு

கெய்ரோ,ஒக்.13

எகிப்தில், கிறிஸ்தவர்களுக்கும் ராணுவத்துக்கும் இடையில் நடந்த மோதலில் பலியானோரின் இறுதிச் சடங்குகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ராணுவத்துக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

இதேவேளை மூன்று நாள்கள் உண்ணாவிர தம் மற்றும் பிரார்த்தனைகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எகிப்தின் தென் பகுதியில் உள்ள அஸ்வான் மாகாணத்தில் ஒரு தேவாலயம் முஸ்லிம்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இதைக் கண்டித்து தலைநகர் கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் கடந்த 9ஆம் திகதி கிறிஸ்தவர்களால் பேரணி நடத்தப்பட்டது.

பேரணியைக் கலைப்பதற்காக அதில் ஈடுபட்டவர்கள் மீது ராணுவம் பீரங்ககளை ஏற்றி யது. கண்மூடித்தனமாக மக்கள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. இதில் இரு தரப்புக்கும் ஏற்பட்ட மோதலில் 25 பேர் பலியாகியுள்ளனர். இதில் 200 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். நேற்று முன்தினம் பலியானோரின் இறுதிச் சடங்குகள் கெய்ரோ வில் நடந்தன. அதில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு, ராணுவத்துக்கு எதிராகக் கோஷ மிட்டதுடன் ராணுவ ஆட்சித் தலை வர் முகமது உசேன் டண்டாவிபதவி விலகக்கோரியும் வலியுறுத்தினர்.

# இஸ்ரேலும் ஹமாஸ் இயக்கமும் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கு இணக்கம்

இஸ்ரேலும் பலஸ்தீனக் ஹமாஸ் இயக்கமும் தமக்கு இடையில் பரஸ்பரம் கைதிகளைப் பரிமாற்றிக்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

நீண்டகாலப் பேச்சுக்களின் பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு குறிப்பிட்டுள்ளார். இதன் பிரகாரம் ஹமாஸ் இயக்கத்தினரால் கடத்தப்பட்டுள்ள இஸ்ரேல் இராணுவ வீரரான கில்லார்ட் சலிட் விடுவிக்கப்படவுள்ளார்.

இதற்குப் பதிலாக இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான பலஸ்தீனப் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

# பிரிட்டனில் நீதிபதியான முதல் சீக்கியர்

லண்டன் ஒக்.13

பிரிட்டன் உயர் நீதிமன்றில் முதன்முறையாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வழக்கறிஞரான சீக்கியர் ஒருவர் நீதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.


இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரபீந்தர் சிங் (வயது-47) என்பவர் லண்டனில் உள்ள 'ரோயல் கோட்' வளாகத்தில் இயங்கிவரும் உயர் நீதிமன்றின் நீதிபதியாக நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்தவர். , 2007இல் இந்திய மருத்துவர்களின் குடியேற்ற உரிமை தொடர்பான வழக்கில் சிறப்பாக வாதாடியவர்.

அதுமட்டுமன்றிகடந்த 22 ஆண்டுகளாகப் பிரிட்டனில் வழக்கறிஞராகப் பணியாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது நியமனம் குறித்து அளித்த பேட்டியில்,''எனது பணி மூலம் நான் ஒரு சிறந்த முன்னு தாரணமாக இருக்க முயல்வேன் எனத் தெரிவித்தார்.

# 68 லீற்றர் இரத்தத்தை தானம் வழங்கிய பிரிட்டிஷ் பெண்மணி!



கிறின் டொறத்தி மன்லி என்ற பெண் அவரது 55 வருட காலப் பகுதிக்குள் 68 லீற்றர் இரத்தத்தை தானமாக வழங்கியுள்ளார்.

இப்பொழுது 73 வயது ஆகி யுள்ள குறித்த பெண் தனது அரிய வகை இரத்தமான ஓ பிரிவு இரத்தத்தை தனது 18 ஆவது வயதிலிருந்து வழங்கி வந்துள்ளார்.

அவர் வழங்கிய இரத்தமானது 840 குழந்தைகள் மற்றும் 360 பெரியவர்களின் உயிர்களைக் காப்பற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இரத்தம் வழங்கிய குறித்த பெண் கருத்துத் தெரிவிக்கையில்; நான் எந்த வித நோயையும் கொண்டிருக்கவில்லை. என்னுடைய தோல்கள் பளபளப்பாகவே காணப்படுகின்றன. ஏராளமான உயிர்களைக் காப்பாற்றியதில் மகிழ்ச்சியடைகிறேன். உளமார திருப்தியாகவும் உணர்கிறேன்- என்றார்.

# சோமாலிய கொள்ளையரால் கடத்தப்பட்ட கப்பல் மீட்பு

லண்டன்,ஒக்.13

லிவர் பூலில் இருந்து வியட்நாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இத்தாலிய சரக்கு கப்பலை சோமாலிய கொள்ளையர்கள் சிறைபிடித்திருந்தனர். கடத்தப்பட்ட இந்தக் கப்பலை இங்கிலாந்து சிறப்பு படைப் பிரிவு அதிரடியாக நடவடிக்கை எடுத்து மீட்டதுடன் கொள்ளையர்கள் பிடியிலிருந்த அனைத்து மாலுமிகளையும் விடுவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

## தேசிய மட்டத்துக்குத் தகுதி பெற்ற மானி.இந்து

வலி. வடக்கு, ஒக். 13
மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய மட்டப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சளைக்காது ஒர் அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டமை பார்வையாளர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

முதல்பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு கிடைத்த ஒரு மூலை உதையை மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரன் ஜீவராஜ் உரிய முறையில் உதைத்து நேரடியாக ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் போட்டி சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இடம்பெற்றது. இரு அணிகளும் மோதிக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து புது வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டன.

ஆனாலும் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

இந்த நிலையில் போட்டி முடிவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கும் நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இடது முன்னணி வீரன் வாசீசன் தனக்குக் கிடைத்த பந்தை உரிய முறையில் முன்நகர்த்தி ஒரு கோலை பெற்றுக் கொண்டதன் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றியை உறுதிப்படுத்தியது.

இருந்த போதிலும் இறுதி வரை சென். ஹென்றீஸ் கல்லூரி தனது கோல் பெறும் முயற்சியை கைவிடாது போராடியமை பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. (ம-86)

# 49 ஓட்டங்களால் வென்றது ஒற்றுமை விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், ஒக்.13
வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு நடைபெறும் 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநாவலூர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி 19 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. ரமேஸ் 60 ஓட்டங்களையும் ஜீவன் 30 ஓட்டங்களையும் சுஜீவன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநாவலூர் விளையாட்டுக்கழக அணி சார்பாகப் பார்த்தீபன், 4 விக்கெட்டுக்களையும் தரணன், கபிலன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநாவலூர் விளையாட்டுக்கழக அணியினர் 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ஜெயகோபன் 37 ஓட்டங்களையும் கபிலன் 30 ஓட்டங்களையும் தரணன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி சார்பாக சுஜீவகன் 5 விக்கெட்டுக்களையும் சஜீவன் 2 விக்கெட்டுக்களையும் ரமேஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (ம-23)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண வலைப்பந்தாட்டத்துக்கு ஏற்பாடு

வலி. வடக்கு, ஒக். 13
யாழ். செயலக நலன்புரி சங்கம் யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக முதல் தடவையாக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே வலைபந்தாட்டப் போட்டிகளை நடத்துகின்றது.

இந்த வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை வலைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் செயலக அணி, சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி, கோப்பாய் பிரதேச செயலக அணி, தெல்லிப்பழை பிரதேச செயலக அணி, சாவகச்சேரிப் பிரதேச செயலக அணிகள் மோதிக் கொள்ளவுள்ளன. (ம-86)

# இளவாலை ஹென்றீஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். ரோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான ஆட்டத்தில் இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குருநகர் சென். ரோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றன.

சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்ற தால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணம் சென்றலைட்ஸ் சொக்ஸ் வசமானது



அமரர் பொன். விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வசமானது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட வீரனும் மாணவ முதல்வருமான அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஒருநாள் மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மின் ஒளியில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 28:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இன்டுலீக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் பெற்றது.. இதில் இன்டு லீக்ஸ் அணி 24:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. இறுதியாட்டத்தில் தொடர் நாயகனாக சென்றலைட்ஸ்சொக்ஸ் விளையாட்டுக் கழக பிரசாந்மன் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் கலந்து கொண்டார். (ம-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.13
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் சர்வதேச லயன்ஸ் கழகம் 306 பி I இன் ஆதரவுடன் யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது.

ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு:

சென்றலைட்ஸ்புளூஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி.

(ம-23)

# தடைதாண்டலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற திருமலை மாணவன் கௌரவிப்பு



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் திருகோணமலை இராமகிருஷ்ணசங்கம் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் றூமி வொசிம் இல்ஹாம் 21 வயதுக்குட்பட்ட 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவரை கௌரவிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது, பாடசாலை அதிபர் இ.புவனேந்திரன் குறித்த மாணவனுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர் ஆர்.கைலைவாசன் நினைவுப் பரிசை வழங்கினார்.

கடந்த 2000ஆம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் ஆர்.கிசான்ரங்கா குண்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 2002 ஆம் வருடம் ஜி.நிரஞ்சன் 19 வயது பிரிவில் 200 மீற்றர் போட்டியில் தங்கப் பதக் கத்தையும், 100 மீற்றர் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பிறிமியர் லீக் உதைபந்தில் வென்ற திருமலை ஒலிம்பிக்

யாழ்ப்பாணம், ஒக்.13
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு III இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டக்களப்பு ஏறாவூர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ம- 23)

# தாச்சிப் போட்டி

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக் குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு கைதடி வளர்மதி வி.க. 'ஏ' அணியை எதிர்த்து மறவன்புலவு அம்பிகை வி.க. 'ஏ' அணி மோதுகின்றது. (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு மூன்று

தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டிகளில் உயிர்காக்கும் போட்டியில் இலங்கை சார்பில் பங்கு பற்றிய ஷான் ரூபசிங்க மற்றும் அக்கில வட்டரேக்கா ஆகியோர் இலங்கைக்கு முறையே இரண்டாம் மற்றும் மூன்றாவது தங்கப் பதக்கங்களை வென்று கொடுத்துள்ளனர். (15)

# பங்களாதேஷ் வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரேயொரு இருபது பந்து பரிமாற்ற ஆட்டத்தில் 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது பங்களாதேஷ்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி பந்துவீச்சை தீர்மானித்தது. முதலில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பரத்தும், சிம்மன்ஸ் ஆமை வேகத்தில் ஆடினர்.

பரத் 20 பந்துகளில் 15 ஓட்டங்களும், சிம்மன்ஸ் 24 பந்துகளில் 23 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். பின்னர் வந்தவர்களில் சாமுவேல்ஸ் நீங்கலாக அனைவரும் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். தனி நபராகப் போராடிய சாமுவேல்ஸ் 42 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்களுடன் 58 ஓட்டங்கள் சேர்த்து 7 ஆவது இலக்காக வெளியேறினார்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயம் செய்யப்பட்ட 20 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகள் இழப்புக்கு 132 ஓட்டங்கள் சேர்த்தது. பங்களாதேஷ் தரப்பில் ரசாக், ஷபியுல் இஸ்லாம், ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 இலக்குகள் வீழ்த்தினர்.

பின்னர் ஆடிய பங்களாதேஷ் அணியில் இக்பால் 11, இம்ரு கெய்ல்ஸ் 22, அஷ்ரபுல் 24 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர். பின்வரிசையில் அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம் அதிரடியாக விளையாடினார். கடைசி 2 பந்துகளில் பங்களாதேஷ் வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இருபதாவது பந்து பரிமாற்றத்தின் 5 ஆவது பந்தை எதிர்கொண்ட முஷ்பிகுர் ஆறு ஓட்டம் அதிரடியாய் அடிக்க பங்களாதேஷ் 7 இலக்குகள் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ராம்போல், சாமுவேல்ஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

26 பந்துகளைச் சந்தித்த முஷ்பிகுர் ரஹிம் 2 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்கள் எடுத்து, வெற்றிக்கு உதவியதால் அவர் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த இரு அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் இன்று தொடங்குகிறது. (15)

# சூதாட்டமா?

## ஆச்சரியமா இருக்கே!

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சல்மான்பட், முகமது ஆசிப், முகமது அமீர் ஆகியோர் 'ஸ்பாட்பிக்சிங்' எனும் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக ஐ.சி.சி தடை விதித்தது.

இவர்கள் மீதான விசாரணை லண்டன் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்த விசாரணையின் போது பல்வேறு புதிய தகவல்கள் தினசரி வெளியாகி வருகிறன.

சூதாட்டத் தரகர் மசார் மஜித் பல அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளார். இந்திய வீரர்கள் யுவராஜ்சிங், ஹர்பஜன்சிங் ஆகியோருடன் தனக்கு தொடர்பு இருப்பதாக அவர் தெரிவித்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இருவரும் இதை மறுத்து இருந்தனர். மஜித் யார் என்றே தங்களுக்கு தெரியாது என்றனர். ஆஸ்திரேலிய வீரர்கள் தான் உலகின் மிகப்பெரிய சூதாட்டக்காரர்கள் என்று சூதாட்டதரகர் மஜித் கூறிய இருந்தார். மஜித்தின் இந்த குற்றச்சாட்டை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை மறுத்து இருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பாக வொட்சன் கூறியதாவது:

ஆஸ்திரேலிய வீரர்கள் மீது சூதாட்ட புகார் கூறப்பட்டு இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இதனால் கிரிக்கெட் போட்டியின் மரியாதை பாதிக்கப்படும். ஆஸ்திரேலிய கிரிக்கெட்டை இது பெரிதும் பாதிக்கும் - என்றார்.

# சானியா 88



ரெனிஸ் தரவரிசைப் பட்டியலில், இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா 88 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். ரெனிஸ் அரங்கில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை, டபிள்யு.டி.ஏ. நேற்று வெளியிட்டது. சமீபத்தில் முழங்கால் காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்து கொண்ட சானியா, ஒற்றையர் பிரிவில் 88 ஆவது இடத்தில் நீடிக்கிறார். இவர், இரட்டையர் பிரிவில் 11 ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். அணிகளுக்கு இடையிலான தரவரிசையில் சானியா-எலினா வெஸ்னினா (ரஷ்யா) ஜோடி 6 ஆவது இடத்தில் உள்ளது. காயம் காரணமாக சானியா போட்டிகளில் பங்கேற்காததால், ஆண்டு இறுதியில் நடக்கும் உலக சாம்பியன் தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆண்களுக்கான ஏ.டி.பி. தரவரிசையில், இளம் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், ஒற்றையர் பிரிவில் ஒரு இடம் முன்னேறி 84 ஆவது இடத்தில் உள்ளார். இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி (6 ஆவது இடம்), லியாண்டர் பயஸ் (8 ஆவது இடம்), தங்களது இடத்தை தக்கவைத்துக் கொண்டனர். மற்றொரு இந்திய வீரர் ரோகன் போபண்ணா, 15 ஆவது இடத்தில் இருந்து 16 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். அணிகளுக்கு இடையிலான தரவரிசையில், பயஸ்-பூபதி ஜோடி 4 ஆவது இடத்திலும், போபண்ணா-குரேஷி (பாகிஸ்தான்) ஜோடி 7 ஆவது இடத்திலும் உள்ளன. (15)

# இங்கேயுமா?

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. 2 பயிற்சி ஆட்டங்களிலும் அந்த அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

தொடர்ந்து 5 ஒரு நாள் ஆட்டம், ஒரு 'ரி-20' இந்தியாவை எதிர்த்து ஆடுகிறது. இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஸ்வான் எழுதிய சுயசரிதை புத்தகத்தில் நட்சத்திர வீரரான பீற்றர்சனைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பீற்றர்சன் சிறந்த துடுப்பாட்டக்காரர். அதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அவரை அணித்தலைவராக தேர்வு செய்தது மிகப்பெரிய தவறு.

அணித்தலைவர் பதவிக்கு உண்டான தகுதி அவரிடம் கிடையாது என்று கூறியுள்ளார். இது தற்போது அணியில் வீரர்களிடையே வீரிசலை உருவாக்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஆபரணம் இம்மனுவல் மேரி யோசப் (இராசநாயகம்)

*(ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்)*



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அடப்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட A.E.M யோசப் நேற்று (12.10.2011) புதன்கிழமை விண்ணுலகு எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபரணம்-சலோமைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை- இராசமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், விக்ரோறியா(ராணி)யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வண.பிதா.சிங்கராயர் அ.ம.தி.,அருட்சகோதரி திறிணந்தி, (தி.கு.க.சபை) ஞானப்பிரகாசம், அலேசுப்பிள்ளை, யோவான்பிள்ளை, புளோமினா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மரியயூலியானா, மரியத்திரேஸ் மற்றும் அஞ்சலோ, றொங்கலி(கனடா), மேரி பெல்சியா, மேரிபெளசியா, மேரி கிறிஸ்ரீனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.10.2011) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.10, அடப்பன் வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# அறிவித்தல்

**பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் - வேலணை**

*மேற்படி கோயிலின் விஷேட பொதுக்கூட்டம் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும். எனவே தொடர்புடைய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலாளர்,
தீவுகள் தெற்கு, வேலணை.

13.10.2011

## சிரேஷ்ட.....

அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் இந்தக் கலந்துரையாடல்நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் முக்கியமானபல விடயங்கள் விரிவாகஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக கட்சிக்குள் இருக்கும் சிரேஷ்ட அங்கத்தவர்கள்ஓரங்கட்டப்பட்டிருப்பது குறித்து இங்கு பல அமைச்சர்மார்கூடும்அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக தெரிகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புமுக்கியமான சில முடிவுகளைஎடுக்கும் தருணத்தில் சிரேஷ்ட அமைச்சர்களின் ஆலோசனைகளைப் புறக்கணிப்பதாக வும், அவர்களின்அரசியல்நடவடிக்கைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படாதமையாலும் அவர்கள் அதிருப்தியடைந்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிய வந்திருப்பதாகவும் அறியமுடிகிறது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு
அ.அகிலதாஸ்



திருமதி
சு.திருச்செல்வம்



செல்வி
பு.கந்தசாமி

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் சிறந்த அதிபராக "பிரதீபா பிரபா" விருதைப் பெற்ற எமது கல்லூரி அதிபர் திரு.அ.அகிலதாஸ் அவர்களையும் சிறந்த ஆசிரியராக "பிரதீபா பிரபா" விருதைப் பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்களான திருமதி சு.திருச்செல்வம் அவர்களையும் செல்வி ப.கந்தசாமி அவர்களையும் பரிசுத்தினமாகிய இன்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,* கொக்குவில் இந்துக் கல்லூரி.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
*
05
*
1974



மறைவு
25
*
09
*
2010

திதி - [13.10.2011]

## அமரர் துரைசிங்கம் விஜயமனோகர் – BBA

அபிவிருத்தி உதவியாளர், மாவட்ட திட்டமிடல் செயலகம், கிளிநொச்சி

*அன்பாலும் பண்பாலும் அனைவரையும்*
*கவர்ந்திட்ட அன்பு மனோவே*
*உன்னுள்ளே புதைத்து வைத்த இன்பத்தை*
*எல்லோருக்கும் விதைத்தவனே*
*சத்தியத்தின் உறைவிடமாய்*
*சகலருக்கும் நிறைகுடமாய்*
*வாழ்ந்து காட்டிய அருமைச் சோதரனே*
*ஒரு வருடம் ஓடி மறைந்து விட்டது*
*உன் நினைவுகள் என்றும்*
*எம்மை விட்டு அகலாது*

அன்னாரின் ஆண்டு திதி நிகழ்வு பாடசாலை வீதி, ஆழியவளையிலுள்ள எமது இல்லத்தில் இன்று (13.10.2011) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், சக உத்தியோகத்தர்கள் ஆகியோரை அன்புடன் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உன் நினைவால் வாடும் தந்தை, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.

பாடசாலை வீதி,
ஆழியவளை.

த.துரைசிங்கம் (தந்தை)
தொ.பே. 0775080872

# பாராட்டி வாழ்த்துகின்றோம்









P. நவஜீதா T. விமல் R. ராஜபுவினீதன் T. தனரஞ்சன்

*யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 27ஆவது பட்டமளிப்பு விழாவில் எம்முடன் ஒன்றாகப் படித்து B.Com பொதுப்பட்டம் பெற்றதனையிட்டு இவர்களை வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

*வாழ்த்துவோர்:* இறுதிவருட வணிகத்துறை நண்பர்கள்.

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



06.10.2011 அன்று அலரிமாளிகையில் நடைபெற்ற விருது விழாவில் கல்வி அமைச்சின் உயரிய விருதான " ஆசிரியர் பிரதீபா பிரபா -2011 விருதை மேன்மை தாங்கிய ஜனாதிபதி அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது வித்தியாலயத்தின் பழைய மாணவரும் அதிபருமான

மதிப்புக்குரிய

## சவிரி பூலோகராஜா

**B.A.(Hons) Dip.in. Edu. SLPS-2II**

அவர்களை உளமார வாழ்த்துவதோடு இந்த விருதைப் பெற்ற வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை

திருமதி

## செல்வநாயகி இராஜரட்ணம்

**B.A.(Hons) Dip.in. Edu. SLTS-2I**

அவர்களையும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

*" கற்ற முற்றத்தை வான் உயர வைத்தவரே*
*உற்ற நேரத்தில் உம் சேவை தொடர*
*நேற்று நல் மாணவராய் நல் ஆசிரியராய்*
*நற்றமிழ் வடகுலத்தின் நல் அதிபராய்*
*சேவையின் சிகரத்தை தொட்டவரே*
*நாளை உம் புகழ் சொல்லும்*
*தருமபுர தாயின் மாணவ சமூகம்."*

பழைய மாணவர் சங்கம்
கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்.

# வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்

## பாடசாலை வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இக்ராட் (ICTAD) இல் பதிவு செய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : **13.10.2011 முதல் 19.10.2011 நண்பகல் 12.00 மணிவரை**
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 20.10.2011 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 20.10.2011 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினை பெறுதல் வேண்டும்.
06. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை,பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இவ் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப்பணம், மீளளிக்கப்படாத வைப்புப்பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
08. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து இந்த வருட இறுதி காலத்துக்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கைய ளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | திட்டம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|---|
| 01. | யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் - இருமாடிக் கட்டடம் 90'x25' அளவுள்ள 3 அலகு கொண்ட க.பொ.த. (சா/த) விஞ்ஞான ஆய்வுக்கூடம் நிர்மாணம் - கட்டம் - 1 | 1000.00 | PSDG | 46000.00 | M7/C8 |

பாடசாலை வேலைப்பகுதி,
வலிகாமம் வலயம்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப் பணிமனை, வலிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையைப் பெறுவதற்கு 27 ஆசனங்களைக் கைப்பற்றவேண்டும். இந்த அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னும் மூன்று ஆசனங்கள் தேவை.

இந்நிலையில், கொழும்பு மாநகரசபை ஆட்சியைச் சீராக முன்னெடுப்பதற்குக் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஆறு ஆசனங்களைக் கைப்பற்றிய ஜனநாயக மக்கள் முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு நடத்தியது எனத் தெரிவிக்கப்பட்டது.

நிபந்தனைகள் எதுவுமின்றி ஆதரவு வழங்கமுடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைமைப்பீடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத் துக்கு உறுதியாகக் கூறியது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிபந்தனைகள் உள்ளடங்கிய அறிக்கையை ஜனநாயக மக்கள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியிடம் கையளித்தது என்றும், அதனை ஏற்க ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துவிட்டது என்றும் தெரியவந்தது.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியே ஜனநாயக மக்கள் முன்னணியின் நிபந்தனையாக இருந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தததையடுத்தே ஐ.தே.க. தலைமைப்பீடம் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள் ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக கேட்டபோதே ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு மாநகரசபையில் சுயாதீனமாக இயங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். கொழும்பு மாநகர சபையில் மட்டுமல்ல, தெஹிவளை - கல்கிஸை பிரதேச சபைகளிலும் நாம் தனித்தே இயங்குவோம்.

கொழும்பு மாநகரசபை ஆட்சியில் ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியே ஆகவேண்டும் என்ற எந்தவித தேவைப்பாடும் எமக்கில்லை.

எனினும், எதிர்காலத்தில் தோட்டப்புறங்களிலுள்ள வீடுகள் உடைக்கப்படும் நிலைமை அல்லது ஏதோ வகையில் பாதிப்புக்குள்ளாகும் நிலைமை, தெரிவு செய்யப்பட்ட கொழும்பு மாநகரசபை நிர்வாகத்துக்கு அச்சுறுத்தல் என்பன ஏற்படுமானால், ஜனநாயக மக்கள் முன்னணி இவற்றுக்கு எதிராக மாநகரசபையின் ஆளும் தரப்புக்குத் தார்மீக ஆதரவை வழங்கவேண்டிய கடமைப்பாடு ஏற்படும்.

தேசியப் பட்டியல் விவகாரம் ஒன்றும் புதிதல்ல, பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி எமக்கு உறுதியளித்ததொன்றாகும். அதனையே நாம் மீண்டும் ஞாபகப்படுத்தியுள்ளோம்.

மக்கள் விருப்புக்கு மாறாக தலைவர் மனோ கணேசனினதோ அல்லது ஜனநாயக மக்கள் முன்னணியினதோ செயற்பாடுகள் அமையா என்பதை மக்களுக்கு இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார். (த-சி)

## நீதியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிய தகவல்களை 'விக்கி லீக்ஸ்' வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடக்கும் ஆட்சியில் பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், கல்வி மற்றும் சர்வதேச உறவுகள் முன்னொருபோதுமில்லாத வகையில் பலவீனமடைந்திருக்கின்றன என அமெரிக்கத் தூதுவரிடம் சுட்டிக்காட்டிய சந்திரிகா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொன்சேகாவின் அரசியல் பிரவேசம் பற்றி தாம் ஆச்சரியப்பட்டார் எனவும், நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடத்தினால், பொன்சேகா நிச்சயம் வெல்வாரென்றும் குறிப் பிட்டுள்ள சந்திரிகா, பொன்சேகா தீவிர பௌத்த பின்னணியைக் கொண்டிருப்பதால் அவர் ராஜபக்ஷவை விட நேர்மையானவர், கொடுக்கும் வாக்குறுதிகளை மீறவும் மாட்டாரென சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் மனோநிலையும், சிந்தனையும் வெகுவாக மாறிவருகின்றன என்பதை விரிவாக எடுத்துக்கூறிய குமாரதுங்க, அரசியலில் இருந்து முற்றாக தாம் விலகிக்கொண்டபோதிலும் அரசியலில் தனது மீள்பிரவேசம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் என்பதால் தனது நடமாட்டங்களை ராஜபக்ஷ மட்டுப்படுத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## கூட்டணியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரிலும் ஆனந்தசங்கரிக்கு அறிவித்திருந்தேன். அதனையும் மீறி ஓகஸ்ட் 25ஆம் திகதி அவர் நல்லூரில் மாநாட்டைக் கூட்டி புதிய நிர்வாக சபையையும் தெரிவு செய்துள்ளார். இது செல்லுபடியற்றது. இதனை ஏற்க முடியாது. பொதுச் செயலாளராகிய என்னால் கூட்டப்படாத இந்த மாநாடு சட்டரீதியற்றது. எனவே இந்த மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் புதிய நிர்வாகத்தை தேர்தல்கள் திணைக்களம் ஏற்றுக்கொள்ளக்கூடாது'' - என்று தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் இந்தக் குற்றச்சாட்டுக்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி மறுத்துள்ளார்.

''நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு 24 மணிநேரத்துக்குள் அதனை மீறிச் சென்றவர் சம்பந்தன். நீதிமன்ற உத்தரவுக்கு மாறாக விடுதலைப் புலிகளைத் தலைவராக ஏற்றுச் செயற்பட்டவர். அப்படியிருக்கையில் கட்சியின் பொதுச் செயலாளர் என்று உரிமைகோர அவருக்கு அதிகாரம் எதுவும் இல்லை. கடந்த மூன்று தேர்தல்களில் அவரைக் கேட்காமல்தான் கட்சி போட்டியிட்டது. அவர் இல்லாமல்தான் கட்சி இயங்குகிறது. கட்சியின் மாநாட்டை நிறுத்தக் கோரி இரு தடவைகள் கடிதங்கள் அனுப்பினார். ஆனால், நான் அவற்றைக் கவனத்தில் எடுக்கவில்லை. முடிந்தால் அவர் சட்ட நடவடிக்கையை எடுத்துப் பார்க்கட்டும்'' - என்றார் ஆனந்தசங்கரி.

(உ)

## துமிந்தவே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னகே சமன் சாந்த பெரேரா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் என கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி அல்விஸ் முன்னிலையில் நேற்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லேரியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுச் கொழும்பு நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் எனக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் மெய்ப்பாதுகாவலரை இந்த மாதம் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று பணித்துள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் அநுர துஷார டிமெல் சம்பவம் நடந்த வேளையில் துமிந்த சில்வாவின் மெய்ப்பாதுகாவலராகக் கடமையாற்றியவரென கொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திராவின் சாரதி லியனகே சமன் சாந்த பெரேரா அடையாளம் காட்டினார். அங்கொடை சந்தியை நோக்கிப் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் வாகனத்தை, தான் செலுத்திச் சென்றார் எனவும் வேறு இரண்டு வாகனங்கள் தம்மைத் தொடர்ந்து வந்தன எனவும் சாரதி கூறினார்.

எதிரே வந்த கார்களின் தொடரணி ஒன்று தம்மை வழிமறித்தது எனவும் அவர் கூறினார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர வாகனத்தை விட்டு இறங்க துமிந்த சில்வாவும் தனது வாகனத்தை விட்டு இறங்கினார் என்றும், இருவருக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்து துமிந்த சில்வா பாரதவின் முகத்தில் அடிக்க அவர் கீழே விழுந்தார் எனவும் சாரதி தெரிவித்தார்.

கீழே விழுந்த பாரதவை துமிந்த சில்வா தனது கைத்துப்பாக்கியால் தலையில் சுட்டுவிட்டு லக்ஷ்மனைச் சுடுமாறு சத்தமிட்டார் என்றும் சாரதி கூறினார்.

இதைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர், பாரதவை ரி - 56 ரக றைபிளினால் சுட்டார் என்றும் சாரதி குறிப்பிட்டார்.

நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தபோது சந்தேக நபருக்கு வழங்கப்பட்ட ரி - 56 ரக றைபிளையும் பயன்படுத்தப்பட்ட சில குண்டுகளையும் தாம் கைப்பற்றியுள்ளனர் என புலன் விசாரணைப் பொலிஸார் நீதிமன்றில் கூறினர்.

இதையடுத்து நீதிவான் பிரசன்ன டி அல்விஸ், சந்தேக நபரை இந்த மாதம் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அதே தினம் சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்கு கொண்டுவர வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (த-சி)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி புஸ்பராஜா வரதலட்சுமி

**இலங்கை வங்கி 2ஆம் கிளை யாழ்ப்பாணத்தில் எங்களுடன் கடமையாற்றும் திருமதி தி. மெஜிதாவின் அன்புத்தாயின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

இலங்கை வங்கி- 2,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

முகாமையாளரும், ஊழியரும்

## மரண அறிவித்தல்

### நாகமணி சிறிகாந்தன் (சிந்தாமணி)

விக்கினேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், 118/1, விசுவமடு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சிறிகாந்தன் (சிந்தாமணி) நேற்று (12.10.2011) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற அருள்நந்தி மற்றும் குணரத்தினம், யோகாம்பாள் ஆகியோரின் சகோதரரும், சிவபாதம், ஜெயமாலா, நித்தியநந்தம், ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும், சிறிதேவி, சிறிரதி(ஆசிரியை, வவுனியா திருச்சபை தமிழ் மகா வித்தியாலயம்), சிறிறஞ்சினி(ஆசிரியை, கிளி/ தர்மபுரம் மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், அரவிந்தன் (குயிலன் வானி போக்குவரத்துச் சேவை), வசந்தகுமார்(பிரதித் திட்டப்பணிப்பாளர், நிகோட், கிளிநொச்சி), பிரபாகரன் (பிரதேச செயலகம், கரைச்சி) ஆகியோரின் மாமனும், சரவஞ்யா, கிருத்திகா, சவிகேசன், தரஞ்சினி, தயாளன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2011) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

118/1, அன்னையகம்,
விசுவமடு மேற்கு, விசுவமடு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு கனகசபை மதியழகன் (திலகன்)



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கனகசபை மதியழகன் கடந்த (03.10.2011) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும் கோசலாவின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி, சண்முகராசா, கனகசபாவதி (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன் (புஸ்பரா), சிறிகந்தலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மாணிக்கவா சகர், ஜெயபாலேஸ், காலஞ்சென்ற லலிதாதேவி ஆகியோரின் மைத்துனரும், சுதாகர் (பொற்பரிதி நகைமாடம், மல்லாவி), தற்சுதன், கஜேந்த் மனோசங்கர் ஆகியோரின் மாமனும் வரதராஜன், உதயராஜன், தவபாலினி, தவராஜன், விமலராஜன், காலஞ்சென்றவர்களான பிரதீபன், தர்சினி ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரி இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2011) வியாழக்கிழமை ஜேர்மனியில நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### முத்துராசா ஸ்ரீகாந்தன் (பாபு)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா ஸ்ரீகாந்தன் கடந்த (11.10.2011) செவ் வாய்க்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துராசா - சித்திரா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சந்தியாவின் பாசமிகு கணவரும், விஜய், விவேக் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாலினியின் அன்பு மாமாவும் சிவநாதன், ஜீவசோதி, சாந்தி (கனடா), ஜெயந்தி (சுவிஸ்), இராஜேந்தி (கனடா), கிரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயமலர், காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் நடராசா (கனடா), சிவராசா (சுவிஸ்), ஜெயச்சந்திரன் (கனடா), மாலா (கனடா), உஷா, ஜனனி, றஞ்சனி, திலீபன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடா, 467, Sher Bourne St. Rosar Morrison Funeral Home இல் வைக்கப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி,
கைதடி.

தகவல்:
கோ. ஜீவசோதி (சகோதரி)

### திருமதி இராமலிங்கம் திரவியம்



நல்லூர், சட்டநாதர் வீதியைச் சேர்ந்த திருமதி இராமலிங்கம் திரவியம் நேற்று (12.10.2011) புதன்கிழமை ஆஸ்திரேலியா சிட்னி நகரில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

78, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

தகவல்:
தெய்வேந்திரம் பகீரதன்
(பேரன் - C.S.K. மருந்துக்கடை)
கல்வியங்காடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சபை யாழ். ஊழியர்கள் இன்று வழமைபோல் கடமையில் ஈடுபடுவர்

## புறக்கணிப்பை அவர்கள் கைவிட்டனர்

யாழ்ப்பாணம், ஒக்.13

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய யாழ். சாலை ஊழியர்கள் இன்று வியாழக்கிழமை மேற்கொள்ள இருந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தமது மாதாந்தக் கொடுப்பனவை உரிய நேரத்தில் வழங்குமாறு கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள இருந்தனர்.

இந்தப் போராட்டம் குறித்து அறிந்து கொண்ட தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் உடனடியாக இதில் தலையிட்டு சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடியதாக வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இதில் ஓர் சுமூகமான முடிவு எட்டப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக கூட்டம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை கோண்டாவில் டிப்போவில் இடம்பெற்றது.

பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் கே.கேதீசன், தொழில் திணைக்கள யாழ். உதவி ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன், மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலக இணைப்பதிகாரி வி. கனகராஜ் மற்றும் போக்குவரத்து சபையின் தொழில் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சபை ஊழியர்களின் சம்பளக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைஉடன்வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை உரிய முறைப்படி தீர்க்கப்பட்டுள்ளமையால் அவர்கள் இன்று வியாழக்கிழமை மேற்கொள்ள இருந்த பணிப் புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்றும் பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவித்தார். (த-4-26)

# வங்கி அதிகாரி தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக். 13

இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட நிலையில் வங்கி அதிகாரி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.10 மணியளவில் வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.தேவகுமாரன் (வயது 55) என்பவர் கையில் காயமடைந்துள்ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்றுக் காலை வழக்கம்போல வங்கிக்கு புறப்படத்தயாரா... வேளை வீட்டுத் தொலைபேசிக்கு அனாமதேய அழைப்பொன்று வந்துள்ளது. அதில் 'உன்னை விசாரிக்க வருவோம். வீட்டில் நில்' என்று குறிப்பிடப்பட்டதாகவும் இதற்கு தான் வேலைக்குச் செல்ல வேண்டும் நீங்கள் யார்? என்று வங்கி அதிகாரி கேட்க அழைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தொலைபேசிக்கு அடிக்கடி அழைப்பு வந்தவண்ணம் இருந்தது. ஆனால் அச்சம் காரணமாக வீட்டார் பதிலளிக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை பணிமுடித்து வீடு திரும்பிய வேளை நாச்சிமார் கோயில் பகுதியில் இருந்து பின் தொடர்ந்த நபர்கள் இருவர் இவரை இளையதம்பி வித்தியாலயத்துக்கு சமீபமாக வைத்து கட்டையால் தாக்கிவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-10)

## மாலைதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ உயர் அதிகாரிகளின் பாதுகாப்பில் வந்திருந்த இந்தக் குழுவினரை இராணுவத்தினர் ஒவ்வொரு இடங்களுக்கும் அழைத்துச் சென்றிருந்தனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்.பொது நூலகம், குருநகர் சீநோர் ஆகிய இடங்களுக்கு இந்தக் குழுவினர் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

நேற்று நண்பகல் யாழ்.பொது நூலகத்தை வந்தடைந்த இந்தக் குழுவினரை யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ மலர்மாலை அணிவித்து வரவேற்றார். (த-4)

## போரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோடு போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் கதைத்து அவர்களுடைய விவரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது போர் இடம்பெற்ற காலத்தில் நீண்டதூர இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று கடைசியில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் சில சிறுவர்களுடைய தந்தையர்களை பாதுகாப்புப் பிரிவினர் விசாரணைக்காக அழைத்துக் சென்றுள்ளனர்.

போரின்போது தாய், தந்தையரைப் பறிகொடுத்த சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். பெண்கள் சிலர் கணவர் இல்லாத காரணத்தினால் பிள்ளையை வளர்க்க முடியாது சிறுவர் இல்லங்களில் விட்டுள்ளனர்,

இவ்வாறான காரணங்களினாலேயே குறித்த சிறுவர்கள் இந்த இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அதிகாரிகள் சிறுவர்களோடு உரையாடியபோது-

சிலர் தாங்கள் பெற்றோருடன் சேர்ந்து வாழ ஆசைப்படுவதாக உருக்கமாகத் தெரிவித்தனர். பெற்றோரை இழந்த சிறுவர்கள் தாங்கள் இந்த இல்லங்களிலேயே தொடர்ந்தும் இருப்போம்; வேறு எங்களுக்கு வழியில்லை என்றனர்.

பெற்றோர் பூஸா முகாமிலும், தடுப்பு முகாம்களிலும் உள்ளனர். அதனால் நாங்கள் இங்கு த்ங்கி இருக்கின்றோம் என்று சிலர் கவலையுடன் கூறினர். கைது செய்யப்பட்டுள்ள தங்களின் பெற்றோரை விடுதலை செய்யுமாறும் அவர்கள் ஏக்கத்துடன் கேட்டுக் கொண்டனர்.

சிறுமி எம்.பிரிந்தா (வயது 11), தனது தந்தையான செல்லன் மகேந்திரன் என்பவர் பூஸா முகாமில் உள்ளதாகவும் அவரை மீட்டுத் தன்னுடன் சேர்த்து விடுங்கள் என்றும் கண்ணீர் மல்கக் கூறினார்.

மன்னாருக்கு வருகை தந்திருந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அதிகாரிகளான தசன் கர்சஜீத், டி.ஆர்.கெலி ஆகியோர் தெரிவிக்கையில்-

''எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பூசா தடுப்பு முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்த ஆணைக்குழு மேற்கொண்டுவருகின்றது. இதன் பின்னர் உங்கள் பெற்றோருடன் சந்தோசமாக வாழ முடியும்''-என்றனர். (ஒ-601)

## துமிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் துமிந்த சில்வாவின் உடல் நிலையில் முன்னேற்றமில்லையென்று தெரிகிறது. மூளையின் செயற்பாடுகள் செயற்கையாக இடம்பெறுவதாலும், துமிந்த இன்னும் மயக்கமடைந்த நிலையில் இருப்பதாலும், சரியான முடிவுக்கு வரமுடியாத நிலைமை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கின்றனர். இதேவேளை, துமிந்த சில்வா எம்.பியை பார்வையிட ஒரு சிலருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

வீடு வாடகைக்கு
யா/திருநெல்வேலிச் சந்தியிலிருந்து 300 m தூரத்தில் அடிப்படை வசதிகளுடன் மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0776059585,0714841069

# லியாம் பொக்ஸின் மூலம் பிரிட்டனிடம் ஆயுதம் வாங்க முயன்றதாம் இலங்கை!

## அம்பலப்படுத்தியது சனல்-4

பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸின் நண்பர் அடம் வெரிற்றியின் செல்வாக்கைப் பயன்படுத்தி பிரிட்டன் அரசிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதற்கு இலங்கை அரசு முயற்சித்தது என சனல்-4 தொலைக்காட்சி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி சனல்-4 தொலைக்காட்சி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக லியாம் பொக்ஸும், அவரது நண்பர் அடம் வெரிற்றியும் ஒவ்வொரு ஆண்டும் இலங்கைக்கு வந்து போனார்கள் எனவும், ஒவ்வொரு முறையும் வரும்போதும் லியாம் பொக்ஸ் வெரிற்றியை அழைத்து வந்தார் எனவும், லியாம்பொக்ஸின் விடுமுறைப் பயணத்தில் கூட அவர் இலங்கை வந்தார் எனவும் இலங்கை உயர் வட்டாரங்கள் சனல்-4 தொலைக்காட்சியிடம் கூறியுள்ளன.

இலங்கையில் போருக்குப் பிந்திய நல்லிணக்கத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தவே லியாம் பொக்ஸ் இலங்கை சென்றார் என அவரது பேச்சாளர் கூறியுள்ளார்.

ஆனால், அடெம் வெரிற்றி ஆயுத பேரம் தொடர்பாக இலங்கைக்குத் தொடர்ச்சியான பயணங்களை மேற்கொண்டார் எனவும், இலங்கை அரசின் செலவிலேயே அங்கு தங்கியிருந்தார் எனவும் இலங்கையின் மூன்று உயர்மட்ட வட்டாரங்கள் சனல் 4 தொலைக்காட்சியிடம் தெரிவித்துள்ளன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் உள்ள மூத்த பிரமுகருடன் கலந்துரையாடும் ஒருவராகவே வெரிற்றி செயற்பட்டுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இலங்கை அரசின் அந்த முக்கிய பிரமுகர், அடம் வெரிற்றியுடன் பிரிட்டன் அரசிடமிருந்து ஆயுதங்கள், பாதுகாப்புக் கருவிகள், விமான உதிரிப்பாகங்களைப் பெறுவது குறித்துக் கலந்துரையாடியுள்ளார் எனவும் இலங்கை உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் எப்போது நடந்தது என்று தமக்குத் தெரியாது என்றும் மற்றொரு உயர்மட்ட வட்டாரம் சனல்-4 தொலைக்காட்சியிடம் கூறியுள்ளது.

மற்றொரு உயர்மட்ட வட்டாரம், அடம் வெரிற்றி 2000ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வந்தார் எனக் கூறியுள்ளது.

அத்துடன், இலங்கை அரசுக்கு அனைத்துலக அளவில் நற்பெயரைத் தேடிக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டார் எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அனைத்துலக அளவில் இலங்கையின் பெயர் மோசமாக கெட்டுப்போயுள்ள நிலையில், மேற்கு நாடுகளில் உள்ள பொதுமக்கள் உறவு நிறுவனங்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் பெரும் தொகைப்பணத்தை வழங்கியுள்ளனர்.

இதுபற்றிய கலந்துரையாடல்களில் வெரிற்றி பங்கேற்றார் எனவும் தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என சனல்-4 கூறியுள்ளது.

பிந்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக சனல்-4 வெரிற்றியுடன் தொடர்புகொள்ள முயற்சி செய்தபோதும் அதற்குப் பதில் கிடைக்கவில்லை என்றும் சனல்-4 தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இலங்கை அரசுடன் எத்தகைய உறவு உள்ளது என்பது குறித்து பிரிட்டன் பாதுகாப்புச் செயலர் லியாம் பொக்ஸ் தெளிவுபடுத்தவேண்டும் என்று பிரிட்டன் நிழல் பாதுகாப்பு அமைச்சர் எம்மா றெனோல்ட்ஸ் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்
திங்கள், புதன், வெள்ளி பிரிவில் சேர 14.10.2011 வெள்ளிக்கிழமையும்
சனி, ஞாயிறு பிரிவில் சேர 15.10.2011 சனிக்கிழமையும் கடைசி நாளாகும்
காலம் : 1 - 3 மாதங்கள் கட்டணம் : 3000 மட்டும்
திங்கள்,புதன், வெள்ளி - 4 பிரிவுகள்
காலை 8-9.30, 9.30-11
மாலை 3-4.30, 4.30-6
சனி, ஞாயிறு - 4 பிரிவுகள்
காலை 8-10, 10-12
மாலை 2-4, 4-6
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

Quick Learning Course
Spoken English With Grammar
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935
No. 13A Annai Teresa Lane, Rambakulam, Vavuniya. Tel: 024 3245287
BCHS
புதிய வகுப்புக்கள் 17.10.2011 ஆரம்பம்
Batch I 09.00 a.m. - 12.00 p.m.
Batch II 12.00 p.m. - 03.00 p.m.
தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org